# மரியாளின் மகத்துவம்



அமதி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TJ 200/0512

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரியாளின் மகத்துவம்

ஆசிரியர்:

திருமதி அற்புதம் இராசநாயகம்
''அற்புத லொட்ஜ்''
உடுவில்,
சுன்னாகம்.

அமதி வெளியீடு 1.
1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாளின் மகத்துவம்
ஆசிரியர்: திருமதி அற்புதம் இராசநாயகம்
அ. ம. தி. வெளியீடு — 1
முதற் பதிப்பு: மார்கழி 1990
தொடர்பகம், மருத்துவ நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

---

அச்சேற்றுவதற்குத் தடையில்லை.

டே. வின்சன்ற் பற்றிக், அ. ம. தி.
26-06-1990

அச்சேற்றலாம்.

+ வ. தியோகுப்பிள்ளை
யாழ். ஆயர்
27-06-1990

ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்.

---

விலை: 20/-

மணி ஓசை அச்சகம்,
12, சென் பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

அருள்நிறை அன்னை மரியாளின் மகத்துவத்தினை மிகவும் சிறப்பான முறையில் விவிலிய ஆதாரங்களோடு தெளிவுபடுத்தும் நூலாக அமைகின்றது **மரியாளின் மகத்துவம்**. அனைத்துப் பெண்களுக்குள்ளும் ஆசீர்வதிக்கப்பட்டவளாகி அன்னை மரியாள் தேர்ந்தெடுக்கப்பட்டு இறைமகன் கிறீஸ்துவின் அன்னையாக, இறை மக்களின் அன்னையாக நிறைவான வாழ்க்கையை அவள் வாழ்ந்து காட்டினாள் என்பதை நுணுக்கமாகவும் விபரமாகவும் இனிய தமிழில் வர்ணிக்கின்றது இந்நூல்.

அல்லற்பட்டு, அவதிப்பட்டு வாழும் மக்களுக்கு அரிய நற்செய்தியினை, அன்னை மரியாளோடு இணைந்து வாழ்ந்ததன் விளைவாக எழுந்த அனுபவச் சிதறல்களை இந்நூலில் திருமதி அற்புதம் இராசநாயகம் தந்தமை பாராட்டுதற்குரியதே. இறை — மனித உறவுத் தொடர்பாற்றல் தன்மயமாக செய்யப்பட்டதே இந்நூலின் சிறப்பம்சமாகும்.

அன்னையின் அன்புப் பக்தர்கள் இந்நூலினைப் படிப்பதன் மூலம் தமது அருள் வளத்தைப் பெருக்கிக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

அனைவர்க்கும் நல்லாசிகள்!

**லூயிஸ் பொன்னையா அ. ம. தி.**

வடமாநில அ. ம. தி. சபை முதல்வர்,
தொடர்பகம், யாழ்ப்பாணம்.
25-06-1990.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

மீட்பளிக்கும் ஊற்றுக்கு மாதாவே தாய். மாதா, மாதா என்று பல நூறு நாமங்களைக் கூறும் நாம் மாதாவின் வரலாறு, விசுவாச வாழ்வு. செப வாழ்வு என்பனபற்றி அறிய வேண்டுமே.

நற்செய்திகளில் மரியாளின் வாழ்க்கைச் சிறப்புகள். இறைத் தொடர்புகள் ஆங்காங்கு தொனிக்கின்றன. இறை மகனுக்கும் மரியாளுக்குமுள்ள உறவு, உரிமை, என்பன தெளிவாக எழுதப்பட்டுள்ளன.

மரியாளின் வாழ்வு முழுப் பக்குவம் அடைந்த ஒரு சீடத்தியின் வாழ்க்கை எனலாம்.

மரியாளின் விசுவாச வாழ்வு, செப வாழ்வு என்பன அவளைக் கன்னியாகவும், தாயாகவும், சீடத்தியாகவும் வாழச் செய்தது. கன்னியர்களிலெல்லாம் உயர்ந்தவள் அவள். இறை வார்த்தைக்குக் காது கொடுத்து அதன்படி வாழ்வை அமைத்துக் கொள்வதே அவளின் செப வாழ்வு ஆனது. இந்த நிலையே அவளை மனித வர்க்கத்துள் ஓர் உயர்ந்த நிலைக்கு இட்டுச் சென்றது. திருச்சபையும் அவளை 'கன்னி' 'தாய்' 'சீடத்தி' என்ற நிலைக்கு உயர்த்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் ஊழுழி காலத்துக்கு முன்பே கன்னி ஒருத்தியைத் தேர்ந்து தமது மீட்புத் திட்டத்துக்கு ஆயத்தம் செய்திருந்தார். இறைவாக்குகள் மூலம் இந்த இறைத்திட்டம் வெளிப்பாடானது.

இறைவனுக்கு மனிதனிடம் உறவு, உரிமை உண்டு. ஆக்கல், அழித்தல் அவருடைய உரிமை.

**''ஆண்டவரே! நீரே எங்கள் தந்தை; நாங்கள் களிமண். நீர் எங்களை வளர்ப்பவர்! நாங்கள் யாவரும் உம்முடைய கைவேலைப்பாடுகள்''** — (இசை 64 : 8)

மரியாள் இறைவனின் சிறந்த கைவேலை அல்லவா?

கன்னிமரியாள் செபவாழ்வின் உச்சக்கட்டத்தை எட்டிப் பிடித்து, இறைமகனுடன் கலந்துரையாடி தேவ மகனுக்குத் தாயாகினாள். இயேசுக் கிறிஸ்துவை வளர்த்து, அவருடைய வார்த்தையாலும் செயலாலும் இறைமையை உலகுக்குக் காட்ட உதவினாள். இறுதியில் அவரைச் சிலுவைக் கிறிஸ்துவாக ஏற்று, விண்ணக உறவை ஏற்படுத்தினாள்.

அற்புதம் இராசநாயகம்

'அற்புத லொட்ஜ்'
உடுவில்,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரியாளின் மகத்துவம்

உள்ளே

1. கன்னியும் கற்பரசியும் 1
2. இறைவாக்குகளில் கன்னியும் மகனும் 3
3. மணமகளாகத் தேர்ந்து கொள்ளப்பட்டவள் 5
4. முட்களுள் லிலிமலர் 9
5. தரிசனை பெற்றவள் 11
6. பேறுபெற்றவள் 19
7. அன்னையும் அகதியானாள் 30
8. நாசரேத்தூரின் நல்ல தாய் 34
9. மரியாள் ஊருக்கு உபகாரி 45
10. குறைவில் நிறைவு கண்டு களித்த கன்னி 55
11. துன்பத்தில் அன்னை 61
12. துன்பத்தின் பின் இன்பம் 78
13. அன்னைக்கும் வரவேற்பு உண்டா? 81
14. தேவாலயம் 84
15. தேவமகனும் தேவதாயாரும் 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னியும் கற்பரசியும் 1

கன்னிப் பெண் ஒரு மலரின் அரும்புக்கு நிகரானவள். அரும்பானது அழகிய இதழ்களையும், அதனுள் இருந்து சுரக்கும் தேனையும், கட்டவிழும் போது உண்டாகும் வாசனையையும் தன்னுள் அடக்கித் தனது போர்வையால் மூடி வைத்திருக்கிறது.

கன்னிப் பெண்ணானவள் சிறு பராயம் தொடக்கம் தனக்குள்ள அழகையும், இளமையையும், பெண்ணுக்குரிய கற்பையும், இனிய சுபாவங்களையும் அடக்கம் என்னும் போர்வையால் மூடி, கன்னி என்ற பெயருக்கு இலக்கணமாகி அமைந்து வாழ்கிறாள்.

ஒரு பெண் தன்னை முழுவதும் விரும்பி இறைவனுக்குக் கொடையாக அளிக்கிற புனித இறையனுபவம் புவியில் மிக மிக அருமையாகவே நிகழ்கிறது. கற்பு என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிய சிறப்பு வாழ்வு. சிலர் இதை திருமணம் ஆகாத பெண்களுக்கும் துறவற சகோதரிகளுக்கும் மட்டுமே பொருந்தும் என எண்ணி வாழ்கின்றனர். துறவறத்தோர் இல்லறத்தோர் யாவருக்கும் இது பொதுவானது.

கன்னிப் பெண் தன் கற்பைப் பொன் போலப் பாதுகாத்து வாழ வேண்டும் என, சிறுவயதிலிருந்தே அறிந்து கொள்கிறாள். இது தமிழ் மரபாக இருந்து வருகிறது. கன்னிப் பெண்கள் தங்கள் கன்னிமை சிறக்க வேண்டும் என நோன்பிருந்து இறை வழிபாடு செய்யும் வழக்கமும் தமிழ் நாட்டில் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூத நாட்டில் கன்னிப் பெண் அடக்கமாகவும், கற்புடையவளாகவும் வாழ வேண்டும் என்பது யூதப்பண்பாடு ஆகும்.

"கன்னிப் பெண் கருத்தாங்கி" என்ற இறை வாக்கு ஒன்று பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருந்தது. இறைவனின் நிறைவிலே அக் கன்னி கலந்து நிறைவாக வேணும்.

ஆதாம் ஏவாள் பாவம் செய்து தண்டிக்கப்பட்டபோது கடவுள் சர்ப்பத்தையும் சபித்தார். "**உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்குமிடையே பகையை உண்டாக்குவோம்**" ஆதி 3:15.

சாத்தானின் தலையை நசுக்கக் கூடியவள் யார் என்பதைக் கடவுளே தீர்மானித்திருந்தார். "**அவள் உன் தலையை நசுக்குவாள்**" என்பதை உறுதிப்படுத்தும் காலவரம்பில் மரியாள் வாழ்ந்து கொண்டிருந்தாள்.

ஒரு பெண் வானக உறவுள்ளவளாய் இருந்தாலன்றி, பசாசை நசுக்கவோ, பசாசை வெல்லும் வலிமை வாய்ந்த வித்தை உருவாக்கவோ தகுதியுடையவளாய் இருக்க முடியாது.

பூவுலகைப் படைத்த ஆண்டவர் மனித சந்ததியினரை சாத்தானின் கையில் முற்றாக விட்டு விடவில்லை. இறை வாக்கினரில் தேவ ஆவியை இறங்கச் செய்து, காலத்துக்குக் காலம் அவர்களுடைய வாக்கால் மெசியா பிறப்பார் என அறியப்பண்ணிக் கொண்டிருந்தார். மெசியாவுக்குத் தாயாக வர வேண்டிய பெண் கன்னியும் கற்பரசியுமாக இருக்க வேண்டும் என்பது தெய்வ சித்தம்.

இக்கற்பரசியின் செப வாழ்வே இறைக்குரிய சிந்தனைகளை உருவாக்கியது. இறைமகனைச் சார்ந்து வாழச் செய்தது. அந்த ஊக்கமே கன்னியாகவும், தாயாகவும், சீடத்தியாகவும் வாழ வழியமைத்துத் தந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாளின் விசுவாச வாழ்க்கை, செபத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததினாலேயே ஒரு இறைமகனுக்கு தாயாக இசைந்து போகவும் வைத்தது.

இறையில் முழுப்பக்குவம் அடைந்த இப்பெண்ணின் இதய தாகம்.

''பறவைபோல் மலைக்குப் பறந்து செல்'' சங்கீ. 10:1 என அவளை ஏவி நின்றது.

# இறைவாக்குகளில் கன்னியும் மகனும் 2

வேத ஆகமங்களில் இஸ்ராயேலரின் மீட்புப் பற்றிய இறைவாக்குகள் இருந்தன.

புரட்சிகள், படையெடுப்புகள், யுத்தங்கள், சிறையிருப்புகளினால் தாக்குண்ட மக்கள் தங்களுக்குச் சுதந்தரமும் மீட்பும் வராதோ? என ஏங்கினர். பபிலோனியர், அசீரியர் யூத நாட்டின் மேல் படையெடுத்த காலங்களும் உபத்திரவங்களும் முடியுமுன்னரே உரோமர் படையெடுத்து வந்து நாட்டைக் கைப்பற்றினர். யூத நாடு உரோமையரின் ஆட்சியில் இருந்த போதே மக்கள் மீட்புப்பற்றி மிகமிகச் சிந்தித்தனர். வேதாகமங்களைப் புரட்டி வாசித்து இறை வாக்குகளின் மேல் கண்ணாய் இருந்தனர். சில இறைவாக்குகள் அவர்களுக்கு நம்பிக்கையூட்டிக் கொண்டிருந்தன.

''இதோ நாட்கள் வருகின்றன. இஸ்ராயேலின் வீட்டாருக்கும், யூதாவின் வீட்டாருக்கும் நாம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவோம்'' என்கிறார் ஆண்டவர்.

(எரேமியாஸ் 33 33;14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதோ கன்னிப் பெண் கருத்தாங்கி ஒரு மகனைப் பெற்றெடுப்பாள்; அவன் இம்மானுவேல் என்னும் பெயர் பெறுவான்" *(இசையாஸ் 7:14.)*

யூதமக்கள் ஒரு கன்னியையும் மகனையும் எதிர்பார்ப்பதில் ஆர்வமுற்றிருந்தனர். அந்த ஆர்வம் உலகப் பிரகாரமான ஆர்வமாய் இருந்தது. அடுத்து வரும் இறைவாக்கு நம்பிக்கையைக் கொடுத்தது.

"ஏனெனில் நமக்காக ஒரு குழந்தை பிறந்துள்ளது. நமக்கு ஒரு மகன் தரப்பட்டுள்ளான்; ஆட்சியின் பொறுப்பு அவருடைய தோள்மேல் இருக்கும், அவருடைய பெயரோ வியத்தகு ஆலோசனையாளர், வல்லமையுள்ள அரசன், முடிவில்லாத்தந்தை, அமைதியின் மன்னன் என வழங்கப்படும்.

அவருடைய ஆட்சியின் வளர்ச்சிக்கும் அமைதியின் பெருக்கிற்கும் முடிவு என்பதே இராது. தாவீதின் அரியணையில் அமர்வார்; அவரது அரசை நிறுவுவார்; இன்று முதல் என்றென்றும் நீதியாலும் நியாயத்தாலும் அதை நிலை பெயராது காத்திடுவார்; சேனைகளின் ஆண்டவரது ஆர்வம் இதை செய்யும்" *(இசையாஸ் 9: 6,7)*

இசையாஸ் இறைவாக்கினரின் இறைவாக்கு ஒரு அரச மகனை வெகு வல்லமையுடன் எடுத்துக் காட்டி நிற்கிறது மக்கள் தாவீது மன்னனின் வல்லமையையும் ஆட்சியையும் அறிவர், தாவீதின் சிங்காசனத்தைக் கண் முன் வைத்து ஆராய்ந்தனர் ஆசித்தனர் ஆவலாய் எதிர் பார்த்தனர். உரோமை ஆளுநரும். போர்வீரரும் புறமுதுகு காட்டி ஓடும் காலம் வந்து விட்டது என மகிழ்ந்தனர். இறை வாக்குகளில் நம்பிக்கை வைத்தனர். ஆனால் மதிப்பீடுகள் வேறு வழிகளில் சென்றன. எதிர் பார்ப்புக்கள் அரசனாக வர வேண்டும், நீதியுள்ள அரசனாக வரவேண்டும், மீட்பு வர வேண்டும்.

இஸ்ராயேலரில், வர இருக்கும் மெசியாவுக்கு தாயாகும் தலைமையுள்ள பெண்மணிகள் இருந்தார்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவாச வாழ்வு செபவாழ்வு என்பன விளங்க, கன்னி யாக ஒரு பெண் இருந்தால் வார்த்தையிலும் செயலிலு இறைமை வெளிப்பட வேண்டுமே.

மரியாள் பேசிய வார்த்தைகளை லூக்காஸ் நற்செய்தி யாளர் உபயோகித்திருக்கிறார். ''இதோ ஆண்டவருடைய அடிமை, உமது வார்த்தையின் படியே எனக்கு ஆகட்டும்'', ''கடவுளுடைய வார்த்தை'' என்ற வார்த்தைகளே இதற்கு சாட்சி. இறைவனே மரியாளை அந்த நிலைக்கு அடித்தளம் அமைத்து வைத்தார்.

## மணமகளாகத் தேர்ந்து கொள்ளப் பட்டவள் 3

தற்காலத்தில் எம் நாட்டில் 'மணமகள் தேவை' என்ற விளம்பரங்களைப் பத்திரிகைகளில் காணலாம். பணம், படிப்பு பட்டம், அழகு, ஜாதி, வயது என்பன எல்லாம் பொருந்தக் கூடிய மணப்பெண்ணுக்கு விளம்பரம் செய்கின்றனர். விளம் பரம் இன்றியும் பெண் எடுக்கிறார்கள். இஸ்ராயேலர் தத் தமக்கு விரும்பிய கோத்திரங்களிலிருந்து பெண் கொண் டார்கள். இறைவாக்கொன்று மெசியாவாக வர இருப்பவர் தாவீதின் வம்சத்திநின்றும் தோன்றுவார் என எழுதப்பட் டிருந்தது.

''அக்காலத்தில் தாவீதுக்கு நீதியின் தளிர் ஒன்றை முளைப்பிப்போம். அவர் நாட்டில், நீதியையும் நியாயத்தை யும் செலுத்துவார் .அந்நாட்களில் யூதா மீட்கப்படும்'' (ஏரே மியாஸ் 33:15.)

உலகத்தை மீட்க, மனுமகனுக்கு ஒரு தாய் தேவையாக இருந்தாள். பிதாவாகிய தேவனுக்கு, இறை வார்த்தையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமிசமாக்க இசைந்து கொடுக்கும் பெண் ஒருத்தி பூமியில் காணப்பட்டபோது வார்த்தையானது மாமிசமாகி மனுவுருவானார்.

தாவீதின் மரபில் சூசை என்னும் பெயருடைய ஒருவர் இருந்தார். அவருக்குப் பெண் தேடினர் பெரியோர். மரபும் குணமும் உள்ள பெண்ணையே தேடினர். சூசையோ விரத தத்துவ வாழ்வில் பற்றுடையவர்.

தாவீதின் குலத்திலே, சுவக்கீன் அன்னம்மா என்னும் தம்பதிகளுக்கு மரியாள் என்னும் புத்திரி இருந்தாள். அவர்கள் தங்கள் புத்திரி கற்பரசியாக வாழ வேணும் என்ற ஆவலில் அவளை நற்குண நற்செயல்களிலும் இறை வழிபாட்டிலும் வளர்த்து வந்தனர்.

மரியாள் சிறுவயதிலிருந்தே அமைதியும் அடக்கமும் உடையவளாக வாழ்ந்தாள். பருவமங்கையானதும் தனது கற்பை இறைவனுக்கே அர்ப்பணித்தாள். தனது உள்ளத்தை மாசுபடாது பாதுகாத்து செபதப வாழ்வில் ஈடுபட்டாள்.

சூசைக்கும் மரியாளுக்கும் மணப் பேச்சு ஆரம்பமானது. மரியாளின் மனம் திடுக்குற்றது. கன்னி மரியாளிடம் குடிகொண்டிருந்த பெண்மை, அன்பையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. மனிதன் அன்பு செய்யவே படைக்கப்பட்டிருக்கிறான் என்றும், அந்த அன்பு முதலில் கடவுளிடம் கொள்ளும் அன்பாக இருக்க வேணும் என்றும் உணர்ந்தாள் அந்த அன்புக்குத் தடையாகத் தன்னிடம் ஏதும் அகத்தடை இருந்தால் அதையும் நீக்கத் தயாராக இருந்தாள். அவளுடைய ஆன்மா தூய்மையானது. எனவே தன் அன்பு நிலையை கடவுளிடம் மட்டும் தொடர்பு கொள்ளும் நிலையில் பேணிக்காத்திருந்தாள் அவள்.

மரியாள் அந்தத் தேவ அன்புக்கு ஈடுசெய்ய, தனது வாழ்க்கையில் ஏற்படும் எந்த நிலையையும் ஏற்றுக் கொண்டு தெய்வசித்தத்துக்கும் ஏவுதலுக்கும் பதிலளிக்கவும், நிறைவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றவும், அவரையே சரண் அடையவும்; அவருக்கே பலியாக வும் தன்னைத் தயாராக்கிக் கொண்டிருந்தாள்.

அவளிடம் ஏக்கம் இருந்தது. அந்த அன்பின் ஏக்கமே கடவுளை அணைக்க வேண்டும்; அவரால் அரவணைக்கப்பட வேண்டும்; அவரைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்ற ஊக்கத்தைக் கொடுத்தது.

விண்ணகக் கனியைப் பெறுவதற்கு இக்கன்னி உகந்த வளாயிருந்தாள். ஆழமான அன்பின் தியானப்பண்பிலே அவள் கடவுளுக்குரிய மணப் பெண்ணாகியிருந்தாள்.

இராக்கேல் என்னும் இளநங்கை யாக்கோபின் உள்ளத் தில் இடம் பெற்றது போல மரியாளும் இறைவனின் உள்ள தில் இடம் பெற்றிருந்தாள். மரியாளின் விசுவாசமுள்ள செப வாழ்வு இதை வளர்த்திருந்தது.

மரியாள் மணப்பேச்சுக்கு ஒத்துப் போனாள். பெற்றோர் பெரியோர்களால் செய்யப்படும் நிச்சயதார்த்தம் கடவுளால் திட்டமிடப்பட்டதே என நம்பினாள். சூசையும் மரியாளை மனைவியாக ஏற்கச் சம்மதித்தார்.

சூசைக்கும் மரியாளுக்கும் மண ஒப்பந்தம் நிறைவேறி யது. கன்னிப் பெண்ணான மரியாள் ஒரு முக்கியமான இறை மகிமைக்காகவே மண வாழ்வுக்குள் நியமிக்கப்பட்டாள்; அதைக் கடவுளே திட்டமிட்டார்.

ஆதியிலிருந்து சில மணப்பேச்சுக்களும் மணமகளின் தேவையும் கடவுளாலாக்கப்பட்டவையாய் இருந்தன. அவை வேதாகமத்தில் உண்டு. அத்திருமணம் மக்களின் நன்மைக் காகவே ஆனது என அறியலாம்.

மக்களினத்தில், சந்ததியை விருத்தி செய்ய பெண் தேவைப்படுகிறாள். அப் பெண் கன்னியாகவும் கற்புள்ள வளாகவும் இருக்க வேணும் என்று மக்கள் விரும்புகின்றனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூதர் பபிலோனியரால் அடிமைகளாக அழைத்துச் செல்லப்பட்ட காலத்துக்குப்பின், அசுவேருஸ் என்ற மன்னன் நூற்றுக் கணக்கான மாநிலங்களை ஆட்சி செய்த காலத்தில் மன்னனுக்கு ஒரு மணப் பெண் தேவைப்பட்டாள்.

மன்னனுக்கு மிகமிக அழகிய பெண்ணைத் தேடினார்கள். யூதப் பெண்ணான எஸ்தர் மிக அழகி. அவளோ அரசியாகத் தெரிந்தெடுக்கப்பட்டாள்.

ஆமான் என்னும் பெரிய தலைவன் யூதரின் மேல் பொறாமை கொண்டு யூதரைக் கொல்லத் திட்டம் ஒன்றை அரசன் மூலம் அமுலாக்கினான். எஸ்தர் அரசி யூதப்பெண் என்பது ஒருவருக்கும் தெரியாதிருந்தது.

எஸ்தர் அரசி தன் ஜனம் முழுவதையும் காப்பாற்ற மூன்று நாள் தபமும் செபமும் செய்தாள். யூதமக்கள் அனைவரையும் அவ்வாறே செய்யும்படி ஏவினாள். ஈற்றில் எஸ்தர் அரசியின் வேண்டுகோள் அரசனால் ஏற்கப்பட்டது. யூத மக்கள் அனைவரும் படுகொலையினின்றும் தப்பினர். மீட்பு உண்டானது.

எஸ்தர் அரசி ஒரு வகையில் உலக மீட்பருக்குத் தாயாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கன்னி மரியாளுக்கு முன்னடையாளமாக இருந்தாள். இவ்வரசியின் செபதபங்களினால் யூத மக்கள் காப்பாற்றப்பட்டனர். கொலைக்கு நியமிக்கப்பட்ட அரச கட்டளையையும் அக்கட்டளையைத் தங்கிச் சென்ற கடிதங்களையும் அரசன் நீக்குவித்தான்.

பாவம் மிஞ்சிப் போன காலத்தில், உலகை மீட்கவா இருந்த மெசியாவுக்குத் தாயாக வரக்கூடிய பெண் கன்னிப் பெண்ணாகத் தேவைப்பட்டாள். கன்னிப் பெண்ணே மீட்பின் பாலம். இது 'கடவுள் – மனிதன்' உறவிலே தான், கன்னி இறைமகனுக்குத் தாயாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முட்களுள் லீலிமலர் 4

கன்னி மரியாள் வாழ்ந்த நாசரேத்தூர் ஓர் சிறிய கிராமம். வகுப்புவாதங்களும், வாக்கு வாதங்களும், வாய்ச் சண்டைகளும், அடிபிடிகளும், குடும்பப் பிரச்சனைகளும் அங்கு மலிந்திருந்தன.

அப்படிப்பட்ட கேடான கிராமம் ஒன்றில் அவள் வாழ்ந் கொண்டிருந்தாலும்' அவளுடைய வாழ்வு முட்கள் நடுவில் இதழ் விரித்த ஒரு லீலிமலருக்கு ஒப்பாயிருந்தது.

> ''முட்களின் நடுவில் முளைத்த லீலியைப் போலவே இளங்கன்னியர் நடுவில் விளங்குகிறாள் என் அன்புடையாள்.'' *(உன்னத சங்கீ 2:2)*

இந்த உன்னத சங்கீத வாக்கியம் கன்னிமரியாளுக்கே பொருத்தமாக இருந்தது.

நாட்டுப்புற அன்றாட நிகழ்ச்சிகளில் பற்பல சிக்கல்கள் தோன்றி மறைவதுண்டு. பொதுவான பிரச்சனைகளிலோ, தனிப்பிரச்சனைகளிலோ கலந்து கொள்ளாது அன்பும் பண்புமான வாழ்வையே கடைப்பிடித்து வாழ்ந்து வந்தாள் மரியாள்

கன்னிப் பெண்களுடன் சேர்ந்து ஐக்கியமாக வாழ்ந்து பக்தி வழிபாடுகளில் மேலோங்கி நின்று, அவர்களுக்கெல்லாம் வழிகாட்டும் நட்சத்திரம் போன்றிருந்தாள்.

மரியாள் என்ற பெயர் ''கடலின் நட்சத்திரம்'' என்ற பொருளைக் கொண்டது என்று விளக்கம் கூறியிருக்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதர் பெர்னாது அதைவிட தலைவி அன்புமிக்கவள் என்னும் கருத்துக்களும் உண்டு என்கின்றனர் அறிஞர்.

தனக்கே உரித்தான சந்தோஷத்தை பக்தி வழிபாடுகளிலும் வேதாகம வாசிப்பிலும் கண்டு கொண்டாள். கடவுள் மட்டில் மரியாள் காட்டிய அன்பின் தியானத்தில், பரவசத்துக்குரிய உச்ச நிலையை அவள் அடைந்திருந்தாள்.

மரியாள் எதற்காக இவ்வுலகில் வாழ்ந்தாள் என்பதை நாம் அவளின் வாழ்க்கை வரலாற்றில் கண்டறியலாம். நாம் அதை மறந்து விட முடியாது. அவளுடைய வாழ்வில் நற் செயல்கள் எமக்கே படிப்பனையாகின்றன. மனுக்குலம் முழுவதற்கும் உரித்தான தாயாகிறாள்.

மனுக்குலம் முழுவதும் மரியாளின் குமாரனால் பெரு மிதம் அடைந்தது. அதில் மரியாளுக்கும் பெரும் பங்கு உண்டு.

தேவ அன்பால் ஆட்கொள்ளப்பட்டு தெய்வீக வெளிச் சத்தால் ஒளி பெற்று, தன்னுடைய தாழ்ச்சியாலும் நல்லறிவாலும் கடவுளுக்கு எவ்வாறு இசைந்து போனாள் என்பதை இவ்வரலாற்றில் அறியலாம்.

உலக வரலாற்றில் மகிமை பெற்ற பெண்கள் பலர் வாழ்ந்து போனார்கள். ஆனால் கன்னி மரியாளோ தேவ மகிமை ஒன்றுக்காக வாழ்ந்து பேறுடையவளானாள்.

இருள் சூழ்ந்த யூதப் பெருமக்கள் வாழ்ந்த யூத நாட்டில் இத்தகைய ஒரு பெண் தோன்றியமை அவர்களுக்கு பெரும் பயனையும் மீட்பையும் கொடுக்கவே என்டதை யாரும் அறிந்திலர்.

நாசரேத்தூர், யூத நாட்டின் ஒரு சிறுபாகமே. அங்கு பெரு மக்கள், அறிவாற்றலுள்ளவர்கள் என தேடிக் கண்டடையக் கூடியவர்கள் இருக்கவில்லை. சேற்றினில் செந்தாமரை வளர்வது போல, மரியாள் அங்கு வாழ்ந்து கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோயீசன் காலமுதலாக கண்ணுக்குக் கண், பல்லுக்கு பல் என்ற வன்முறைகளும் குற்றவாளியைக் கற்றூணிற் கட்டியடித்தல், கல்லெறிந்து கொல்லுதல், சிலுவையில றைந்து கொல்லுதல், போன்ற வன்முறைத் தண்டனைகளும் நிலவிய யூத நாட்டிலே கன்னிமரியாள் மன்னித்தல் என்ற நற்பண்புடையவளாக வாழ்ந்து கொண்டிருந்தாள்.

பள்ளத்தாக்குகளிலுள்ள லீலிமலர் முட்புதர்களின் இடையில் மலர்ந்தாலும் முட்கள் அதனைப் பீறி விடுவதில்லை. அவ்வாறே மரியாளும் பாவநாட்டமில்லாத கன்னியாக வாழ்ந்து கொண்டிருந்தாள்.

''உம் வாக்கு எனக்கு வாழ்வளிக்கிறது'' (சங் 118:50)
'உம் நீயமங்களைக் குறித்து இன்புறுவேன்' (சங் 118:16)

இவ்வாறான மன நிலையை மரியாளும் கொண்டிருந்தாள் என்பதை திட்டமாகக் கூறலாம்.

இம்மன நிலையே செபத்தின் இறுதி நிலைக்கு மரியாளை இட்டுச் செல்கிறது. மரியாள் இறைவார்த்தையைத் தன்னிலே செயல் படுத்தக் கூடியவள் எனக் கூறுவது அவளுக்கே பொருந்தும்.

# தரிசனை பெற்றவள் 5

முற்காலத்திலே மண்ணில், விண்ணவர் பலமுறை பலருக்குத் தரிசனைகள் கொடுத்திருந்தனர். இறை தரிசனை பெற்ற நல்ல மனிதரைப் பற்றிய வேதாகமக் கூற்றுகளில் சில:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நாம் திரும்பும்போது இதே காலத்தில் உன்னிடத்துக்கு வருவோம். அப்போது நீயும் உயிரோடிருப்பாய்; சாறாளுக்கும். ஒரு மகன் இருப்பான்'' என்றார். (ஆதியா. 18 : 9, 10) ஆபிரகாம் இறைவாக்குகள் பெற்ற மனிதனானார்.

2. யாக்கோபு தனது இருமனைவியருடனும், மக்களுடனும் பரிவாரங்களுடனும் தன் சொந்த நாட்டுக்கு வரும் வழியில் ஓர் ஆடவனுடன் போராட வேண்டியிருந்தது. யாக்கோபு அந்த ஆடவனை யார் என அறியாதிருந்தான். யாக்கோபுவின் வீரத்தைக் கண்ட ஆடவன், ''உன் பெயர் இனி, யாக்கோபு இல்லை; இஸ்ராயேல் எனப்படும். ஏனென்றால், நீ கடவுளோடு போராடி மேற்கொண்டாய் என்றால், மனிதர்களை மேற்கொள்வாயென்று சொல்லவும் வேண்டுமோ'' என்றார் (ஆதி 32:28 ) வானவர் ஒருவரைக் கண்ட இன்பம் யாக்கோபுக்கு ஊக்கத்தை ஊட்டியது.

3. இவ்வாறே யோசுவா தேவ தூதரைத் தரிசித்தான். (யோசுவா. 5: 14, 15)

4. தான் கோத்திரத்தானான மனுவே என்பவனுடைய மனைவி மலடியாய் இருந்தாள். அவளுக்கு ஆண்டவரின் தூதர் தோன்றி அவளை நோக்கி, ''பிள்ளைகள் இல்லாத மலடி நீ; ஆனால் கருத்தாங்கி ஒரு மகனைப் பெறுவாய்...... அவனே இஸ்ராயேலரைப் பிலிஸ்தியர் கைகளினின்று மீட்பான்'' என்றார் (நீதிபதி ... 13:2-5.) தேவதூதர் கூற்றுப்படி அவள் ஒரு புத்திரனைப் பெற்று வளர்த்தாள்.

நல்மனமுள்ள மக்களிடத்தே தேவதூதர் அனுப்பப்பட்ட வரலாறுகள் பல, வேதாகமத்தில் உண்டு. ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்ட வேதாகம வரலாறுகளில் தேவதூதரின் வரவும், அவர்கள் கூறிய வார்த்தைகளும், அவ் வார்த்தைகளின் நிறைவேற்றங்களும் உண்டு. ஆதியிலிருந்து வானக உறவு இவ்வாறே நடந்து கொண்டிருந்தது. ஆண்டவர் மனித சந்ததியினரை சாத்தானின் கையில் விட்டு விடாது இவ்வாறே காப்பாற்றினார். விசுவாசமுள்ள செப வாழ்வில் இத் தரிசனைகள் கிடைத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் மீட்புத்திட்டம் இவ்வாறே ஆபிரகாமில் ஆரம்பமாகியது. மக்கள் பாவ இருளில் அகப்பட்டு, வழி விலகி, கடவுளை மறந்து பொய்த் தெய்வ வழிபாடுகளைப் பின்பற்ற விடாது காத்தார் கடவுள். நாடு கடத்தியும், சோதித்தும், தண்டித்தும் வழி நடத்தினார்.

வானதூதரின் தரிசனையைப் பெறவும் மீட்புக்குரிய ஒரு தேவமகனைப் பெற்றெடுத்து உலகுக்குக் கொடுக்கவும் வானக உறவுக்குரிய ஒரு பெண் ஆபிரகாமின் சந்ததியிலேயே தோன்ற வேண்டியவளாய் இருந்தாள்.

உலகமும் அதிலுள்ள சிருஷ்டிகளும் இறைவனின் திட்டபடி நிறைவேறியது போலவே, மரியாளும் உலக மக்களின் மீட்புக்காக ஒரு தேவ புத்திரனுக்குத் தாயாகும் வரத்துடன் தாவீதின் குலத்திலே தோன்றியிருந்தாள். இது இறைவனின் அன்புச் செயல். ஒரு கன்னி ஒரு குமாரனைப் பெறுவாள் என்று அறிமுகப்படுத்த, இறைவாக்குகளும் எழுதப்பட்டிருந்தன. இழந்த வாழ்வை மீண்டும் பெற உதவும் புதிய ஏவாளாக நியமிக்கப்பட்டவளே கன்னி மரியாள். அவளே மீட்புக் கொடுக்கும் வித்துக்கு நிலமுமானாள்.

மரியாள் ஒவ்வொரு கணமும் இறைவனைத் தொழுபவள். கன்னிமை நிலையிலே தொழுகையில் இருப்பவள் இறைவனுக்கே தன்னை முழுவதும் கையளித்தவள்.

இயேசுவின் பிறப்பு அறிவிப்பு நிகழ்கிறது.

| வானதூதர் | மரியாள் |
|---|---|
| ''அருள் நிறைந்தவளே<br>வாழ்க ஆண்டவர் உம்முடனே'' | |
| ''ஒரு மகனைப் பெறுவீர்<br>அவன் உன்னதரின் மகன்'' | ''இது எங்ஙனம் ஆகும்''<br>''கணவனை அறியேன்'' |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆவி உம்மேல் நிழலிடும்'' ''இதோ ஆண்டவருடைய அடிமை''

''கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை'' ''உமது வார்த்தையின் படியே எனக்கு ஆகட்டும்

கடவுளே தம் தூதரை அனுப்பி அவர் வழி மரியாளின் இசைவைக் கேட்கிறார்.

''கணவனை அறியாத'' மரியாள் இறைவார்த்தைக்குச் செவிமடுக்கிறாள். (லூக் 1: 35 – 38)

''இதோ ஆண்டவருடைய அடிமை'' என்பது அவள் வாழ்வின் குறிக்கோளும் திட்டமுமாகிறது.

தூய ஆவி அவள் மேல் நிழலிட அத்தூய ஆவியினாலே அவள் கருத்தரிக்கிறாள். இது கணவன் – மனைவி உறவன்று படைத்தோன் - படைப்பு உறவு ஆகும்.

ஆவியானவரின் செயலினால் அவள் தாயாகிறாள். ''ஆகட்டும்'' என்ற இசைவு அவளைத் தாய்மையாக்குகிறது

மரியாள் தன் கன்னிமைக்குப் பழுதில்லாது கருத்தரித்தது, வரலாற்றுக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சி. மரியாள் இறை மகன் இயேசுவின் மனித வரலாற்றுக்கு ஒரு பாலமாகிறாள். இயேசுவின் வரலாறு ஆரம்பமாகிறது, மரியாளுக்கு ஒரு தனி சிறப்பு ஏற்படுகிறது.

தனக்கென்று ஒன்றுமில்லாத நிலையில் ''இதோ ஆண்டவருடைய அடிமை'' என்று தானே விரும்பி தன்னை முழுவதும் இறைவனுக்குக் கொடையாக அளிக்கிறாள். தன்னுடையதெல்லாம் இறைவனுடையதே என்பது அவளின் வாழ்வு.

கன்னி தாயாகி, தாய் சீடத்தியாகி இறைவனுக்கும் இறைமகனுக்கும் உரியவளாகிறாள். மரியாளின் கன்னிமை நிலையைவிட தாய்மை நிலையே அதிகம் சிறந்தது, ஏனெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னில் மரியாளின் தாய்மை இறைவன் அவளுக்குக் கொடுத்த பரிசு என்றே கூறலாம்.

"கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும் திருச்சட்டத்திற்குக் கீழ்ப்பட்டவராகவும் அனுப்பியுள்ளார்" (கலாத் 4:4;5.)

மரியாளின் இசைவு இறைமை வாழ்வில் இருவித பாக்கியங்களுக்கு அவளை வழிநடத்தியது. தேவதூதரின் தரிசனையைப் பெறவும் தேவ மகனுக்கு தாயாகவும் பேறு பெற்று அவளுக்கு புவியில் மேன்மையைக் கொடுத்து சீடத்துவ வாழ்வை ஏற்றாள்.

விலையேறப் பெற்ற பொன், வைரம் முத்துப் போன்ற பொருளைச் சேமிக்க விலையுள்ள பேழை ஒன்று தேவையாவது போலவே, விலை மதிக்க முடியாத தெய்வ மகனைப் பத்து மாதம் வயிற்றில் சுமக்கவும், முப்பது ஆண்டுகள் வளர்த்து வழி நடத்தவும் விலை மதிக்க முடியாத தெய்வத் தன்மை வாய்ந்த மானிட கன்னிப் பெண் ஒருத்தி கடவுளுக்குத் தேவையாக இருந்தாள்.

விண்ணினின்று வந்த வார்த்தையை "ஆம்" என்ற வார்த்தையால் தனது உதரத்துள் ஏற்று நின்றாள். பரிசுத்த ஆவி அவளிலே நிழலிட்டார். அந்த நேரமே வானவர்க்கும் மானிடர்க்கும் உறவு கொடுக்க உடந்தையானாள். கன்னி கருவுற்றாள்.

தாழ்மை, பொறுமை, அன்பு, இரக்கம் எனப்பட்ட சகல சிறப்புக் குணங்களைக் கொண்ட இக்கன்னி தூய ஆவிக்குப் பத்தினியானாள். மரியாளின் வாழ்க்கையில் உள்ள நற்கருமங்களை எங்களுக்கு முன் மாதிரிகை ஆக்கிக் கொள்ளலாம்.

கடவுளுக்குரிய கருமங்களில், ஆன்மீக காரியங்களில், மீட்புப்பணியில், சேவையில், தார்மீக கருமங்களில் இசைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதல் ஆகியனவற்றில் மரியாள் பூவுலக மக்களுக்கு ஓர் மாதிரிகையான வாழ்வை வாழ்ந்து காட்டினாள்.

இயேசுக் கிறிஸ்துவின் மீட்புப்பணி, அவர் கருத்தரித்த நேரமே ஆரம்பமானது. அந்த நேரம் முதல் மரணபரியந்தம் வரை மரியாள் கிறிஸ்து இயேசுவின் எண்ணங்களுக்கு இசைந்து போய்க் கொண்டே வாழ்ந்தாள். எம்மவர்க்கும் வழி காட்டியாக இருந்தாள்.

''உமது வார்த்தையின் படியே எனக்காகட்டும்'' என்று பதிலளிப்பதில் எல்லா வேளைகளிலும் தன் கடமையின் நினைவாகவே இருந்தாள் என்பது தெளிவாகிறது.

இவளின் செப வாழ்வே, கபிரியேல் தேவதூதனையும் இறைவனுடைய வாக்கையும் வரவழைத்தது. வாழ்த்துப் பெறவும் செய்தது.

கன்னிப் பெண் கருத்தாங்கினாள்.

பல நூற்றாண்டுகளுக்கு முன் கூறப்பட்ட இசையாஸ் என்பவரின் இறைவாக்கும் நிறைவேறியது.

வானதூதர் அகன்ற பின் மரியாள் கடவுளைத் தொழுது வணங்கினாள் உள்ளத்தில் ஓர் இனம் தெரியாத இன்பம், மகிழ்ச்சி, உற்சாகம் தோன்ற தனது உறவினளான எலிச பெத்தை நினைவு கூர்ந்தாள். எலிசபெத்து உறவினள் மட்டுமன்றி, முதிர்வயதை எட்டிப் பிடித்திருந்தவள். அவளுடைய வயிற்றில் ஓர் குழந்தை, மரியாளுக்கு வானதூதரின் வாக்கில் நிறைந்த நம்பிக்கை. எலிசபெத்தின் இல்லம் அவளின் கண்களில் இனிய உறவை ஏற்படுத்தியது. சந்திப்புக்கள் நிகழ்ந்தன.

இந்த இனிய காலத்தில் பல இறைவாக்குகளை மரியாள் வாசித்து மகிழ்ந்திருப்பாள். ஏனெனில் தேவதூதரின் தரிசனையும், அவர் கூறிய வாக்குகளும் மரியாளுக்கு இன்பம் கொடுத்தன. வியப்பும் கொடுத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''யெருசலேமே எழுந்திரு, உயரத்தில் எழுந்து நில். கிழக்குத் திசையை நோக்கிப்பார், மேற்றிசை முதல் கிழ்த் திசை வரையில் இருந்த உன் குழந்தைகள் பரிசுத்தரின் வார்த்தையால் ஒன்றாய்க் கூடிக் கடவுள் தங்களை நினைவு கூர்ந்ததற்கு மகிழ்ந்து கொண்டு வருகிறார்கள்...

''கடவுள் தம் மகிமையின் வெளிச்சத்தில் இஸ்ராயேலை அக மகிழ்ச்சியோடு தம்மிடமிருந்து வெளிப்படும் இரக்கத் தோடும் நீதியோடும் கூட்டிக் கொண்டு வந்து சேர்ப்பார்''

(பாருக் 5: 1 - 9)

''யெருசலேமில் குடியிருக்கும் சீயோன் குடிகளே...,

''நீங்கள் எப்பக்கம் போனாலும் உங்களுக்குப் பின்னா லிருந்து 'இது தான் வழி, இதிலேயே நடந்து போங்கள்' என்னும் வார்த்தையைக் கேடபீர்கள்''

(இசையாஸ் 30: 19 -2 1)

*மரியாள் மேலான இறையின்பத்தை அனுபவித்த காலம் இது. அவள் ஒரு பெண்ணாகவும், மணவாட்டியாகவும், சீயோன் பட்டணமாகவும் உருவகிக்கப்பட்டிருந்து பல வர வேற்புரைகளுக்கு இலக்கணமாய் அமைந்திருந்தாள்.*

*இறைவனின் அன்பு உள்ளத்துக்குரிய ஓர் அன்புப் பெண் ணாக இருந்ததினால் தேவ ஆவிக்குப் பத்தினியாகவும் அமைந்து, இசைந்து போகக் கூடியவளாயிருந்தாள். இறை தரிசனை பெற்றதுமன்றி இருளை நீக்கி ஒளியை மக்களுக்கு ஏற்றி, சோதனைகளில் நின்றும் வெற்றி பெற மீட்புக் கொடுக்கும் மகனுக்குத் தாயும் ஆனாள்.*

*''ஆவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால்''*

*ஏவாள் விண்ணக உறவை அழித்தாள். மரியாள் விண் ணக உறவுக்குப் பாலமானாள். சாத்தானின் மேல் வெற்றி கொள்ள ஓர் பெண் மீட்புத்திட்டத்தில் வெற்றி பெறுவாள் என்ற வாக்குறுதியும் இறைவாக்காகக் கூறப்பட்டிருந்தது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரயேல் மக்களின் வாழ்க்கையில் சில வீரப் பெண் மணிகள் தோன்றி, அவர்களுக்கு மீட்பும் வெற்றியும் கொடுத்த வரலாறுகளும் பழைய ஏற்பாட்டில் இடம்பெற்றிருக்கின்றன.

1. ஏழைக்குடும்பத்தில் பிறந்த யூதப்பெண் மணியான எஸ்தர், யூதகுலம் முழுவதையுமே படுகொலையிலிருந்தும் மீட்டாள்.

2. யூதித் என்னும் வீர விதவைப் பெண் சத்துராதியான ஒலொபெர்னஸ் என்னும் சேனைத் தலைவனின் சிரசைக் கொய்து, யூதமக்களைக் காத்து வெற்றியீட்டினாள்.

எஸ்தர், யூதித், தெபோரா என்னும் வீரப்பெண்மணிகளால் யூதகுலம் அழிந்து போகாது காப்பாற்றப்பட்டது என்றால் மரியாள் என்னும் ஒரு ஏழைக் கன்னிகையினால் உலக மக்களின் பாவ இருள் நீக்கப்பட்டது. என்பதும் உண்மையான சம்பவமாகும். தனது கன்னிமைக்குப் பங்கமில்லா வகையில், அவள் மீட்புத் திட்டத்தின் முக்கிய பங்காகி நின்றாள்.

இயேசுவின் மீட்புப் பணியில் மரியாள் சீடத்தியாகிறாள் இவளிடம் விசுவாசம், சீடத்துவம் செபம் ஆகியவை இணைந்து காணப்படுகின்றன.

''நல்ல நிலத்தில் விழுந்த விதை நூறு மடங்கு பலன் அளிக்கும்'' மரியாளின் இறைமை வாழ்வு, செப வாழ்வு,, விசுவாச வாழ்வு என்பன இயேசுக் கிறிஸ்துவின் பணியில் பன் மடங்கு பயனளிக்க வாய்ப்பானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேறு பெற்றவள் 6

இஸ்ராயேலரின் திருச்சட்டங்களும், தொழுகைகளும் இறைவாக்குப் பேச்சுக்களும் ஆகிய பல அதிசய வர்த்தமானங்கள் அடங்கிய புத்தகம் ஒன்று, வேறெந்த நாட்டிலாவது, சமுதாயத்திலாவது இருக்கவில்லை.

உலக வரலாறுகளில் இறைமையை வெளிக்காட்டும் சம்பவங்கள் இடம் பெற்றனவாகக் காண முடியாது. வரவேற்புகளும், இறை வாக்குகளும் நிறைவேற்றங்களும் எமது வேதாகமத்தில் மட்டுமே மிகத் தெளிவாக இடம் பெற்றுள்ளன.

காலம் நிறைவேறியபோது வாக்களிக்கப்பட்ட பெண்ணாக மரியாள் வெளிப்பட்டாள். யெருசலேமிலும் அதைச் சூழ்ந்துள்ள நாடுகளிலும் மெசியாவுக்குத் தாயாகத் தம்மை கையளிக்க பல பெண்கள் விரும்பினர்.

''யெருசலேமுடன் சேர்ந்து மகிழ்ச்சியடையுங்கள், அவள் மேல் அன்பு கொண்ட அனைவரும் அக்களியுங்கள்; அவளுடைய மகிமையின் பெருக்கினின்று இன்பமாய்ப் பருகி மிகுதியாய் நிலைத்திருப்பீர்கள்''

ஏனெனில் ஆண்டவர் கூறுகிறார்:

''இதோ; ஆற்றுப் பெருக்குப்போல் அவள் மேல் சமாதானத்தை நாம் பொழிந்திடுவோம்''... *(இசயா 66:10-12)*.

வித்தொன்று வேரூன்றி முளை கொண்டு விருட்சமாக வளர, நல்ல விளைநிலம் தேவையானது மரியாள் அதற்கு ஏற்ற பெண்ணாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாள். காவுலே

அவளைத் தேர்ந்து கொண்டார். இறைவாக்குகள் பல அதைப்பல நூற்றாண்டுகளுக்கு முன் வரவேற்றுக் கூறி நின்றன.

''யெஸ்ஸேயின் தண்டிலிருந்து ஒரு தளிர் கிளைக்கும், அதன் வேரிலிருந்து ஒரு கிளை தோன்றும், ஆண்டவருடைய ஆவி அவர் மேல் தங்கும்,...... இசையாஸ் (11: 1,2).

கன்னி மரியாள் தேவ குமாரனைக் கருத்தாங்கியிருந் தாள். குற்றப்பட்ட பெண்களைப்போல், மறைந்து வாழவோ வெட்கப்படவோ அவள் மனம் இசையவில்லை.

தனது உதரக்கனி பற்றிய பெருமையும் இன்பமும் பொங்கியெழ மலை நாட்டுப் பிரயாணத்தை மேற்கொண் டாள். மரியாள் கழுதையை விட்டிறங்கி வீட்டினுள் பிர வேசித்ததும், எலிசபெத்தை வாழ்த்தினாள்.

எலிசபெத் பரிசுத்த ஆவியால் நிரப்பப் பெற்று ''பெண் களுக்குள் ஆசீர்வதிக்கப் பட்டவள் நீரே, என் ஆண்டவருடைய தாய் என்னிடம் வர நான் வாய்ப்புப் பெற்றது எப்படி?

உமது வாழ்த்து என் காதில் ஒலித்ததும் என் வயிற் றினுள்ளே குழந்தை அக்களிப்பால் துள்ளியது. ஆண்டவர் வாக்கு நிறைவேறும் என்று விசுவாசித்தவள் பேறு பெற்ற வளே'' என்று உரக்கச் கூவினாள் (லூக்காஸ் 1 : 39 - 45).

தேவதூதரின் வாழ்த்தைக் கேட்டு, இன்பமுற்று, குதூ கலத்துடன் மலை நாடு வந்த மரியாளின் மனம் எலிசபெத் தின் வாழ்த்தைக் கேட்டதும் மேலும் ஆனந்தமடைந்தது. தனது உதரக் கனியை எலிசபெத்து பெருமைப்படுத்திக் கூறிய வார்த்தையில் அளவற்ற மகிழ்ச்சியுற்றாள் மரியாள்.

எலிசபெத்து முதிர்வயதடைந்த உறவினள், மரியாளோ சிறிய கன்னிப் பெண். இச்சிறிய பெண்ணின் வரவில் மகிழ்ச்சி கொண்ட எலிசபெத்து ''என் ஆண்டவரின தாய்'' என்ற வாக்கியத்தை நிறைவாகக் கூறி விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்குக் கிடைத்த பேறு எலிசபெத்தின் மனதில் புதிய எண்ணத்தை உண்டு பண்ணி விட்டதை உணர்ந்து மேலும் மேலும் களி கூர்ந்தாள் மரியாள்.

கடவுளுடன் நட்புறவு பூண்டு இறைபக்தியுடன் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு செப, தப, தியானங்களே வாழ் வாகும். அவற்றிலிருந்து அவர்கள் தெரிந்து கொள்ளப்பட்ட வர்களாகின்றனர், கடவுளின் விசேட வரங்களும் தரிசனங் களும் அவர்களுக்கு கிடைக்கும் பேறுபெற்றவர்களாகின்ற னர். இவ்வாறான ஒரு நிலையையே மரியாள் அடைந்திருந் தாள்.

இந்தப் பேற்றில் தாயும் சேயும் பங்கு கொண்டனர். வானதூதன் ''அருள் நிறைந்தவளே வாழ்க'' என்று தாயை யும் ''உன்னதரின் மகன் எனப்படுவார்'' என்று சேயையும் வாழ்த்தினார்.

எலிசபெத்தின் வாழ்த்துதலில், ''பெண்களுக்குள் ஆசிர் வதிக்கப்பட்டவள் நீரே'' என்று தாயும் ''உம்முடைய வயிற் றின் கனியும் ஆசிர்வதிக்கப்பட்டதே'' என்று சேயும் வாழ்த் தப்பட்டார்கள்.

மரியாள் கடவுளுக்குள் நிறைவான மகிழ்ச்சியடைந்தாள். ஒரு தச்சனுக்கு மனைவியாக ஒப்பந்தம் செய்யப்பட்ட ஏழை பெண் அவள். திருமண இன்பங்களை அனுபவியாதவள். இத்தனை வாழ்த்துகளையும் ஏற்றுக் கொண்டபோது ஆவி யில் நிறைந்து மகிழ்ச்சிக் கீதம் ஒன்றைப் பாடினாள்.

''என் ஆன்மா ஆண்டவரை ஏத்திப் போற்றுகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைந்து என் இதயம் களி கூருகின்றது. ஏனெனில் தாழ் நிலை நின்ற தம் அடிமையைக் கடைக்கண் நோக்கினார்.

இதோ! இந்நாள் முதல் எல்லாத் தலை முறைகளும் என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் வல்லமைமிக்கவர் எனக்கு அரும் பெரும் செயல் பல புரிந்தார்; அவர் தம் பெயர் புனிதமாமே'' ...... (லூக்காஸ் 1: 46 - 55).

மரியாளின் இருதயத்தின் நிறைவை வாய் பேசிற்று. இந்த மகிழ்ச்சியோடு மரியாள் சக்கரியாஸ் எலிசபெத் தம் பதிகளின் இல்லத்தில் மூன்று மாதங்கள் தங்கி அவர்களுக்கு உதவிகள் செய்து வந்தாள். அந்த இல்லத்தில் இறையருள் நிறைந்திருந்தது.

தேவதூதரின் தரிசனை பெற்ற சக்கரியாஸ் இறைவாக்கை நம்பாதிருந்ததினால் வாய் பேசாதவராய் இருந்தார். எலிசபெத்துக் காலம் நிறைவேறிய போது ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு அருளப்பன் என்ற பெயரை பலகையில் எழுதிக் கொடுத்த நேரமே அவரது வாய் திறக்க, நா கட்டவிழ பேசத் தொடங்கி கடவுளைப் போற்றினார். வானவரின் தரிசனையைப் பெற்ற சக்கரியாசின் சிற்றில்லம் இறையின்பம் நிரம்பியிருந்தது. அங்கு விருந்தினளாக வந்து தங்கி இருந்து எலிசபெத்துக்கு உதவிகள் செய்த மரியாளும் இறையருள் பெற்றவளும் வானதூதரின் தரிசனை பெற்றவளுமாயிருந்தாள்.

சக்கரியாஸ் குடும்பத்தில் இவ்வாறான ஒரு மகிழ்ச்சியான சம்பவம், அவர்களுடைய முதிர்வயதிலேதான் சம்பவித்தது. இந்த அதிசயமான நிகழ்ச்சி யூதேயா மலை நாடெங்கும் பரவியது. ''இக்குழந்தை எத்தகையவன் ஆவானோ?'' என்று மக்கள் அச்சம் கொண்டனர்; வியந்தனர்.

சக்கரியாஸ் பரிசுத்த ஆவியால் நிரப்பப் பெற்று, இறைவாக்குரைத்தார்.

அதில் முக்கியமான சில வசனங்கள்--

''இஸ்ராயேல் கடவுளான ஆண்டவர் போற்றி, ஏனெனில் தம்மக்களைத் தேடி வந்து விடுவித்தருளினார்'' .........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தம் அடியானாகிய தாவீதின் குலத்திலே மீட்கும் வல்லமை எழச் செய்தருளினார்''......

| இறைமகன் மெசியா | அருளப்பர் |
| --- | --- |
| ''மக்களைத் தேடிவந்து விடிவித்தருளினார். தாவீதின் குலத்திலே மீட்கும் வல்லமை பகைவரின் கையினின்றுவிடுதலை பெற்று...... புனிதத்தோடும் நீதியோடும் அவருக்கு பணிபுரிய...... பரிசுத்த உடன்படிக்கையை நினைவு கூர்ந்தருளினர்.'' (லூக்கா 1: 68-75). | ''உன்னதரின் வாக்குரைப்பவன் எனப்படுவாய்'' ''பாவமன்னிப்பில் உளதாகிய மீட்பை அவர் தம் மக்களுக்கு அறிவித்து, ஆண்டவருடைய வழிகளை அமைக்க அவர் முன்னே செல்வாய்'' (லூக்கா 1: 76-77). |

சக்கரியாஸ் இறைவாக்குரைத்தார். இந்த இறைவாக்குகளையும், வானதூதர் கூறிய வார்த்தைகளையும் கிரகித்து, அதைத்தன் உள்ளத்துள்ளே வைத்து, மௌனமாகச் சிந்தித்தாள் கன்னி மரியாள். தனிச் செபத்தில், தியானத்தில் ஆழ்ந்திருப்பது அவளின் சிறந்த செயல். இத்தகைய இறைமைக்குரிய பல சம்பவங்களும் வார்த்தைகளும் மரியாளைப் பேறுடையவள் என எண்ண வைத்தாலும், தனது தாழ்மை, எளிமை, அமைதி போன்ற குணங்களினால் மக்கள் முன் அமைதியாகவும் அடக்கமாகவும் வாழ்ந்து கொண்டிருந்தாள். மரியாள் அங்கு தங்கியிருந்த காலத்தில் சக்கரியாஸ் தம்பதிகள் அவளுடைய ஆன்மீக வாழ்வையும், இறைபக்தியையும் நன்கு கண்டுணர்ந்திருந்தனர்.

''தாவீதின் குலத்திலே மீட்கும் வல்லமை எழச் செய்தருளினார்'' என்ற இறைவாக்கை சக்கரியாஸ் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டே கூறினார்.

இறைவாக்குகள் எல்லாம் நிறைவேறின. இறைவாக்குகளில் பல. அதைக் கூறியவர்களின் காலங்களில் நிறைவேறவில்லையாயினும், எழுத்துச் சுருள்களில் எழுதப்பட்டு மக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்கும், முக்கியமாக வேத பாரகர், பரிசேயர், குருக்கள் ஆகியோருக்கும் தெரிந்த விஷயங்களாகவே இருந்தன. சக்கரியாசின் வாக்குகளோ எழுதப்படவில்லை. மரியாளுக்குரிய இறைவாக்குகளை மரியாள் பகிரங்கப் படுத்தவும் இல்லை. இயேசு மரித்து, உயிர்த்து விண்ணேற்றம் அடைந்த பின்பே, சீடர்களுக்கு அறியப்பண்ணினார். மரியாள் அடக்கம் என்ற பெண் தன்மையின் பூரண நிலையைக் கடைப் பிடித்திருந் தாள். சக்கரியாசின் இறைவாக்கு நற்செய்தியிலேயே எழுதப் பட்டிருக்கிறது. சீடத்துவப் பணியை உயர்ந்த முறையில் காப்பாற்றினாள் அவள்.

ஏறக்குறைய மூன்று மாதங்கள் எலிசபேத்தோடு தங்கி யிருந்த பின்பு மரியாள் வீடுதிரும்பினாள். சந்தோஷத்தோடு கணவரை தன் இல்லத்தில் சேர்ந்து வாழத் தொடங்கினாள். தன் கணவருக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளையெல்லாம் அன்பாகச் செய்து அவரைச் சார்ந்து வந்தாள்.

அவள் கருத்தாங்கி இருந்தது சூசையப்பருக்குத் தெரிய வந்தது அவளை விலக்கிவிட அவர் விரும்பினார். இதோ! ஆண்டவருடைய தூதர் அவருக்குக் கனவில் தோன்றி, ''சூசையே, தாவீதின் மகனே, உம்முடைய மனைவி மரியாளை ஏற்றுக் கொள்ள அஞ்ச வேண்டாம். ஏனெனில் அவள் கருவுற் றுற்றிருப்பது பரிசுத்த ஆவியால் தான், அவள் ஒரு மகனைப் பெற்றெடுப்பாள். அவருக்கு இயேசு என்று பெயரிடுவீர், ஏனெ னில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்'' என்றார் (மத்தேயு 1: 18- 21).

''ஆண்டவருடைய தூதர் தமக்குக் கட்டளையிட்டவாறு தம் மனைவியை ஏற்றுக் கொண்டார். அவள் தன் தலைப் பேறான மகனைப் பெற்றெடுக்கும் வரை அவர் அவளை அறியாதிருந்தார்.'' இவ்வாறு புனித மத்தேயு மரியாளின் வாயிலாக தாம அறிந்த விபரங்களை எழுதிவைத்திருக்கிறார்.

இந்த விபரங்களிலிருந்து மரியாள் ஒரு பேறு பெற்ற பெண் என்று உலகம் அறியக் கூடியதாக இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை'' (லூக் 1: 34 – 38).

செபவாழ்வு வாழ்ந்த கன்னியின் ஆழ்ந்த சிந்தனைகள், தியானங்கள் அவனைக் காப்பாற்றும்

''அவருடைய மந்தையின் ஆடுகள் நாம்'' (சங்கீ 99: 3).

மரியாளுக்குக் கிடைத்த பேறுகள் ஒவ்வொன்றும் இறைமை அனுபவம் பெற்றவை. அவள் தனது விசுவாசமும் நம்பிக்கையுமுள்ள செப சீவியத்தை தினமும் நடத்தினாள். ஒரு முட்டைக்குள் இரு கரு இருப்பது போல், தெய்வீகமும் மனுஷீகமும் உள்ள சிசு ஒன்று அவளின் உதரத்தில் வளர்ந்து கொண்டிருந்தது.

செசாரின் உத்தரவுப்படி மக்கள் தொகையைக் கணக்கிட கட்டளை பிறந்த போது அனைவரும் பெயரைப் பதிவு செய்யத் தத்தம் ஊருக்குச் சென்றனர்.

பலஸ்தீனத்தில் யூதேயாவும் கலிலேயாவும் சிறப்பு மிக்க பகுதிகள். பலஸ்தீனம் மலைவளம், நில்வளம், நீர் வளம் நிரம்பியது. ஆடுகளுக்கோ, இடையருக்கோ குறை கிடையாது. மேய்ப்பர்களும் ஆட்டு மந்தைகளும் அன்றாடக் காட்சிகள். மலைச்சாரலில் சாரோனின் றோஜா அழகாகப் புஸ்பிக்கும்.

கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து யூதேயாவிலுள்ள பெத்லெகேம் சென்றனர் இவ்விளம் தம்பதிகள். ''அவர்களுக்குச் சத்திரத்தில் இடம் கிடைக்கவில்லை'' (லூக் 5 6,7).

பெத்லெகேம் நகர்புறத்து மலைச்சாரலிலேயுள்ள ஒரு குகையும் மாட்டுத் தொழுவமுமே அவர்களுக்குப் புகலிடமானது.

''அவர்கள் அங்கிருந்தபொழுது அவளுக்குப் பேறுகாலம் வந்தது. அவள் தன் தலைப்பேறான மகனை ஈன்றெடுத்து, துணிகளில் பொதிந்து முன்னிட்டியில் கிடத்தினாள்'' (லூக் 2:, 67).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைச்சாரல் குகை ஒன்றிலே சாரோனின் றோஜாவாக தேவத்திருமகன் மலர்ந்து காட்சியானார்.
குழந்தையோ அவளுடைய கன்னிமையின் முதற்கனி நள் ளிருள், நடுங்குங்குளிர், மாட்டுத் தொழுவம், கந்தைத்துணி

இவையே மரியாளும் சூசையும் குழந்தையும் கண்ட ஏழு மையிம் தாழ்ந்த நிலை.

வாடையில் ஆடையின்றி உடல்நலிய, கந்தையால் சுற் றிப் போர்த்தாள் அன்னை.

அரியணை ஏது? பஞ்சணை ஏது? பொற் தொட்டில் ஏது? மாடடையும் குடிலே மனம் நிறைந்த மனை. புல்லணையே மஞ்சம்.

மானிலம் வாழ, மனுக்குலம் ஓங்க கந்தைக் கோலனாய் மந்தைகள் நடுவில் வந்துதித்த தன்மைந்தனை அன்னை மனம் மகிழ்ந்தேற்று மலர்ந்தது.

மக்கள் மனதில் ஒளி பிறக்க வேண்டிய காலமும் வந்தது உண்மை ஒளியும் பிறந்தது. எதிர்பார்த்துக் காத்திருந்த ஒளி பிரகாசித்தது.

வஞ்சக நெஞ்சங்களும் நீதியில்லாத ஆளுநரும், நேர்மை யில்லாத குடும்பங்களும் நற்கனி கொடாத மாந்தரும் மலிந்த காலத்தில் இப்பாலகன் உதித்தான்.

நங்கையின் நெஞ்சம் ஏங்கியது. இறையெண்ணம் மறைந்து, லௌகீக இன்பங்களையும், சுகத்தையும், பெருமை யையும் நாடும் மக்கள் நடுவில் இறைமகனார் வந்துதித்தார்.

"உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார்... அவரே ஆண்டவ ராகிய மெசியா"... (லூக். 2 : 8 - 14).

நம்பிக்கையூட்டும் சுடர் ஒளியில் இடையர் கேட்ட இச் செய்தி அவர்களை வியப்பில் ஆழ்த்தியது. தேவதூதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியபடி அடையாளம் தேடி முன்னிட்டியை அடைந்தனர், கண்டனர், வியந்தனர், வணங்கினர்.

வானவர் கீதம், சுடர் ஒளி, வார்த்தைகள ஆகிய நற் செய்திகள் இடையர் வாயிலாக வெளிவந்தவை.

பத்து மாதத்துக்கு முன் தேவதூதன் கூறிய வார்த்தை களும், தற்போது இடையர் வாயிலாக வெளிவந்த வார்த்தை களும் மரியன்னையை வியப்பில் ஆழ்த்தின.

''மரியாளோ இந்நிகழ்ச்சிகளை எல்லாம் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்து வந்தாள்'' (லூக். 2 : 19).

''அப்பா, தந்தாய்'' என விளித்து குழந்தையை உள்ளங் கைகளில் ஏந்தித் துதித்து முன்னொருநாள் ''அடிமை'' என தன்னை இறைவனிடம் அர்ப்பணித்ததை அன்றும் நினை வுறுத்தி இருப்பாள் அல்லவா?

அக்கால முறைப்படி சங்கீதங்களைப்பாடி செபித்திருப் பாள். தன்னோடு இறைவன் உறவு கொண்டுள்ளார் என விசுவாசித்து துதித்திருப்பாள். மரியாளிடம் உள்ள ஆழ்ந்த இறையனுபவம் இது. அவளுடைய நெஞ்சே கோயிலாக மாறியிருந்தது.

''பெத்லேகேமில் மீட்பர் பிறப்பார் என்னும் இறை வாக்கை மிக்கேயாஸ் முன்னமே கூறியிருந்தார்'' மிக்கே. 5 : 2.

எபிரேய மொழியில் பெத்லேகேம் என்பதற்கு ''அப்பத் தின் வீடு'' என்பது அர்த்தமாகும். அதற்கொப்ப இறை வாக்கினரால் பல நூற்றாண்டுகளுக்குமுன் அறிவிக்கப்பட்ட வாழ்வின் அப்பமான மெசியாா அங்கு பிறந்தார். பிற் காலம் இயேசு ' வானத்திலிருந்து இறங்கிவந்த சீவிய அப்பம் நானே'' என்றும் கூறியிருந்தார்.

இயேசு தாவீது அரசனின் வாரிசு. பெத்லெகேம் தாவீது அரசன் பிறந்த ஊர். அங்கு உறவினர்கள் பலர் சூசைக்கு இருந்திருக்கலாம். அப்படியிருந்தும் அவர்கள் தங்க இட மின்றித் தவித்ததுபற்றி நினைவூட்டுகிறது இந்த இறை வாக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உமது நாட்டில் நீர் அந்நியனைப்போல் இருப்பதேன்? இராத்தங்க நின்ற வழிப்போக்கனைப்போல் இருப்பதேன்?'' (எரேமி 14 ; 8).

இறைவாக்குகள் எல்லாம் நிறைவேற, கன்னிமரியாள் பெத்லெகேமின் ஒதுக்குப்புறக் குகை ஒன்றில் தன் குழந்தையைக் கையேந்தி, மார்போடணைத்து, பாலூட்டித் தாலாட்டினாள். வானவர் கீதம்போல அவளுடைய தாலாட்டும் இனிமைமிக்கதாய் இருந்தது. மரியாளின் உள்ளத்தில் நிறைவு இருந்தது. பிற்காலத்தில் அந்த நிறைவின் இன்ப நிலையை இத்தாலிய ஓவியர் மைக்கேல் ஆஞ்செலோ அழகிய சித்திரத்தில் வடித்துக் காட்டியிருக்கிறார்.

மரியாள் பேறுபெற்றவளாய் இருந்தாள் என்பதை இறைவாக்குகளும், தேவதூதரின் வாக்குகளும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் எடுத்துக்காட்டி நிற்கின்றன. அவள் சீடத்துவத்தை மேற்கொண்டாள்.

மரியாளின் கையிலுள்ள குழந்தையை நாம் கைப்பற்றிக் கொண்டு மரியாளைப் புறக்கணிக்க முடியாது. மரியாள் அன்றிலிருந்து பாலனை பாலூட்டி வளர்த்தாள். குழந்தையைக் கண்டு குதூகலித்தாள்.

யூத வழக்கப்படி சூசை மரியாளையும் குழந்தையையும் யெருசலேம் தேவாலயத்துக்குக் கொண்டுசென்று காணிக்கைப் பொருளாகிய ஒரு சோடி புறாக்குஞ்சுகளையும் கொண்டு சென்றார். காணிக்கையை யூத முறைப்படி செலுத்தினார்.

அத்தருணம் சிமியோன் குருஅங்கு வந்து குழந்தையைக் கையில் ஏந்தி வசனித்த வார்த்தைகள் இறைவாக்குப் போன்றிருந்தன. ''மக்கள் அனைவரும் காண நீர் ஆயத்தம் செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டுகொண்டன. இதுவே புறவினத்தாருக்கு இருள் அகற்றும் ஒளி''... என்றும் மரியாளைப் பார்த்து ''உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவும்'' என்றும் கூறினார். (லூக்காஸ் 2 : 22 – 35).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூசையும் மரியாளும் இந்த வார்த்தைகளைக் கேட்டு வியந்தனர்.

'உமது மீட்பை' என்ற வார்த்தையில் மக்கள் எதிர் பார்த்திருந்த உலக ரட்சகராகிய மெசியா இவர்தான் என்ற நிச்சயமான எண்ணம் கருதப்பட்டிருக்கிறது. பெற்றோர் வியந்தனர். மரியாள் அவ் வார்த்தைகளையும் தொடர்ந்து அவர் கூறிய ''கூரியவாள்'' என்ற வார்த்தைகளையும் உள் ளத்தில் ஏற்று அமைதியில் சிந்தித்துச் சிவித்தாள்.

பேறுபெற்ற இத் தாய்க்கு மகனைப்பற்றிய எதிர்காலச் சிந்தனைகள் சேர்ந்துகொண்டிருந்தன.

மெசியா வருவார், எமக்கு விடுதலை தருவார் என பல்லாண்டு காலமாக எதிர்பார்த்திருந்த பெருந்தொகையான யூதரில் சிமியோன் ஒருவரே, வழிமேல் விழிவைத்துக் காத் திருந்தார். அவர் குழந்தையைக் கையேந்திக் கூறிய வார்த் தைகளே மரபிற்குப் பொருள் கொடுத்தன.

குழந்தையின் எதிர்காலம் பற்றியும், மரியாளின் எதிர் காலத் துன்பம்பற்றியும் அவர் கூறிய வார்த்தைகள் மரியாளின் உள்ளத்திலே பதிந்திருந்தன. பேறுபெற்ற ஓர் தாய் சிலுவை கள் துன்பங்களினூடாகவே பேறுகளை அடையலாம். எமக் கும், சிலுவைகள் துன்பங்களினூடாகவே வரங்கள் கிடைக் கின்றன. மரியாள் அனுபவித்த துன்பங்களையும் சிலுவை களையும் உலகத் தாய்மார் அனுபவித்ததில்லை. மரியாளுக்கு கிடைத்த பேறுகளையும் வேறு தாய்மார் பெற்றதில்லை. ஏனெனில் சிமியோன் கூறிய 'உமது மீட்பு' என்ற வார்த் தைக்குரியவர் மரியன்னையின் புத்திரனான இயேசு அவ ருக்கு மட்டுமே அது உரிய வார்த்தையாய் இருந்தது. இக் குழந்தையின் பெறுமதி எவ்வாறானதோ என பெற்றோர் வியந்தனர்.

ஏரோது அரசனின் மாளிகை வரை சென்ற கீழ்த்திசை ஞானிகள் தங்கள் ஒட்டகங்களுடன் மலைச்சாரல் புறம்வரை வந்து இறங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைநிறைந்த பொன், தூபம், வெள்ளைப்போளம் வைத்து குழந்தையை தெண்டனிட்டு வணங்கினர்.

மறு நாள் தேவதூதரின் ஏவுதற்படி ஏரோது அரசனிடம் செல்லாது தம் நாடுகளுக்கே பயணமாகினர். ஞானிகளின் தரிசனையால் தாயும் குழந்தையும், ஏன்? தந்தையுமே பேறு பெற்றவர்களானார்கள்.

கீழ்த்திசை ஞானிகள் அரச குமாரன் ஒருவருக்குக் கொடுக்க வேண்டிய பரிசுகளுடனேயே வந்தனர். கொடுத்தனர்.

அழைப்பிதழ் இன்றித் தரிசனைகள் கிடைத்தன.
கொண்டாட்டங்கள் இன்றி வெகுமதிகள் கிடைத்தன.
வானக உறவே இதைச் செய்தது.

கீழ்த்திசை ஞானிகள் திரும்பி வராதது கண்டு ஏரோதன் கோபவெறியானான்; சினந்தான், கொலைத் திட்டம் வகுத்தான்; பெத்லெகேமில் உள்ள குழந்தைகள் கொல்லப்பட வேண்டும் எனக் கர்ச்சித்தான்.

கனவிலே தேவதூதர் தோன்றுவதும், நிகழப் போவதைத் தெரிவிப்பதும் ஓர் வியப்புக்குரிய அரிய செயலே;

தேவதூதர் சூசைக்கு கனவிலே தோன்றினார். ''**எழுந்து பிள்ளையையும் தாயையும் கூட்டிக் கொண்டு எகிப்திற்கு ஓடிப்போம். நான் சொல்லும்வரை அங்கேயே இரும். ஏனெனில் குழந்தையை தொலைக்க ஏரோது தேடப் போகிறான்**'' *(மத்தேயு 2 : 13).*

# அன்னையும் அகதி ஆனாள் 7

இரவெல்லாம் கொட்டும் பனி; பகல் நேரமோ கோர வெயில்; அன்றைய உலகில் அக்கிரமம் தலை விரித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றது. கோபம் தலைக்கேறிய ஏரோது அரசன் விட்ட கட்டளைக்குப் பயந்து, தேவதூதர் எவிய சொல்லுக்கு இசைந்து சூசையும் மரியாளும் பாலனைக் காப்பாற்ற எகிப்துக்கு ஓடினர்.

வீட்டைவிட்டு, உறவை விட்டு நாசரேத்திலிருந்து பெத்லெகேம் வந்த இச்சிறிய குடும்பம் அன்று இரக்கமற்ற அரச சேவகரால் சித்திரவதை செய்யப்பட்டு, கொல்லப்பட்டு இரத்த வெள்ளத்தில் மிதக்காமல் காப்பாற்றப்பட்டமை நம் எல்லோருக்கும் ஒரு புதிய எண்ணத்தை உண்டு பண்ணுகிறது.

மலையிடுக்கில் கூடுகட்டி வாழும் வெண்புறாப்போல, மரியாள் தன் வாழ்க்கையில் குறுக்கிடும் எல்லா இன்ப துன்பங்களையும் இறைவனின் பாதுகாப்பில் வைத்து செப வாழ்வு வாழ்ந்தவள்,

இறைவனைக் கூவி அழைத்து, துதித்து மன்றாடி, இறை வாக்குகளை நினைவுறுத்தி வாழ்ந்தவள். அவளின் விசுவாசமுள்ள இறைவாழ்வு அவர்கள் மூவரையும் அன்று காப்பாற்றியது.

அவர்களின் எகிப்துப் பிரயாணமோ ஆபத்தானது. வியாபாரிகளும் ஒட்டகங்களுமேயன்றி மனித சஞ்சாரமற்ற வனாந்தரப்பாதை. மலைகளும் குறுகிய குன்றுகளும், பாறைகளும் பாறைக் கற்களும், பொடிமணலும் கட்டாந் தரையுமே அங்கு காணலாம்.

மரியாளின் விசுவாசமுள்ள செபம் அன்றாடம் அவர்களைக் காப்பாற்றியது.

மரியாள் குழந்தைக்குப் பாலூட்டத் தங்கிய மலைப் பாறைக் குகை இன்றும் "கன்னியின் குகை" என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. அவர்கள் ஒட்டக வியாபாரிகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து நீண்ட பாலைவனப் பாதை வழியே சென்றார்கள். மரியாளின் செப தியானங்கள் வழிப்பயணத்தை இலகுவாக்கின.

"தம்மைக் கூவி அழைக்கும் யாவருக்கும் ஆண்டவர் அண்மையில் உள்ளார்" *(சங்கி 144 : 18).*

"தீயவன் அவரை ஒடுக்க முடியாது" *(சங்கி 88 : 22).*

"உன்னதரின் அடைக்கலத்தில் இருப்பவனே, எல்லாம் வல்லவரின் நிழலில் வாழ்பவன்" *(சங்கி 90 : 1).*

மரியாள் வழிப்பயணத்தில் செபித்தாள்.

"ஆண்டவரே நீரே என் புகலிடம் நீரே என் அரண்; என் இறைவா, நான் உம்மை நம்பியுள்ளேன்" *(சங் 90 : 2).*

பழையேற்பாட்டுக் காலத்தில் இறை மக்கள் சங்கீதங்களைச் செபமாக்கி செபித்து வாழ்ந்தனர். இந்த மனநிலையோடு மரியாள் வாழ்ந்துகொண்டிருந்தாள்.

"கடவுளுடைய வார்த்தையைக் கேட்டு கடைப்பிடிப்பவள்" என்றும் *(லூக் 11 : 28).*

"கடவுளுடைய வாத்தையைக் கேட்டு அதன்படி நடப்பவள்" என்றும் லூக் *(9 : 21).*

இயேசு கூறியவை முதலில் மரியாளுக்கே பொருந்தியிருந்தது.

மக்களின் இடர்களைத் தீர்க்க, துன்பங்களைத் துடைக்க சமத்துவத்தை ஆக்க, உளவாழ்வைப் புதுப்பிக்க வையகம் வந்தவர் காப்பாற்றப்பட்டார்.

இச்சிறு கன்னி இளமையின் துடிப்பில் லௌகீக ஆசாபாசங்களை வேரறுத்து துன்ப, துயர பாடுகளில் உழவுசாலின் மேல் கோதுமை மணியாகி இறைமையின் இன்பங்களில் உதய நட்சத்திரம் போல் எமக்கு முன்னே நடந்து போகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. பி. முதலாம் நூற்றாண்டின் ஆரம்ப நாட்களில் இக்குடும்பம் அகதியானது. அக்காலத்துக்கு முன்பும், அன்றும், இன்றும் மக்களின் அகதி நிலையை எண்ணினால் புரட்சிகள் கொலைகள் பற்றிய வரலாறே மிதமிஞ்சியிருக்கும். அகதி நிலை எம்மவரையும் தொட்டு நின்றதை மறந்து விட முடியாது.

எகிப்து நாடு செல்வதும் அங்கு சில வருடங்கள் தங்குவதும் ஓர் குடும்பத்திற்கு மிகக் கஷ்டமான சீவியமே. அன்னிய தேசம், அறிமுகமில்லாத மக்கள், அத்தனைக்கும் பிதாவாகிய தேவனின் பாதுகாப்பே அவர்களுக்கு இருந்தது.

இயேசு அவர்களின் வறுமையிலும் எளிமையிலும் பங்கு கொண்டார். நீண்ட பயணங்களோ, மூடப்பட்ட கதவுகளோ, குளிரான குகையோ, அன்னிய நாடோ எதுவும் அவர்களுக்குச் சுமையற்றதாகி அவர்களை நிறைவுள்ளவர்களாக்கியது.

மனித வாழ்வோடொத்த வாழ்வை நடத்த பூமியில் வந்தவருக்கு சீவியமும் மரணமும், துன்பத்தோடு இன்பமும், வாழ்வோடு தாழ்வும், மகிழ்ச்சியோடு துக்கமும் கலந்து வருவதில் ஆச்சரியமில்லை. மரியாள் அதை நினைந்து வருந்தவுமில்லை.

மரியாளின் தனித்துவ வாழ்விலும், குடும்ப வாழ்விலும் மௌனம் சிநேகிதியாகவும், கைவேலை கூட்டாளியாகவும், செபம் துணையாளாகவும் இருந்ததினாலேயே நல்லதொரு வாழ்க்கையை தேவமகன் இயேசுவுடன் நடத்தக்கூடியவளாய் இருந்தாள்.

உலகத்திலேயுண்டான விலையேறப்பெற்ற பொருட்கள் எல்லாம் மறைவாகவும், பூமியின் ஆழத்திலும், கடலின் அடித்தளத்திலுமே இருக்கின்றன. அவற்றைக் கவனத்தினாலும், கூர்ந்த ஆராய்ச்சியினாலும், மிகுந்த பிரயாசத்தினாலுமே கண்டுபிடிக்கலாம். மரியாள் என்னும் நல்லாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு பேறுபெற்றவள் என்பதை இயேசுவின் வாழ்க்கையில் மிக ஆராய்வுடன் தேடிக் கண்டடைய வேண்டும். தாய் மகன் என்ற உறவினால் இது விளங்கும்.

"எகிப்திலிருந்து என் மகனை அழைத்தேன்" என்ற இறைவாக்கும் நிறைவேறவேண்டிய காலம் கிட்டியிருந்தது. *(மத் 2 : 15).*

"எழுந்து பிள்ளையையும் தாயையும் கூட்டிக்கொண்டு இஸ்ராயேல் நாட்டுக்குச் செல்லும். ஏனெனில் குழந்தையின் உயிரைப் பறிக்கத் தேடினவர்கள் இறந்துவிட்டனர்" (மத் 2 : 19, 20).

தேவதூதரின் வாக்கைக் கனவில் கேட்ட சூசை பயணத்துக்கு ஆயத்தமானார். நாசரேத்தூருக்கே செல்ல வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டார். அவர்கள் நாசரேத்தூருக்கே வரவேண்டியிருந்தது. ஏனெனில் அது அவர்களுடைய பழைய ஊராக இருந்தது.

# நாசரேத்தூரின் நல்லதாய் 8

நாசரேத்தூர் மக்களும் உறவினரும் இக்குடும்பத்தினரை விரும்பி வரவேற்றனர். அங்கேயே அவர்கள் பல வருடங்கள் வாழ்ந்தனர். இதனாலேயே 'இயேசு நசரேயன்' என்ற பெரும் பிற்காலம் உண்டானது.

இறையன்பு கொண்டு வாழ்ந்த பிதாப்பிதாவாகிய ஆபிரகாமைப் பற்றி சீடன் யாகப்பர் எழுதியிருப்பது மரியாளுக்கும் பொருத்தமானதே. ஆபிரகாம் கடவுளை விசுவசித்தார் அதனால் கடவுள் அவரைத் தமக்கு ஏற்புடையவர் என மதித்தார்" (யாகப்பர் 2: 33).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாள் கடவுளுக்கு ஏற்புடையவளாய் இருந்தாள் என்பதற்கு, மெசியாவுக்குத் தாயாகியது மட்டுமன்றி மக்கள் யாவரிடத்தும் நட்புறவு கொண்டே வாழ்ந்தாள் என்பது தெட்டெனப் புலனாகிறது.

இப்புத்திரனின் தாய் ஓர் உத்தமி என்றும் பாக்கியவதி என்றும் மக்கள் போற்றிப் புகழ்ந்தனர். தனது இனசனரையும் அன்பர்களையும் அவள் கண்டு சந்தோஷமுற்றாலும், தனது இறைமைக்குரிய சந்தோஷ செய்திகளை யெல்லாம் இரகசியமாகத் தன் மனத்துள்ளே வைத்திருந்தாள்.

வீட்டுவேலை செய்தல், ஊற்றுக்குப் போய் நீர் மொண்டு கொண்டு வருதல், கோதுமை அரைத்தல், மாப்பிசைதல் போன்ற நாளாந்த முயற்சிகளோடு, ஓய்வு வேளையில் நூல் திரித்து உடை பின்னும் வேலையையும் செய்தாள்.

பிள்ளையோ எழில் மிக்கதாகவும், கீழ்ப்படிதல் உள்ளதாகவும், அறிவுள்ளதாகவும் இருந்தது. குழந்தையின் அமுத மொழிகள் அவள் காதில் கானமாய் ஒலித்தன. இறைவனை அறியப் பண்ணும் கடமையையே இத்தாய் முதற் கடமையாகக் கொண்டாள். தந்தை சூசையும் தனது தச்சு வேலை முடிந்ததும் வீட்டில் வந்து இளைப்பாறும் போது குழந்தையை மடியிலும், மார்பிலும், தோளிலும் ஏற்றி நிறைவு கொள்வார். உள்ளம் பூரிப்பார் பார்த்தறிதல் கேட்டறிதல், அமைதல். உதவிசெய்தல் போன்றவை குழந்தையிடம் இயற்கையாய் அமைந்துள்ளதை இப் பெற்றோர் நன்கறிந்திருந்தனர்.

''பாலனோ வளர்ந்து வலிமை பெற்றார்; ஞானம் நிறைந்தவராகவும் இருந்தார்; கடவுள் அருள் அவர் மீது இருந்தது (லூக்காஸ் 2: 40).

நாசரேத்தூரின் இக்குடும்பம் இல்லத்தரசியாகிய மரியாளின் பெருமைக் குரிய இறைமைப் போக்கிலேயே வழி நடத்தப்பட்டது என்பது தெளிவாகத் தெரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் பாலகனுக்கு யூதகுல முறைப்படி செபம் செய்யக் கற்றுக் கொடுத்தாள். நாசரேத்தூர் சிற்றாலயத்துக்கு அனுப்பி எழுத்துக்களைக் கற்கவும் பழைய வேதாகம சுருளை வாசிக்கக் கூடியதாகவும் அறிவு பெறச் செய்தாள்.

சிறுவன் குமாரப் பருவம் அடைந்ததும் தந்தைக்குத் தச்சு மாலில் உதவி செய்தல், தாய்க்கு வீட்டில் உதவி செய்தல் போன்ற கடமைகளையும் செய்யக் கூடியவரானார்.

யூதர் சனிக்கிழமையை ஓய்வு நாளாக அனுசரிப்பது வழக்கம். இக் குடும்பத்தினரும் ஓய்வு நாள் அனுசரணையில் முதலிடம் வகித்து நின்றனர். குமரன் இயேசுவும் எழுந்து நின்று வேதாகமச் சுருளை உரத்து வாசிப்பதை வழக்கப் படுத்திக் கொண்டார். தாயும் தன் மைந்தனும் செபங்களை மௌனமாகவும், உரத்தும் செபிக்கக் காட்டி வைத்தாள். இத்த ஓய்வு நாள் அனுசரணை குமரன் இயேசுவுக்கு மிகவும் பிடித்த செயலாக இருந்தது. அவர் தனது இறைத் தந்தையின் சிந்தனையில் இருக்க இந்த ஒழுங்கு முறைகள் அவருக்கு இன்பமூட்டின.

தாய் தந்தையரின் முன்னிலையில் நல் வாசிப்புக்காக இறைவாக்குகளையும் கூறுவார். இரவில் தாவீதின் சங்கீதங்களைப் பாடி மகிழ்வார். அன்னையின் எண்ணங்களில் அவர் உன்னத புத்திரனாகவும், உள்ளத்தின் நினைவிலே அவளின் ஒளிச் சுடராகவும் கண்களின் காட்சியிலே சுகந்த புஷ்பமாகவும் தோன்றினார்.

பன்னிரண்டு வயதினிலே அவர் யெருசலேம் தேவாலயத்துக்குச் சென்றபோது நடந்த சமபவங்கள் அத்தாயைக் கலங்கடித்துவிட்டது. தேவாலயத்திருவிழா முடித்துவிட்டு வந்த கூட்டத்துள் மரியாள் சிறகிழந்த பறவைபோலத் துடிதுடித்தாள். ஆசை மகன் அவர்களோடில்லை.

தன் மகனைப்பற்றிய உயர்ந்த எண்ணங்களிலிருந்து, கீழே தாளக் குதித்ததுபோல உணர்ந்தாள் அன்னை: சிமியோன் கூறிய வார்த்தைகள் எல்லாம் மின்னி, மின்னி மறைந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன. பிள்ளையைத் தேடினார்கள். மூன்றாம் நாள் கோயிலிலே தன் அருமைப் புத்திரனைக் கண்ட தாய், அவர் கூறிய வார்த்தைகளுக்கு விடை கூறத் தெரியாதவளாகி திகைத்து நின்றாள். "ஏன் என்னைத் தேடினீர்கள்?"

"என் தந்தையின் இல்லத்தில் நான் இருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்றார். இந்த வார்த்தையில் தாய் தன் பிள்ளையை நன்கு அறிந்திருந்தாள். கண்டித்தாளா? தண்டித்தாளா? அன்புடன் அணைத்துச் சென்றாள். சிலுவையில் "அம்மா இதோ உமது மகன்" என்று அருளப்பரைக் கொடுத்த நேரம்வரை இறைத் தாயாகவே வாழ்ந்துகொண்டிருந்தாள், அவர் போதிக்கமுன் பன்னிரண்டு வயதில் வாய் திறந்து முதல் முதல் பேசிய வார்த்தை "என் தந்தையின் இல்லத்தில் நான் இருக்க வேண்டும்" என்பதே. "என் தந்தையின் இல்லம்" என்று தேவாலயத்தை இச் சிறு முனி குறிப்பிட்டபோது அதன் உட்கருத்து ஒருவருக்கும் விளங்கவில்லை என்கிறார் நற்செய்தியாளர் லூக்காஸ்.

முற்றத் துறந்த ஒரு முனிவர் கூறவேண்டிய வார்த்தை அல்லவா இது? என அங்கலாய்த்திருப்பாள் மரியாள் பின்பு அவர் அவர்களோடு புறப்பட்டு நாசரேத்துக்கு வந்து அவர்களுக்குப் பணிந்திருந்தார்.

அத் தாய் தன் மைந்தனை எவ்வளவு கண்ணியமாகவும் அன்பாகவும் நடத்தினாள். அது முப்பது ஆண்டுகளுக்கு நீடித்திருந்தது. அக்குடிசையில் மீறுதல்கள், மறுப்புகைகள், ஆதிக்கப் பேச்சுக்கள், புரட்சிகள் எதுவும் தலைகாட்டவில்லை, அதற்கு அன்னையின் குடும்பச் சிறப்பு ஒரு எடுத்துக்காட்டு. அவர் தன் தாயை அருளின் இருப்பிடமாகவும் அன்பின் பிறப்பிடமாகவும் மதித்து வாழ்ந்து காட்டினார்,

ஊரில் நடக்கும் சண்டை சச்சரவுகளில் மரியன்னை கலந்து கொள்ளாது, அமைதியின் வாழ்வொன்றைக் கடைப்பிடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீர் மெள்ளப் போகும்போதெல்லாம் யாவருடனும் அன்பாகப் பேசி, தேவையான நற்போதனைகள் கூறி, ஆறுதல் மொழிகளினால் அவர்களுக்குத் தாயாகி நிற்பாள்.

மரியன்னையின் நல்மனமும் நற்சிந்தனைகளும், நல்லதைச் செய்யவேணும் என்னும் இனிய இதயமும் இயேசுவுக்கும், கணவர் சூசைக்கும் இனிய வாழ்வைக் கொடுத்தது.

''இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை''... பிள்ளையின் நல் வளர்ச்சிக்குரிய தாயாக வாழ்ந்த மரியாள் குடும்பத்தின் ஏழ்மையைத் தனது இனிய சுபாவங்களினால், எல்லாம் இருப்பதுபோலவே காட்டி வாழ்ந்துகொண்டிருந்தாள்.

பத்து மாதம் வளமாய வயிற்றில் சுமந்து, நடை பயிலும் வரை மடியில் ஏற்று, சிறுநடை பயிலும்போது கரத்தில் பிடித்து, குமரனாகியதும் கும்பிட்டு வழியனுப்பும் ஒரு தாய் புவியில் இருப்பாள் என்றால் மண்ணகமே விண்ணகமாகி விடாதோ? மரியாள் நாசரேத்தூரில் யாவருக்கும் வாழ்ந்து காட்டினாள். அவ் வாழ்வு புனிதமாய் இருந்தது. சீடத்திற்குரிய புதுவாழ்வே அது.

இயேசு அன்பு, அன்பு என்று முரசறைந்து போதித்தார். நாசரேத்தூர் நல்ல தாயிடம் அவர் கற்ற அன்பு அவருடைய வார்த்தையிலும் செய்கையிலும் கலந்திருந்தது. நெஞ்சின் அன்பிலும், வறுமையின் வியர்வையிலும் அருள் சுரக்கும் வாக்கியங்களை அவர் நாசரேத்தூர் நல்ல தாயிடம் கற்றார் என்பதை நாம் மறக்க முடியாது.

மக்களை விடுதலையாக்கும் தேவ குமாரனை வளர்க்கும் வரை அவள் ஒய்ந்திருக்கவில்லை. ஈற்றில் எம்மை மன்னித்து மீட்பளிக்க அவள் தான் பெற்ற மைந்தனையே பலியாக்கினாள். ஆன்மாக்களைக் கொள்முதலாக்கி வாங்கிக் கொள்ள மரியாள் தன் புத்திரனை இளம் கடாவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்து விற்று பலியாக்கத் தன்னைத் தயாராக்கி நின்றாள். இவ்வாறே இன்பத்தையும் துன்பத்தையும் தன்னுள்ளத்தில் இருத்திச் சிந்தித்து வாழ்ந்தாள்.

மரியாள் தன் குடும்பத்துக்கு மட்டும் உரிய நல்ல தாயா இருக்காது உறவினர், அயலவர், அறிந்தோர், அறியாதோர், இரவலர், அகதிகள் யாவருக்கும் ஆதரவளிக்கும் அன்னையாக நாசரேத்தூரில் விளங்கினார்.

வறுமைக் கோட்டுக்கு மேலே செல்லாத மரியன்னை, வாழும் மேட்டுக்குக் கீழேயும் இறங்கிவிடவில்லை, தன்னைப் போலப் பிறனை நினைக்கும் அன்னைக்கு தந்தையும் மைந்தனும் இசைந்து வாழ்ந்தார்கள். அவளுடைய நாசரேத்தூர் வாழ்க்கை வானத்திலே வசந்தமாய்ப் பறந்து கொண்டிருந்தது. ஏமாற்றத்துக்கே இடமில்லாத அக்குடிசையில் தானாக வந்திறங்கிய இறைமை வாழ்வு அவர்களுக்கு ஓர் இயக்க சக்தி போல் அமைந்திருந்தது. "மாண்புமிக்க வான் தலத்தில்"... ...

இறையன்பின் மேல் தாகத்தையும், பிறரன்பின் மேல் ஆர்வத்தையும் வளர்த்தது யார்? அன்னையா? மகனா? நாமே பதில் சொல்ல வேண்டும்.

ஒடுக்கப்பட்டோர்க்கு உரிமை வாழ்வு வழங்கத் தீவிரித்த மகனை, கரம்பிடித்து அழைத்து வந்த அன்னை, ஒரு புதிய வாழ்வை உருவாக்கும் பருவம் வரும் வரை தனது சிற்றுக் குடிசையில் அவரை அன்பினால் கட்டியணைத்து வழி நடத்தினாள்.

புதிய வாழ்வை நோக்கிச் செல்லும் மகனின் வழிப் பயணத்திலே உடனிருந்து உதவி செய்து வைக்க மூட்டி வழிப் பயணத்துக்கும் ஆதரவாளியாக ஆயத்தமாயிருந்தாள் அந்தத் தாய். பயணத்துக்கு ஆதரவாளியாய் இருந்தபடியினால் கண்ணீருடன் பயணமனுப்பவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு நாசரேத்தூரில் வாழ்ந்த வாழ்க்கைக்கும் அவர் தொடங்கிய புதிய வாழ்க்கைக்கும் பல வேறுபாடுகள் இருந்தன. இப்படி வரும் என மரியாள் அறிந்தும், ஏற்றும் இருந்தாள்.

''நீங்கள் இவ்வுலகத்தைச் சார்ந்தவர்கள் அல்லர்''. அவருடைய மூன்று வருட வாழ்வில் தமது சீடர்களுக்கும் இவ்வாறு கூறியிருந்தார் இயேசு. அதேபோல இயேசுவும் இவ்வுலகைச் சார்ந்தவர் அல்லர் என்பதை மரியாள் அறிவாள்

தந்தை சூசை உயிருடன் இருக்கும் வரையும் மகனும் தாயும் அவருக்குரிய சேவைகளை நிறைவாகச் செய்தனர். வயது வந்த வாலிபனாக இருந்த இயேசு தனது முழுக் கவனத்தையும் தந்தை மீது செலுத்தினார். சூசை நல்மரணமடைந்தபோது உடனிருந்து வழியனுப்பிய தாயும் மகனும் தம்முள் ஒருவரை ஒருவர் அனுதாபத்துடன் வழி நடத்தி வாழ்ந்தனர்.

தந்தைக்குப் பின் தானே பொறுப்புணர்ச்சியுடன் குடும்பத்தை நடத்திய மகனைக் கண்ணுற்ற தாய் தனது பூரணமான அன்பையும் அனுதாபத்தையும் மகனிடம் காட்டி நின்றாள்.

நமது நாடுகளில் குடும்பத் தலைவர் இறந்து விட்டால், புத்திரர் சிலர் தாயின் சொற்படி நடவாது தம்மெண்ணப்படி நடந்து ''கைம்பெண் வளர்த்த கழுதை'' என்ற சொல்லுக்குரியவர்களாகி விடுகின்றனர்.

இயேசு நசரேயன் தாய்க்குக் கண்ணியத்தைத் தேடிக் கொடுக்கும் மகனாக இருக்க, அன்னையோ தன் புத்திரனை ''அவயத்துள் முந்தியிருக்கச் செய்ய'' விரும்பினாள். தந்தையில்லையே என்ற குறைக்கு இடமில்லாதவாறு தனயனை வழி நடத்தி வந்தாள்.

தங்களுக்குரிய அந்தஸ்திலேயே இயேசுவை வளர்த்து வந்தாள். அவர் யெருசலேம் நகரிலேயோ, கிரேக்க நாட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேயோ கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கத்தை மரியாள் கொள்ளவில்லை. தேவ மகன் தேவசுபாவத்திலேயே இருக்க மனுஷீகத்தில் அவரை அவர் தாய் சற்குருவாக வளர்த்து, மக்கள் முன் நல்லெண்ணத்தை உண்டுபண்ணி இருந்தாள்.

தந்தை தனக்கிட்ட மீட்புப் பணியைத் தான் செய்ய வேண்டும் என்பதைத் தன் தாய்க்கு அவர் அறியப்பண்ணி வைத்திருப்பார். அந்த நல்ல தாய் அதற்கெல்லாம் இசைந்து கொடுத்தாள்.

தந்தை இருக்கும் போதே அவருக்குரிய கண்ணியத்தை கொடுத்து வளர்த்தனர்; தங்கள் மகன் சிறுவனல்ல, குமரன் என்ற உயர்ந்த எண்ணத்தை யெருசலேம் தேவாலயத்தி லேயே அறிந்து, அதற்கேற்றவாறு நடந்து கொண்டனர்.

தம் குடும்பத்தில் இயேசுமகன் பல ஆண்டுகள் புத்திர னாகவும், கீழ்ப்படிவுள்ள வாலிபனாகவும், தச்சுமாலில் ஊதியம் பெறாத தொழிலாளியாகவும், உறவினருடன் உறவினனாகவும், கிராமத்தில் சாதாரண கிராமத்தவனாக வும் வாழ்கின்ற சிறப்பு வாழ்வின் மர்மம் அறிந்து அவள் ஏங்கிய நாட்கள் மாதங்களாகி பல வருடங்களாக நகர்ந்து கொண்டிருந்தன. மரியாளும் சீடத்தியாக வாழ்ந்தாள். ஏழைகள் படும் இன்னல்களையும், பணம் படைத்தோர் செய்யும் பாதகச் செயல்களையும் இயேசுவும் அன்னை மரியாளுமே கண்டு ஏக்கமுற்ற நாட்கள் பல. அதில் இறை மை உறவு கலந்திருந்தது.

கார்காலக் கும்மிருட்டிடையே தோன்றும் மின்னலைப் போல இயேசுவும் தாய் மரியாளும் நாசரேத்தூர் மக்களி டையே காட்சி கொடுத்த நாட்களும் பல. இன்ப துன்ப காலங்களில் அவர்களிடையே சென்று கலந்து வாழ்ந்தும் வந்தனர்.

கடலில் வாழும் மீனினங்கள் உப்பு நீரிலேயே பிறந்து அதிலேயே வளர்ந்து கொண்டிருந்தாலும், கடல் நீரிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உப்பு மீனின் உடலினுள் செறிந்து உவர்ப்பதில்லை. அது போலவே நாசரேத்தூர் வாழ்வும் தாய்க்கும் சேய்க்கும், தீமை, பாவம் சேர்ந்த வாழ்க்கையாக இருக்கவில்லை. இதனை, சேர்ந்து வாழ்ந்தவர்கள் உணர்ந்திருந்தனர்.

நாசரேத்தூரில் அன்னை, இயேசுவின் தாய் என நன்கு அறியப்பட்டிருந்தாள். அவள் தூய்மையில் மேம்பட்டவளா கவும், தாழ்மைமிக்கவளாகவும், பிறரன்புள்ளவளாகவும் வாழ்ந்தாள். பெண்களுக்குள் தலை சிறந்த பெண்மணியாக மக்களால் ஏற்கப்பட்டிருந்தாள். அவ்வூர் மக்கள் அன்னை யை அன்னையாகவே மதித்தனர். கண்ணியம் கொடுத்து அன்பும் கொண்டனர்.

வார்த்தையானவர் மனுவுரு எடுத்ததின் காரணமாக, இறைவனின் மீட்புத் திட்டத்தின் துவக்கத்திலிருந்தே, இறைமகனின் தாய் என நியமனம் பெற்றவள் அன்னையே. அன்னை இவ்வுலகில் மீட்பரின் அன்னையாகி, மற்றவர் களை விடச் சிறந்த முறையிலே மீட்புத் திட்டத்தில் ஒத்து ழைத்தாள். இயேசுவுக்கு உறுதுணையாக நின்று, சிலுவை யடியில் உறவுக்கு ஒத்துழைத்தாள். வானகத் தந்தையின் வார்த்தைக்குத் தாழ்ந்து போய் அடிமையானவள். ஒரு தெய்வமகனுக்கு மரண பரியந்தம் வழித்துணையும் தாயு மாகி நின்றாள். ஜோதி ஒன்று தோன்றி நகர்ந்து கொண் டிருந்தது போலவே நாசரேத்தூர் சிறிய குடும்பம் நடந்து கொண்டிருந்தது.

நாசரேத்தூர் வாழ்க்கை அன்னைக்குக் கசந்து விட வில்லை. சிமியோன் குரு அன்று கூறிய கூரிய வாள், அன்னையின் இதய அறையில் மாட்டித் தொங்கவிடப்பட் டிருந்தது.

மைந்தன் இயேசு தனது தச்சு சாலை வெறுமையாக்கி ஆயுதங்களைக் குடிசையில் அடுக்கி வைத்த நாள், அன்னை யை அழுது கூக்குரலிடவைக்கவில்லை. தன் பிள்ளையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கட்டி அழுது, அவனையும் சோக உணர்ச்சிக்கு ஆளாக்கவில்லை. ஆசி மொழிகள் கூறி வழியனுப்பினாள். மீட்புப்பணி என்ற நோக்கம் முன்னே இழுக்க தாயை முத்த மிட்டு வெளியேறினார் அப்புனித மகன்.

அன்பு அன்னை அக்குடிசையில் அமைந்து இருந்து வர இருக்கும் துன்ப எண்ணங்களை நீர் போலப்பருகினாள். தன் னுள்ளத்தில் யாவையும் சேமித்து தனக்கே உரியதாக்கிக் கொண்டாள். நிமிடம் நிமிடமாகச் செபித்தாள்.

இசையாஸ் இறைவாக்கினரின் 53ம் அதிகார வாக்கியங் களை நினைக்குந்தோறும் கண்கள் குளமாகி இருக்கலாம். கார் மேகங்களின் பின்னணியில் தோற்றும் வெள்ளி வளை யம் போல மேசியா ஆண்டவராகவும், பரிசுத்தராகவும், மீட் பராகவும், மேய்ப்பராகவும் தோன்றுவார் என எண்ணியிருக் கலாம்.

கடவுள் அனுபவத்தில் மரியாளிடம் செபம் அன்றன்று மலர்கிறது. தன் வாழ்க்கை அனுபவத்தில் இறைவனைக் காணவேணும், அனுபவிக்க வேணும், சுவைக்கவேணும் என செப வாழ்வு வாழ்ந்தவள் மரியாள்.

தனது துன்ப துயரங்களிலும், மகிழ்ச்சி நிகழ்ச்சிகளி லும், அமைதிசந்தடிகளிலும், விழிப்பு உறக்கத்திலும் தான் செய்யும் அனைத்திலும் இறைவனைக் கண்டு, கேட்டு உய்த் துணர்ந்தாள். வாழ்வும் செபமும் இரண்டறக் கலந்திருந்தது.

இந்த நிலையை நாமும் அடைய, முன்னடி வைத்தவளே கன்னிமரியாள்.

தன்நேச மைந்தனின் வாழ்வு பற்பலவகையில் முரண் பாடு நிரம்பிய தொன்று என்றும், துன்ப சாகரத்துள் மூழ்கிய பின்பு தான் அவர் இன்பத்தின் உச்சியில் ஏறுவார் என்றும் அத்தாய் சிறிது சிறிதாக உணர்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவீதின் அரியணையில் அமர்ந்திருக்க வேண்டியவர் யாக்கோபின் சந்ததியினரான இஸ்ராயேலரை அரசாள வேண்டியவர், முடிவில்லா அரசுரிமை பெற்றவர் ஆரம்ப நாளிலேயே எதிர்க்கப்பட்டு, நாடுவிட்டு நாடு சென்ற துன்பம் அன்னைக்கும் உரியதானது.

பன்னிரண்டு வயதில் இயேசு யெருசலேம் தேவாலயத்தில் கூறிய வார்த்தை முப்பது வயதாகிய பின்னும் கல்வெட்டுப் போல் தாயின் மனதில் பதிந்திருந்தது. வானகத் தந்தையின் மகன் தேவாலயங்களிலே தனது நேரத்தை இன்பமாகக் கழித்த காட்சி கண்முன் நின்று ஆறுதல் கொடுத்தது. முப்பது ஆண்டு அனுபவங்களெல்லாம் ஓவியம் போல வந்து குவிந்து அன்னையை அமைதியுறச் செய்தன.

தாவர வகையில் "தூத்துமக்கொத்தான்" என்னும் ஒரு பூண்டும், "குருவிச்சை" என்னும் செடியும் மரங்களில் வளரும். முந்தியது நிலத்தில் முளைத்து வளரும் போது தான் சந்திக்கும் ஓர் மரத்தைப் பற்றியவுடன் பூமியின் சம்பந்தத்தை விட்டு விடும். மற்றையது மரத்திலேயே முளைத்து மரத்திலேயே வளரும். இந்த வளர்ச்சியில் குருவிச்சை தான் முளைத்த மரத்தை ஆதாரமாகவும் அதன் சாரத்தை ஆகாரமாகவும் கொண்டு வளர்வதால் அம்மரம் சீக்கிரம் பட்டுப்போகும்.

இந்த இருவகைத் தாவர சாதியிலும் இறைமைக்குரிய ஆன்ம போதனை உண்டு. தூத்துமக்கொத்தான் பூமியை விடுவது போல் இறைமை வாழ்வு வாழ்பவர்கள் உலகத்தையும் பற்றுக்களையும் விட்டுவிட வேண்டும். இறைவனைப் பற்றிக் கொள்ள வேண்டும்.

இயேசு நாசரேத்துக் குடிசையையும் உழைப்பு ஊதியங்களையும் துறந்து துறவிபோலச் செல்ல, அத்தாய் கண்ணின்மக்காது பார்த்திருந்தாள். பாசத்தையும் பற்றையும் நீக்கி அன்பும் அருளும் பொங்க ஓர் இளம் துறவிபோல அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலை வழியே சென்று கொண்டிருந்த காட்சி மனோரம்மிய மாக இருந்தது.

''தம்மையே வெறுமையாக்கி அடிமைத் தன்மை பூண்டு... (பிலிப்- 2 : 7).

''அவர் செல்வம் மிக்கவராயிருந்தும், அவருடைய ஏழ்மையால், நீங்கள் செல்வராகும்படி, உங்களுக்காக ஏழ்மையானார் (2 கொரி 8 : 9)

தன்மைந்தனின் வெறுமை அடிமை நிலையிலும், ஏழ்மையிலும் அத்தாய் ஒரு புது உலகில் பிரவேசிக்கிறாள்.

அவளுடைய ஆழமான இறைச் சிந்தனையிலிருந்து, மைந்தன் கிறிஸ்து மக்களோடு மட்டுமன்று தன்னோடும் வாழ்கிறார் என்ற நம்பிக்கையில் நிலைத்திருந்தாள்.

அவர் குடிக்கும் கிண்ணத்தில் தானும் குடிக்க மனமிசைந்து வாழ்ந்தாள்.

# மரியாள் ஊருக்கு உபகாரி 9

குடிசையில் வாழ்ந்தாலும், கோயிலில் வாழ்ந்தாலும், அன்னிய நாடுகளில் வாழ்ந்தாலும் பிறருக்கு உதவி செய்வதே உத்தம வாழ்வு என மரியன்னை கருத்திற் கொண்டு வாழ்ந்தாள். சிறுமியாக இருந்த போதும், மங்கையான போதும், மாதாவான போதும் அக்கொள்கை அவளுடனேயே வளர்ந்து கொண்டிருந்தது. மாதாவில் மாறுதல்கள் இருக்கவில்லை.

தாய் எவ்வாறோ, மகன் தாயை விடப் பன்மடங்கு பேருபகாரியாய் இருப்பார் என மக்கள் எண்ணமிட்டனர். மரியாள் தனது வாழ்வில் தான் செய்த பரோபகாரச் செயல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை ஒருபோதும் வெளிப்படுத்தியதில்லை. நற்செய்தி எழுத்தாளர்களுக்குக் கூறியதும் இல்லை. தாழ்மையில் வாழ்ந்து கொண்டிருந்த அன்னை தனது மகனின் பெருமை மிக்க செயல்களையே உலகுக்குக் காட்ட விரும்பினாள். விண்ணரசு மண்ணில் மகிமையடைவதை மதித்தாள் அத்தாய். தனது மகிமைமிக்க செயல்களை மக்களுக்குக் காட்ட விரும்பவில்லை. மைந்தனையே முன்னின்று கருமம் ஆற்றவும், உதவி செய்யவும் விட்டிருந்தாள். செபத்துடனும் உபகாரசிந்தையுடனும் மைந்தனை வழிநடத்தினாள்.

''தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று''

இக்குறட் பாவில் ஒரு புகழை நோக்கிப் பிறந்து வாழ வேண்டும் என்பதும் உலகப்பிரகாரமான புகழ் பெறவேண்டும் என்பதும் தான் பொது நோக்கு. மக்கள் உலகிலே வாழ்ந்தாலும், ஆதிக்கம், பணம், பெருமை, கல்வி, தொழில் எனப்பட்ட பல்வேறு திசைகளில் தங்கள் முயற்சிகளை நடத்துகின்றனர். புகழ் ஒரு சிலருக்கே கிடைக்கின்றது.

ஆன்மீக வாழ்வில் இறைமையை முன் வைத்து பலவித தார்மீக வாழ்வை யார் யார் நிகழ்த்தி வாழ்ந்து போகிறார்களோ அவர்களுக்கெல்லாம் இவ்வுலகிலும் மறுவுலகிலும் புகழ் உண்டாகின்றது.

இயேசுக்கிறிஸ்துவைப் பெற்று வளர்த்து இறையன்புடனும், பிறரன்புடனும் வாழ்ந்த மரியாளுக்கும், வளர்ப்புத் தந்தையாக இருந்து கடமை செய்த சூசைக்கும், இயேசுவுடன் மூன்று ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்த சீடர்களுக்கும் அன்பர்களுக்கும் இறையன்பும் பிறரன்பும் காரணமாகவே புகழ் உண்டானது.

இயேசுக்கிறிஸ்து தமது சீடர்களுடன் ஒரு மணவீட்டினுள் பிரவேசித்தார். அவர்களுக்கும் அழைப்பு விடப்பட்டிருந்தது. அன்னைக்கும் மகனுக்கும் வான் புகழ் அன்றே ஆரம்பமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணவீட்டில் பந்தியில் பரிமாறும் இரசம் தீர்ந்து போனது. மரியாளின் மனதில் இரக்கம் உண்டானது அழைக்கப்பட்டவர்களும், அழைக்கப்படாதவர்களும் மணவீட்டுக்குச் செல்வது அக்கால யூத வழக்கம். பந்துக்கள் வீட்டில் இரசம் தட்டுப்பாடானது, தன் வீட்டுக்கு ஏற்பட்ட குறைபோல உணர்ந்தவள் தான் அன்னை மரியாள். தன் மகன் செய்யக் கூடிய அதிக சிறந்த கொடை ஒன்றை அன்று செய்விக்க எண்ணினாள்.

''இரசம் தீர்ந்து விட்டது''

''அம்மா அதை ஏன் என்னிடம் கூறுகிறீர்; எனது நேரம் இன்னும் வரவில்லை''

மரியாளோ மனம் கோணாது ஏவலர்களைப் பார்த்து, ''அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்'' என்றாள். ஆறு கற்சாடிகள் தண்ணீரால் நிரப்பப்பட்டன. ''முகந்து பந்தி மேற்பார்வையாளரிடம் எடுத்துச் செல்லுங்கள்'' என்றார் இயேசு.

இயேசு பல மக்கள் குழுமியிருந்த மணப்பந்தலில் பலரின் முன் இதைச் செய்தார். இயேசு தண்ணீரை இரசமாக்கினார் என்ற அருங்குறி, கானாவூர்க் கலியாண வீட்டுக்கு வந்த மக்களின் வாயால் அயல் நாடுகள் வரை பரவி, மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இந்நிகழ்ச்சி இயேசுவின் ஆரம்பப்பணியின் போது நிகழ்ந்த முதல் அருங்குறியாகும். அந்நேரத்திலும், அதற்குப் பின்பும் மரியாளுக்கும் மகிமையுண்டானது. ஏனெனில் மரியாளே அதைச் செய்யும்படி தன் மைந்தனை ஏவி நின்றாள்.

மரியாளுடைய பரோபகாரச் சிந்தனையிலிருந்தே இந்த எண்ணம் உதயமானது. ஆனால் நாம் இந்த இடத்தில் சில வினாக்களை எம்முன் பிறப்பித்து நாமே அதற்கு விடையும் காணலாம். இப்படியான வினாக்களுக்கும் விடைகளுக்கும் தூய ஆவியின் அருளை முதலில் பெற்றுக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மரியாள் எந்த அடிப்படை எண்ணத்திலிருந்து இந்தப் பெரிய அருங்குறியை செய்விக்கத் திட்டமிட்டாள்?

2. முதலில் சம்மதம் கொடுக்கத் தயங்கிய மைந்தன் தாய்க்கு இணங்கிப் போனது ஏன்?

3. மரியாள் கூறிய "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" என்ற வசனங்கள் என்ன என்ன கருத்தைக் கொண்டுள்ளவை?

4. இயேசு ஆற்றிய அருங்குறியினால் மக்கள் தங்கள் மனங்களில் என்ன கருத்தைக் கொண்டிருந்தனர்?

5. மரியாளைப்பற்றி, அங்கு கூடியிருந்த மக்கள் என்ன மன நிலையோடு வீடு சென்றிருப்பர்?

நாமே விடைகளையும் தேடிக்கொள்ள வேண்டும்.

கானாவூர் மக்கள் அன்று மிகவும் ஆச்சரியத்தில் ஆழ்ந்து, தாயுடைய பேருபகாரச் செயல்களையும், தெய்வீக ஆற்றலையும் மெச்சினர். அவர்கள் சென்ற இடங்களெல்லாம் இச் செயலை மெச்சிப் பேசினர்.

நாசரேத்தூரைத் தவிர்ந்த மற்ற யூத நாடுகளெல்லாம் யேசுவுக்கு வரவேற்புக் கொடுக்கக் காத்திருந்தன.

பரோபகார சிந்தையுள்ள இப்பாவை, தான் வாழ்ந்த இடமெல்லாம் மக்களின் குறைகளைக் காணும்போது பரிதவிப்பாள், துடிதுடிப்பாள். இயலுமான உதவிகளைச் செய்வாள். தச்சனுடைய குடும்பம் என்ற கட்டுப்பாட்டுக்கு உரிய அளவிலேயே அவளுடைய உதவிகள் இருந்தன. அதற்கு மேல் செய்திருந்தால் மரியாளையே தெய்வப் பெண்ணாக மக்கள் ஏற்றிருப்பார்கள். மரியாள் தன்னை தாழ்மையின் கீழ் நிலையில் வைத்து, எழ்மையின் வழியிலேயே நடத்திக் கொண்டிருந்தாள். தனக்கென்று ஒரு பெருமையைத் தேட எந்த ஒரு உதவியையும் அவள் செய்யவில்லை. தன்னுடைய குடும்ப நிலைக்கேற்ற உதவிகளை உறவினர்க்கும், அயலவர்க்கும், அனாதைகளுக்கும், அகதிகளுக்கும் செய்துகொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கானா ஊரில் இக் கருமத்தை ஆரம்பித்து வைத்து, தன் மகனின் ஆன்மீகப்பணி முன்னேற தாய் உதவினாள். மரியாள் செய்த பெரிய பேருபகாரம் இது. கானா ஊரில் அக்குடும்பம் சாதாரண குடும்பமே. அக் காரணத்தினா லேயே அவர்கள் ஆயத்தம் செய்து வைத்த இரசம் தீர்ந்து போனது.

தன் மகனின் பிரசித்த சீவியத்துக்கும், ஆன்மீகப்பணிக் கும் ஒரு நல்ல தாய் ஒரு நல்ல கருமத்தை ஆரம்பித்து வைத்தது பெருமைமிக்க செயலாகவே கருதப்படுகிறது. அங் கிருந்தே பல ஊர்களுக்கும் வழி அனுப்பினாள் அன்னை. இது சீடத்துவ உதவியாகிறது.

மக்களுக்குத் தன் மகனை அறிமுகம் செய்து வைத்தது சொல்லாமற் செய்த கருமமாகும்.

சீடர்கள் தன் மகன் மேல் விசுவாசம் உள்ளவர்களாகி அவரோடு நட்புறவு கொண்டு பணியைச் செய்ய ஓர் அருங் குறியைச் செய்வித்திருக்காலாம்.

நாசரேத்தூர் ஆரம்ப நாள் இடறலான நாளாகி, அவர் அயலூர் சென்றமை அன்னையின் மனதைப் புண்படுத்தி யிருக்கலாம்.

விண்ணரசு மண்ணில் தோன்ற வேண்டிய காலம் வந்து விட்டது என்று, மக்கள் மனம் மாறி, கடவுளிடம் விசுவா சம் உள்ளவர்களாகச் சீவிக்க வேண்டும் என்றும் விரும்பி யிருக்கலாம்.

எல்லா வகையிலும் மரியாளின் பேருபகாரங்கள் அக் காலத்தில் மட்டுமன்றி, இக்காலத்திலும் மக்களுக்குப் பல வகையில் நன்மை பயப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது. ''அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்''. இது மரியாளின் சீடத்துவ சேவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுவின் புதிய ஆன்மீகப் பணிக்கு தாய் மகன் என்ற பாசம் தேவையில்லை. எனவே அதை மரியாளும் விரும்பி யிருக்கமாட்டாள்.

மகன் இயேசுவும் விரும்பியிருக்கமாட்டார். அன்னை யாவருக்குமே நல்ல தாய் ஆயினும் நாசரேத்தாருக்குப் பயணமானாள். ''அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்'' என்று அன்பும் ஆசியும் நிறைந்த வார்த் தையை ஞாபகப்படுத்தி அவர்களை விட்டுப் பிரிந்தாள்.

ஆனால் மரியன்னை எமது தேவைகளுக்குகெல்லாம் முன்னணியில் நிற்க வேண்டும் என்பதைக் கானாவூர்ச் சம்பவம் எமக்கு வெளிப்படுத்துகிறது. எம்மைக் கடவுளிடம் ஈர்க்கும் ஓர் காந்த சக்தியுள்ள தாயாகவே அன்னை இருக்கிறாள்.

இயேசுவின் சீடர்களில் ஒருவரான தோமையார் இந்தி யாவிலுள்ள மைலாப்பூரில் நற்செய்திப் பணியாற்றினார். அங்கு அவர் வேதசாட்சியாகவே மரித்தார். அவருடைய உடலைப் புதைத்த குழியில் ஒரு கற்சிலுவையையும், மரி யாளின் படத்தையும், (குழந்தையும் தாயும்) அவருடைய இரத்தம் சேர்ந்த மண் நிறைந்த பானையையும் வைத்தே சேமித்தார்கள். பிற்கால ஆராய்ச்சியில் அவை கண்டு அறி யப்பட்டிருக்கின்றன. தோமையார், மரியாளும் குழந்தை இயேசுவும் உள்ள படம் ஒன்றைத் தனது அன்பு காரண மாக வைத்திருந்தார். இவ்வாறே மாதாபக்தி அந்த 1 ம் நூற்றாண்டிலேயே ஆரம்பமாகியிருந்தது.

மரியாள் இவ்வுலகுக்கடுத்த பல நன்மைகளை அனு பவித்த ஒரு தாயாக மக்களால் எண்ணப்படாவிட்டாலும், நல்ல ஒரு கணவரும் அமைதி வாழ்வுமே பெரிய கொடை யாக அவளுக்கு இருந்தது. விண்ணகக் கொடைகளால் நிரப் பப்பட்ட இத்தாய்க்கு, 'இறைமகனின் தாய்' என்ற கொடையே சிறந்த கொடையாகும்.

மரியாளின் பெருமைகள் எல்லாம் கானாவூரிலேயே முதல் முதல் ஆரம்பமாயின. இயேசுவின் சிறுபராய சம்பவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும், வானவர் வாக்குகளையும் மரியாள் யாருக்கும் வெளிப்படுத்தவில்லை. கானாவூர்க் கலியாண சம்பவமே கௌரவத்தைக் கொடுத்து நின்றது.

புனிதர் அகுஸ்தீன், அன்னை மரியாளை நோக்கி, 'உம்மை உண்டாக்கியவர் உம்மிடத்தில் உண்டாக்கப்பட்டவர்'' என்று தெளிவாக எழுதியிருக்கிறார்.

இயேசு கானாவூரில் ஆரம்பித்துச் செய்த அற்புதங்கள் கிராமம் கிராமமாக பல வகையில் வளர்ந்துகொண்டு போயின. மரித்த இலாசாரை நான்காம் நாள் உயிர்ப்பித்த சம்பவம் வரை எண்ணிலடங்காத அற்புதங்களை நிகழ்த்திய இயேசு, மரியாள் தொடக்கிவைத்த நாளை மறந்திருக்க மாட்டார். ஊருக்கெல்லாம் அவள் உபகாரியான கதைகள் நற்செய்தியில் எழுதப்படவில்லை.

நற்செய்தி ஏடுகளில் மரியாள் மறைந்தும் நிறைந்தும் நிற்கின்றாள். ஒரு சில சொற்களால் மரியாளின் பண்புகள் அங்கும் இங்குமாக விளங்கப்பட்டுள்ளன. மரியாளை எம் ஊனக் கண்களால் காணாது விசுவாசக் கண்களால் உற்று நோக்கினால், தாயின் பெருமை, கொடை, அன்பு, பக்திப் பரவசம், எல்லாம் மகன் வழியே தோன்றும். மரியாளின் வாழ்க்கை ஏழை விதவையின் வாழ்க்கையாகவே இருந்தது. அது பலரையும் அன்புகொண்டு வாழ்ந்து, அன்புப் பணிகள் செய்து தன் மைந்தனின் ஊழியத்துக்குப் பங்கமில்லாது ஆதரவு செய்யும் பணியாக இருந்தது.

''தன்னைப் பெற்ற தாய் கிண்ணிப் பிச்சை எடுக்க, தம்பி கும்பகோணத்தில் கோதானம் செய்கிறான்'' என்று உலகம் பரிகசிக்க இடம் இருக்கவில்லை,

தாயும் மகனும் பசித்தோருக்கு இல்லையென்னாது, தம்மிடமுள்ளதைப் பகிர்ந்து கொடுத்து வாழ்ந்தனர். மரியாளும் இயேசு மைந்தனும் தங்களுக்குள்ளதை நிறைவோடு அனுபவித்து வாழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்காத இடத்திலும் கொடை வழங்கும் தன்மையின ளான மரியாள், கானா ஊர்க் கலியாண வைபவத்தில், அவ் வீட்டார் கேட்க முன்னரே எழுந்து தன் மகனிடம் சென்று அங்குள்ள குறையை நிறைவாக்கினாள்.

தனது உதரத்தில் தேவமகன் கருத்தரிக்க இசைந்து போனாள் என்ற கருத்து ''இதோ ஆண்டவருடைய அடிமை, உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்'' என்ற மரி யாளின், வார்த்தையை வைத்தே கூறப்படுகிறது. என்றாலும், தேவதூதர், மரியாளின் விருப்பத்தைக் கேட்காது, ''உமது வயிற்றில் கருத்தரித்து ஒரு மகனைப் பெறுவீர்'' என்றே கூறி நின்றார். இறைத்தந்தை கொடுத்த விண்ணகக் கனியை ஏற்று உலகுக்கும் ஊருக்கும் கொடுத்து உபகாரி யானாள் எம் அன்னை. கனிந்துவந்தளித்தாள் அக் கன்னி.

நோவா என்ற மனிதன் கடவுளின் வார்த்தையைக் கேட்டு, அதில் நம்பிக்கை வைத்து ஒரு பேழையைச் செய்து, அதனுள் தன் மக்களையும், உயிரினங்களையும், உணவு களையும் அடைத்து, உலகம் வெள்ளத்தால் அழிவுற்றாலும், மீண்டும் உலகுக்கு புது வாழ்வு கொடுத்தார். அது போலவே, மரியாள் பாவத்தால் அழிந்துகொண்டிருந்த மக்களினத்தை மீட்க தனது உதரத்தை தேவமகனுக்கு உறை விடமாக்கி, உணவளித்து, பெற்று, வளர்த்து, மக்களின் ஆன்ம இருளை அகற்றி ஒளியேற்றி, புதிய வாழ்வுக்கு வழி யனுப்பிய பேருபகாரத்தை, நாவாலும், பாவாலும் கூற முடியாதே.

உலகின் கடைக்கோடிவரை இயேசு என்ற தேவ புத்திர னின் நாமமும், அவரை ஈன்ற மரியாள் என்ற அன்னை யின் நாமமும் புகழ் பெற்றுக்கொண்டிருக்கிறதை யாராலும் மறக்க முடியாது.

கானாவூர் நற்செயலில் இப் புகழ் ஆரம்பமானது. கனிந்துவந்து அளித்த கனிரசத்தை நுகர்ந்த கானாவூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் இயேசு தாவீதின் வழித்தோன்றல் என்பதை எட்டுத் திக்கும் பறைசாற்றினர். முன்னொருநாள் யூத நாட்டில் செங்கோலோச்சிய தாவீதின் வாரிசாக வந்துதித்தவர் இயேசு என்ற பெருமையை விசுவாசமுள்ள மக்கள் பேசிப் புகழ, பொறாமை எரிச்சல், கொண்ட யூதப்பிரமுகர்கள் தச்சனுடைய மகன் என்ற இழிமொழியைப் பேச ஆரம்பித்தனர்.

ஆடைகளைக் களைந்து புத்தாடை அணிவதுபோல இயல் வேதத்திலிருந்து வரிவேதம் வந்தது. வரி வேதத்திலிருந்து அருள் வேதம் தொடர்ந்து அனுசரணைக்கு வரவேண்டிய கால வரம்பில் மரியாள் வாழ்ந்து கொண்டிருந்தபடியால் இயேசுவின் அன்பும் அருளும் கொளிக்கும் புது வாழ்வுக்கு ஆரம்ப வழிகாட்டியானாள். அருள் வேத அனுசாரம் நாச ரேத்தூர் சிற்றாலயத்தில் ஆரம்பமானது.

பழையன களைந்து புதியன புகுத்தவே இயேசு சீடர் களுடன் ஊர் ஊராகச் சுற்றி இறை உறவை வளர்க்க, உறவுப் பாலங்களைக் கட்டி எழுப்ப ஒருவர்க்கொருவர் அன் பால் பின்னிப் பிணைந்து வாழ அவனியைத் தமது வசமாக்க முன்னின்றார்.

''மனிதர்கள் நடுவில் வாழ்வதே எனக்குப் பேரின்பம்'' என்று கூறாமல் கூறுகின்ற இயேசு, மனிதனை இறைமய மாக்க, மனிதனை மீட்டு இரட்சிக்க, அவனை அவனியில் நீதிமானாக, புனிதனாக உயர்த்தி வைக்க மேற்கொண்ட பணியின் ஆரம்ப நாளை நன்னாளாக்கி வைத்தாள் அன்னை மரியாள்.

பூமியுருண்டையின் உச்சியிலே தன் மைந்தன் சமாதானக் கொடி ஒன்றை ஊன்றி வெற்றி பெறுவார் என அந்நாளில் அன்னை கனவு கண்டாளா?

பாவ வெள்ளத்தில் மூழ்கியவர்களை ஓடம் கட்டித் தூக்கி எடுப்பார் எனவும், நீதி மன்றங்களில் நீதியையே பிறப்பிப்பார் எனவும் நினைத்தாளா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிமக்களின் இரத்தம் குடிக்கும் யூதக் குருக்களை எச்சரிப்பார் என்று எண்ணினாளா?

பசித்துக் கிடக்கும் மக்களுக்கு அப்பமும் மீனும் பகிர்ந் தளிப்பார் எனப் பார்த்திருந்தாளா?

விடிவற்றுக் கிடந்த வியாதிஸ்தருக்கும், குறைபாடுள்ள வர்களுக்கும் விடுதலை கொடுப்பார் என வழி மேல் விழி வைத்துக் காத்திருந்தாளா?

முப்பது வயது வரை இயேசு மகனைத் தனது குடிசை யில் வைத்திருந்த அன்னை இன்னும் சில ஆண்டுகள் தன் னோடு வைத்திருக்க ஆசைப்பட்டு வீட்டிலும் தச்சுமாலிலு மாக வைத்திருக்கலாம் அல்லவா?

அப்படியான சுய எண்ணங்கள் இல்லாமலே, ஊருக்கு நன்மை பயக்கும் பணியை அவர் செய்ய விட்டுக் கொடுத்து ஊருக்கு உபகாரியானாள்.

ஆன்மீக வரங்களைப் பெற்ற லேவி, சக்கேயு, சமாரியப் பெண், மதலேன் மரியாள் போன்றவர்களின் உளவளர்ச் சிக்குப் பணி செய்ய விட்டுக் கொடுத்தவள் எம் அன்னை அல்லவா?

இலௌகிக வரங்களைப் பெற்ற திமிர் வாதக்காரன், நாயீன் ஊர் விதவையின் மரித்த மகன், மரித்த லாசார், தொழுநோயாளர்கள் போன்ற எண்ணற்றவர்களின் உடல் நோய் நலமாக ஊருக்கு உபகாரியாய்ப் பணி செய்ய விட்டுக் கொடுத்தவள் அன்னை மரியாள் என்னும் பேருபகாரி அல் லவா? மறந்து விடலாமா?

மலையில் ஏறிச் செல்லும் புகை வண்டிக்கு பின்னி ருந்து இயங்கும் இயந்திரம் ஒன்று இருப்பது போல முன் சென்று பணியாற்றும் இறை மகனாருக்கும் சீடருக்கும் பின் னிருந்து செப உதவி செய்யும் சக்தியாக வாழ்ந்தாள் எம் அன்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைவில் நிறைவு கண்டு களித்த கன்னி 10

தான் கன்னியாகவே வாழ விரும்பிய மரியாள், தனது கணவர் தன்னைக் கன்னியாகவே வாழவிட்ட நன்றியும் நிறைவும் உள்ளத்தில் பொங்க, தன் கணவரை அன்புடன் ஏற்று, கடவுளுக்கு மனமுகந்தவளாய் வாழ்ந்தாள். சூசை யோ அன்பும் பண்பும் நிறைந்தவர். அவர் அவளுக்கு கண் நிறைந்த கணவராகவே காணப்பட்டார்.

பெத்லெகேம் இரவு அவர்களுக்கு குறையுள்ள இரவாக இருந்தாலும், விண்ணொளி சுடர்ந்த அற்புதம் நிறைந்த செய்தியை இடையர் கொண்டு வந்து சொன்னதும் குறை யின்றி நிறை மனதுடன் கேட்டு இன்புற்றனர். கை நிறைந்த பாலகனை முத்தமிட்டனர்.

ஜோதி ஒன்று தோன்றியதைப் பார்த்த சோதிடர் மூவர் வந்து, பார்த்து, வணங்கி பரிசில்கள் வழங்கியதில், ஏழ்மை யின் நிழலே காணாதவளாகி மகிழ்வுற்று நிறைவானாள் மரியாள்.

பெத்லெகேம் மாட்டுத் தொழுவம் மகிமை பெற்றது. அது அரச மாளிகையாகவும் மாறி நின்று நிறைவும் பெற் றது. கிறிஸ்துவின் பிரசன்னம் இருக்குமானால் எந்த ஏழைக் குடிசையும் மோட்சத்தின் ஒரு பகுதியாகி விடும் அல்லவா? ஆரம்ப கால வாழ்க்கை தொடக்கம் மரியன்னைக்கும் சூசைக்கும் குறையொன்றும் இருக்கவில்லை. பலஸ்தீனத் தில் ஏழைகள் முடங்கிக் கிடக்கும் மூலை முடுக்கெல்லாம் அன்னையின் புதல்வன் கூர்ந்து நோக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையின் கருத்துக்கள் வீணாகவில்லை. அவளுடைய அபிலாஷைகளை மைந்தன் நிறைவேற்றினார்.

பலஸ்தினத்தில் பட்டினி கிடப்பவர், குற்றத்துக்கு கடின தண்டனை அனுபவிப்பவர், ஆழ்ந்த இருளில் கிடப்பவர், ஊனமுற்று முடங்கிக் கிடப்பவர், தெருவோரம் இருந்து இரப்பவர் இவர்களுக்காகத் துன்புறும் ஊழியனாக இயேசு பணியாற்ற அவரை நேர்ந்து, கையளித்து நிறைவானாள் அன்னை மரியாள்.

திருவருள் பெற்ற பெரியார் ஒருவர் தெருவோரம் செல்வதைக் கண்ணுற்ற மீனவர், பெண்கள், குழந்தைகள், தாழ்த்தப்பட்டவர்கள், புறக்கணிக்கப்பட்டவர்கள், அவரை அண்டி அவருடன் பழகிப் பேசி வாழ்ந்த வாழ்க்கையில் அன்னையின் பங்கு பெரும் பங்கானது.

வறுமை மிஞ்சிக்கிடந்த யூத சமுதாயத்தின் விடுதலைக்குத் தன் மகனை ஏழ்மையிலும், தாழ்மையிலும் பயிற்றி வைத்தவள் அன்னையே.

''எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும் சிறைப்பட்டோர் விடுதலையடைவர், குருடர் பார்வை பெறுவர் என அறிவிக்கவும், ஒடுக்கப்பட்டோர்க்கு உரிமை வாழ்வு வழங்கவும், ஆண்டவர் என்னை அனுப்பினார்...... *(இசையாஸ் 61 : 1, 2)*

நாசரேத்தூர் சிற்றில்லத்தை இன்புற நடத்திய இல்லாள் தங்கள் பொருளாதார அந்தஸ்தை மகனும் உணரும்படியே நடத்தினாள்.

தங்கள் சொந்த மொழியே தாய்க்கும் சேய்க்கும் தெரிந்த மொழி. சாதாரண தச்சன் குடும்பமே அவர்களின் குடும்ப மகிமை. கிராமக் குடியானவர் — இதுவே அவர்களின் சமூக அந்தஸ்து. இந்த நிலையிலிருந்து,

''தாழ்நிலை நின்ற தம் அடிமையைக் கண்ணோக்கவும், நெஞ்சிலே செருக்குற்றவர்களைச் சிதறடிக்கவும், வலியோரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியணையிலிருந்து அகற்றவும், தாழ்ந்தோரை உயர்த்தவும் பசித்தோரை நலன்களால் உயர்த்தவும்''...... (லூக்காஸ் 1 : 51 - 55)

வருவார் என கருவாகி நின்ற சிசுவின் நிலையை மரியாள் மலை நாட்டில் வெளிப்படுத்தியிருந்தாள் அல்லவா? அப்படியாயிருந்தும் ஏழையாகப் பிறப்பதை ஏற்றும், ஏழைகள் மத்தியில் வாழ விரும்பியும், அவர்களோடு உறவாட விரும்பியும் நின்ற மகனை, அவர்களின் துயரங்களைக் களைந்து அவர்களுக்கு விடுதலை தேடிக் கொடுக்க வழியனுப்பிவைத்த அன்னை யூத மக்களும் புறஜாதி மக்களும் தத்தம் குறைகள் நீங்கி நிறைவுற்றதைக் கண்டுகளித்தாள்.

செல்வந்தர் ஏழையைப் புரிந்துகொள்வதைவிட ஏழை தான் ஏழையைப் புரிந்துகொள்ள முடியும் என்பதை மரியாள் உணர்ந்திருந்தாள்.

''உன் வாயைத் திற அதை நான் நிரப்புவேன்'' (சங்கீதம் 80 : 10.)

மரியாள் தன் இதயத்தின் வாயிலை இறைவனுக்கே திறந்து காட்டினாள். அவர் அவளை இம்மையிலும், இறைமையிலும், குறைவின்றி நிறைவாக்கினார்.

தெருவோரம் இருந்து குரல் கொடுக்கும் மக்களுக்கு விடுதலை கொடுக்க இயேசு கொண்ட கோலம் கண்டு தாயுள்ளம் கனிந்துருகியது.

விண்ணரசை நிறுவமுனைந்த விண்ணக மைந்தன், மண்ணவரில் ஒருவராய் அவர்கள் பிரச்சனையில் தன்னை ஈடுபடுத்திய நோக்கத்தைத் தாய் மனம் தெளிந்து கொண்டது.

தன்னை வெறுமையாக்கி தன்னையொத்தோரை அணி திரட்டிய மைந்தனை மெச்சினாள் அன்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார ஆதிக்கம் நிறைந்த ஒரு அமைப்பினால் நசுக்கப்பட்ட மக்களுக்கு விடுதலையையும் சமத்துவத்தையும் கொடுக்க அவர் கொண்ட கோலம் கண்டு களிப்புற்றாள் அத்தாய்.

அரசியலையும், சமயத்தையும், சமூக உறவுகளையும், சட்டங்களையும் சீர்திருத்த, இயேசு ஆற்றிய உரைகளை அறிந்த அன்னை ஆச்சரியமுறவில்லை.

"நீதி தண்ணீரைப்போல வழிந்தோட வேண்டுமானால், நேர்மை நீரோடைபோலப் பாயவேண்டுமானால் முடக்கப்பட்ட ஏழைகட்கு விடுதலை வேண்டும்" என்று அத்தாய் அறிந்திருந்தாள்.

இவர் யார்? என மக்கள் ஆச்சரியமுற்றுக் கேட்ட அளவில் அத்தாய், தன் மைந்தனின் தகைமையை எண்ணிப் பெருமிதம் கொள்ளவில்லை.

அவர் நன்மை செய்கிறவராய்ச் சுற்றித்திருந்து மூன்று வருடங்களுக்கு மேல் நற்செய்தியைக் கூறி அறிவித்தார். அருங்குறிகள் பல செய்தும், மரித்தோரை உயிர்ப்பித்தும், பசாசு பிடித்தவர்களைக் குணமாக்கியும், அப்பங்களைப் பலுகச்செய்து உணவளித்தும், குஷ்டரோகிகளையும், ஊன முற்றோரையும் குணமாக்கியும் புகழ்பெற்றபோது அத்தாய் புகழ் ஏணியில் ஏறிவிடவில்லை. அமைதியே உருவாய் அமைந்திருந்தாள்.

தன் மைந்தன் பாவம் எள்ளளவேனும் தீண்டாதவர் என்பதே அன்னையின் அளப்பரிய ஆனந்தம்.

அவர் ஒரு புத்தகமும் எழுதியதில்லை என்றும், தனக்கென்று ஒரு கட்சியும் அமைக்கவில்லை என்றும், கடவுளுக்கென்று ஒரு ஆலயமும் கட்டவில்லை என்றும், பணநிதி எதையும் திரட்டவில்லை என்றும் அத்தாய் நன்கறிந்திருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாளின் வார்த்தைகளை வைத்தே, நற்செய்தி ஏடுகள் ஆரம்பமாயின. இயேசுவின் மரணத்தின் பின் உயிர்ப்பு, விண்ணகப் பிரயாணம் இவைகளைக் கண் கூடாகக் கண்ட சீடர்களே நற்செய்திகளை எழுதிவைத்தனர். அதற்கு மரியாளும் உடந்தையாகவிருந்தாள்.

அன்னையின் மன உறுதி தெய்வமகனை தெய்வ மகனாகவே ஏற்று நின்றது.

அவர் பிறப்பு இயற்கைச் சட்டத்திற்கு முரண்பட்டது. அவர் மரணம் எல்லா மரண விதிக்கும் விலக்கு. அவர் ஜீவியமும் போதனையும் விளக்க வொண்ணாத ஒரு மாபெரும் அற்புதம். அவருக்கு கோதுமைவயலோ, மீன் பண்ணையோ இல்லாதிருந்தும் அப்பமும் மீனும் ஐயாயிரம் பேருக்கு நிறைவாகக் கொடுத்து மீதமும் வைக்க முடிந்தது. அவர் நீர் மேல் நடந்தபோது, அது அவரைத் தரைபோல், தாங்கி நின்றது.

இந்நிகழ்ச்சிகளெல்லாம் இம்மாதரசியை விண்ணக இன்பத்துள் ஆழ்த்தி நின்றது.

விண்ணகத்தை மனிதன் கண்டானல்லன். இறைவாக்கினர் வாயிலாகப் புறப்பட்டு, எழுதப்பட்ட இறையின்ப வார்த்தைகளிலேயே ஆதிகால மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர். ஏன் மரியாள், சூசை ஆகியோரும் அவ்வாறே வாழ்ந்து கொண்டிருந்தனர்.

மரியன்னை தான் பெற்ற ஏக மைந்தனைப் பலஸ்தீனம் முழுவதும் சுற்றிப் போதிக்க வழியனுப்பி அவரிடமிருந்து புறப்பட்டு வரும் போதனைகளையும், வார்த்தைகளையும், அருங்குறிகளையும், மக்கள் வாயிலாகக் கேட்டு சுவைத்து இன்பமுற்றிருந்தாள். வானக இன்பமாகிய இறையின்பத்தை தன் மைந்தன் மண்ணின் மேல் ஊற்றி, ஊற விட்டு முளை கிளம்பவும், அது வளரவும் அரும்பாடுபடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார் என அறிந்தாள். மீட்பாகிய தானியம் விதைக்கப் படுவதை அறிந்த அன்னை அது பலன் அளிக்கத் தினமும் வேண்டுதல் செய்தாள். அத்தானியம் முளை கொள்ளும் போது வேர் அரும்ப, அது அழிவுறும்.

உறவு என்ற முறையையும், பாசம் என்ற ஆசையையும் ஊர்மக்களுக்காக விட்டுக் கொடுத்து உபகாரியான அன்னை, "யார் என் தாய்? யார் என் சகோதரர்?" என்று இயேசு சொன்ன மொழிகளை, பொன் மொழி போல் ஏற்று தனது புத்திரபாசத்தை மென்று விழுங்கினாள். (மத் 12: 45 - 50) மண்ணக மாந்தர்களிலெல்லாம் மரியாள் மேம்பட்டவள் என்று வாய் கூசாமற் சொல்லி விடலாம். இயேசு தாய் என்ற உறவை என்றுமே வைத்திருந்தார்.

இயேசு நாசரேத்தூரை விட்டுப் புறப்பட்ட நாளில் இருந்து அவருடைய வாழ்வு தேசாந்திரிக்குரிய வாழ்வுக்கு ஒப்பாயிருந்து.

அன்னையின் இல்லம் எனக்கு அடைக்கலமானது என அப்புத்திரன் அங்கலாய்க்கவில்லை. அன்னையின் குறைவுகளில் அதுவும் ஒன்று.

மைந்தனும் சீடரும் பசியுற்ற நேரங்களில் பயிர்களின் கதிர்களை உருவி உண்டதும், காயற்ற அத்திமரத்தை கண்களால் துவாவிக் கொட்டாவி விட்டதும் ஆன குறைகளை நிறைவாக்கி வாழ்ந்தாள்.

மரியாள் தனது படுக்கையை விரித்து உறங்கும் போதெல்லாம் தன் மைந்தன் சிற்றாலயங்களிலும் ஆலய மண்டபங்களிலும், பாழ் வெளிகளிலும், மலைச்சாரல்களிலும் ஒலிவத் தோப்பிலும், படுத்துறங்கும் காட்சியை மனத்தே இருத்துவாள். கண்களில் இன்பமோ, துன்பமோ?

இயேசு மகன் வாழ்வோருள் வாழ்பவராய்
மந்தைகளுக்கு ஆயனாய்,
தேசங்களில் தேசாந்திரியாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்களுக்கு அன்பனாய்
சீடர்களுக்குக் குருவாய்
பாவிகளுக்கு மீட்பராய்

நின்ற காட்சி அன்னையின் உள்ளத்தில் விருட்சமாகி கிளை விட்டு வளர்ந்து, மலர்ந்து கனிகளை உதிர்த்தது.

# துன்பத்தின் அன்னை 11

பூமியில் வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களில் பலவகையில் மாசு படிந்துவிடுகிறது. இறையன்பு அற்றிருந்த மக்களிடம் இறைவன் ஆதியிலிருந்தே அன்புகொண்டிருந்தார். அவர் அன்புகொள்ளவும், மனுக்குலம் மாசுநீங்கி மீட்பு அடையவும் அவரே தன்னை அர்ப்பணித்தார்.

இறைமகன் என்ற உருவில், தாம் வளர்த்த யூதகுல மக்களுள் மாணிக்கம் போன்றுதித்த கன்னிமரியாளிடம் மனிதப் பிறப்பு எடுத்து, மண்ணக வாழ்வு வாழ்ந்து, துன்ப துயரங்களை அனுபவித்து, சிலுவை மரணம் எய்தி உயிர்ப்பு அடைந்து, விண்ணகம் ஏறி, அக்கனியை மனுக்குல மீட்புக்குப் பங்காளியாக்கினார் அவர்.

இறைமகனை புவியில் மனிதனாக்க, அக் குழந்தையை உருவாக்கிப் பெற்றெடுக்க, பெற்ற குழந்தையை புல்லணையிலே வளர்த்தெடுக்க, அரச சேவகரின் கொலையினின்றும் தப்புவிக்க, நாடுவிட்டு நாடு சென்று மறைத்து வைத்துக் காப்பாற்ற, மக்களுடன் சொந்த ஊரில் சேர்ந்து வாழ, பன்னிரண்டு வயதில் தேவாலயத்தில் காணாது தேடிக் கண்டுபிடிக்க இத்தாய் எடுத்துக்கொண்ட பிரயாசங்கள், துன்பங்கள் எல்லாம் மீட்பின் பங்கேயன்றி வேறொன்றல்ல.

எக்கோலம் கொண்டால், வாழும் மக்களோடு இணைந்து அவர்களுடைய விடுதலைக்கு வித்திட முடியும் என்று மீட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புப் பணியில் இறங்கிய மகனுக்கு, வெள்ளுடை தரித்து எண்ணெய் நீவி, வில்லெடுத்துக் கையில் கொடுத்துவிட இத் தாய் முன்வரவில்லை.

ஆழ்ந்த இருளில் கிடப்போரைத் தட்டி எழுப்ப, ஒளி கொடுத்து வழியனுப்பினாள் அன்னை. ஆனால் நடந்தது என்ன ?

முப்பது வயதுள்ள முழு மனிதனான இயேசு மூன்று ஆண்டுகளில் தனது இறை பணியை நடத்திக்கொண்டிருந் தார் அல்லவா? அவருடைய போதனையை ஏற்றவர் சிலர், ஏற்காதவர் பலர்.

அவருடைய அற்புதங்களை ஏற்று, சொஸ்தங்களைப் பெற்று, பலவகைப்பட்ட நன்மைகளை அனுபவித்து, உயிர்ப் புக்களை கண்ணால் கண்டு அனுபவித்தும் அவரை மெசியா னை ஏற்க முழுமனச் சம்மதம் அற்றவராய் இருந்தனர் மக்கள். அதை நினைத்து அன்னை கலங்கத் தொடங் கினாள்.

''பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்'' என்ற தாவீது அரசனின் பாடல் சிறு வயதிலிருந்து தன் மகனின் உள்ளத்தில் பதிந்திருந்ததை மரியாள் அறிவாள்.

யூத மார்க்கத்தில் மாத்திரமன்றி உலகின் பல பாகங் களிலும் பலியே தொழுகையில் கலந்திருந்தது. மிருகப்பலி மட்டுமன்றி, சில காலங்களில் சில இடங்களில் நரபலியும் செலுத்தப்பட்டதாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

யூத நாட்டில் ஆசாரியாயரின் அதிகாரம் மேற்பட்ட தாய் இருந்தது. அவர்கள் தங்களையும், மக்களையும் கெடுத்துக் கொண்டிருந்த காலங்களில் இறைவாக்கினர் தோன்றி அவர்களையும் மக்களையும் திருத்த முற்பட்ட வரலாறுகளும், இறைவாக்கினர் கொல்லப்பட்ட வரலாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் பழைய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளன. இவை யெல்லாம் மரியாள் அறிந்திருந்தாள்.

இயேசுவின் கொள்கையில் பலிகள் விலக்கப்பட்டிருந் தும், மக்கள், வழமைப்படி பலி செலுத்தியே தொழுகை நடத்தினர்.

இயேசுவை கோயிலில் காணிக்கை கொடுத்து மீட்ட சூசை, மரியாள் ஒரு சோடி புறாக்குஞ்சுகளை வைத்தே நன்றி செலுத்தினர்.

இது போன்ற பல தேவாலயக் கடமைகளை மரியாளும் அறிந்தும் நிறைவேற்றியும் இருந்தாள். இது புதிய கொள் கைக்கு உரியதல்லவே என எண்ணமிட்டாள்.

வனத்திலே ஸ்நாபக அருளப்பர் தனது உபதேசத்தில் பாவத்துக்குத் தண்டனை, நீதி, கோபாக்கினை, மனந்திரும் புதல், தபம் போன்றவற்றைப் போதித்தார். போதனை முறைகளை இயேசுவும் தாய் மரியாளும் அறிந்திருந்தனர்.

இயேசு அவருடைய கையால் திருமுழுக்கைப் பெற்று, தூய ஆவியைப் பெற்று, தபம் செய்து வந்தபின் தூய்மை, இறையன்பு, சிநேகம், இரக்கம் என்பவைகளைப் பேசினார். அந்த அன்பு வழியை அவளும் விரும்பினாள்.

இயேசு மலை மீதிலிருந்து எட்டுப் பேறுகள் பற்றிய வசனங்களைக் கூறினார். மக்கள் அதை விரும்பிக்கேட்டனர். மரியாளும் அதை இனிதாக ஏற்றாள். மூன்றாண்டுகளின் முடிவில் இயேசு மறைநூல் அறிஞரையும் பரிசேயரையும் சபித்தார். இவ்வார்த்தைகளைக் கேட்ட மரியாள் கலக்க மடையத் தொடங்கினாள்.

''பாம்புகளே, விரியன் பாம்புக் குட்டிகளே, நீங்கள் நரகத் தீர்வைக்கு எப்படித் தப்ப முடியும்? இதோ நான் இறைவாக்கினர்களையும் ஞானிகளையும் மறைநூல் அறிஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் உங்களிடம் அனுப்புகிறேன். அவர்களிற் சிலரைக் கொல்லுவீர்கள், சிலுவையில் அறைவீர்கள், சிலரைச் செபக் கூடங்களில் சாட்டையால் அடிப்பீர்கள். ஊர் ஊராய் விரட்டி யடிப்பீர்கள். இவ்வாறு குற்றமற்ற ஆபேலுடைய இரத்தம் முதல் ஆலயத்துக்கும் பீடத்துக்குமிடையே நீங்கள் கொன்ற வரும் பரக்கியாவின் மகனுமான சக்கரியாவின் இரத்தம் வரை சிந்திய மாசற்ற இரத்தத்தின் பழி எல்லாம் உங்கள் மேல் வந்து விழும். உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். இவையனைத்தும் இத்தலை முறைமேல் வந்து விழும்'' *(மத்தேயு 23: 33 - 36.)*

இவ்வாக்கியங்களை இயேசு பகிரங்கமாகப் பேசியிருந் தார். மரியாளின் துன்பம் ஆரம்பமானது. இயேசுவுக்கு பகைவர் இருக்கின்றனர் என்பதை அறிந்தே கலக்கமடையத் தொடங்கினாள்.

இயேசு தேடப்படுகிறார் என்பதையும் அன்னை அறிந் தாள். யெருசலேம் வரை பவனி சென்ற தன் மகன் அந்த நகரைப் பார்த்துக் கண்ணீர் விட்டார் என்பதையும் அறிந் திருந்தாள். அவளுக்கும் கண்ணீர் துளிர்த்தது.

இயேசு யெருசலேம் தேவாலயத்தில் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது, அம் மக்கள் தங்களுக்குள் அவருடைய பேச்சை வியந்து, ''இவரையல்லவா கொல்லத் தேடுகிறார்கள்'' என்று பேசிக்கொண்டனர். மரியாளின் காதுக்கும் இப் பேச்சு எட்டாமற் போகுமா?

''உலை வாயை மூடலாம்; ஊர் வாயை மூடமுடியுமா?''

துயர் வேளைகளில் செபிப்பதா? தியானிப்பதா? சிந்திப் பதா? மரியாள் சிந்தித்தாலும், செபிப்பதே அவளின் வழமையான சீவியம். தாயும் மகனும் முப்பது வருடம் செபவாழ்வே வாழ்ந்தனர். துன்பம் என்னும் சூறாவளியில் சிக்கினாலும் செபமே அவளைக் காப்பாற்றியது. சூசை இறந்த பின் தாய், மகன் என்ற இருவரின் ஐக்கிய வாழ்வில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ள வேண்டியவைகளைத் தள்ளி, கொள்ளவேண்டியனவைகளைக் கொண்டு, நோக்க வேண்டியவைகளை நோக்கி, காக்க வேண்டியவைகளைக் காத்து வாழ்ந்தனர்.

இவ்வாறு வாழ்ந்த மகனுக்கு குற்றம் என்பது எவ்வாறு அமையும்? சிந்தித்தவள் தாய்தான்.

இருவருடைய வாழ்வும் ஓர் இன்ந் தெரியாத புது வாழ்வாக இருந்தது. அதை ஆழமாகச் சிந்தித்தால் அவர்களுக்கிடையிலேயே "கிறிஸ்த வாழ்வு" என்னும் ஓர் இரகசிய வாழ்வு ஆரம்பமாகியிருந்தது என்பது தெரியும். அது சீடர்களின் ஐக்கிய வாழ்வில் பௌர்ணமித்து உலகெங்கும் வளர்ச்சியடைந்தது என்பது தெரிகிறது.

இயேசு மகன் என்ற ஒளியை நோக்கி அவளுடைய விழிகள் பிரகாசித்த காலம் போய் கண்ணீரை மல்கிவிட வேண்டிய காலம் ஆயத்தமாகியிருந்தது.

என் மகன் இரவு முழுவதும் தனித்திருப்பார். விடிந்தவுடன் மக்கள் கூட்டத்தைத் தேடிப் போவார். அல்லது அவர்கள் தேடி வருவார்கள். பகல் முழுவதும் நோயாளர், பிணியாளர், ஆயக்காரர், பாவிகள், விலக்கப்பட்டவர், துயரப்படுகிறவர் மத்தியில் பணிபுரிந்துகொண்டிருப்பாரே.

இரவில் அவர் தபோர், எர்மோன், ஒலிவம் முதலிய மலைகளுக்கும், வனாந்தரத்துக்கும், கெதசெமனே தோட்டத்துக்கும் தங்கச் செல்வார். பகலில் மக்கள் பணிமுடிய செபக்கூடங்களுக்கும், தேவாலயங்களுக்கும் சனப்புழக்கமுள்ள இடங்களுக்கும் சென்று மக்களுடன் சம்பாஷிப்பார். மக்கள் தங்கள் தங்கள் வீடுகளுக்குச் செல்ல அவரோ தனது வீடாக நினைத்துச் செல்லும் ஒலிவமலைத் தோப்புக்கே செல்வார். இரவு முழுவதும் பிதாவின் ஐக்கியத்தில் தனிமையாய் இருப்பாரே. இவ்வாறு பல நன்மைகளையும் நற்போதனைகளையும் செய்த என் மகனை சத்துருக்கள் தேடுவதேன்? என எண்ணி வருந்தினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மகன் தன்னுடன் இருந்த காலங்களில் யெருசலேம் யாத்திரையும், பாஸ்காத் திருவிழாவும் தம் இருவருக்கும் நன்கமைந்ததை மரியாள் உணர்ந்திருந்தாள். பணி புரியத் தொடங்கிய காலங்களில் அவர் தம் சீடரோடு கூடவே அங்கு சென்றார்.

பாஸ்க்குப் பெருநாளுக்குப் பல ஊர் மக்களும் யெருசலேமில் வந்து கூடுவர். இயேசுவும் அந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடாது சீடருடன் அங்கு செல்வார். மக்கள் கூட்டத்தில் மிக நன்றாகப் பேசுவார்.

மக்கள் திரண்டு கூட்டமாய் நின்று கேட்பர். புறஜாதி மக்களும் சேர்ந்து நின்று கேட்பது வழக்கம். இச் செயல் ஆலயக் குருக்களுக்கு பொறாமையை உண்டுபண்ணியது. குரோதமும் பகையும் வலுவடைந்தன. அது அன்னை அறியாத இரகசியம் அல்ல.

யெருசலேமில் கோயில் அபிஷேகத் திருவிழா நடைபெற்றது. சாலமோன் மண்டபத்தில் இயேசு நடந்து கொண்டிருப்பதைக் கண்ட யூதர்கள் அவரை அணுகி "நீர் மெசியாவா? தெளிவாகச் சொல்லி விடும்" என்றனர்.

இயேசு, பிதாவைத் தந்தை என்று தெளிவாகக் கூறி "நானும் தந்தையும் ஒன்றே" என்று கூறி நின்றார். இதைக் கேட்ட யூதர் அவரைக் கல்லால் எறியும்படி கல் எடுத்தனர்.

மீண்டும் இத்தர்க்கம் நீடிக்கையில், "தந்தை என்னிலும், நான் தந்தையிலும் இருக்கிறதை அறிந்து கொள்வீர்கள்" என்றார். இதைக்கேட்டு அவர்கள் அவரைப் பிடிக்கப் பார்த்தார்கள்.

இச் சம்பவங்களிலிருந்து சீடர்களும் பயப்பிராந்தி கொண்டனர். மரியாளும் பயந்து கலக்கமடைந்தாள். நெஞ்சில் கற்கள் விழுவது போன்ற ஏக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் இயேசு யெருசலேமுக்கு வருகிறார் எனக் கேள்வியுற்று கையில் குருத்தோலைகளோடு அவரை எதிர் கொண்டு போய் ''ஒசன்னா! ஆண்டவர் பெயரால் வருகிறவர் வாழி! இஸ்ராயேலின் அரசர் வாழி!'' என்று ஆர்ப்பரித்து வரவேற்றனர். வழியிலிருந்த ஒரு கழுதைக் குட்டியின் மேல் இயேசு வீற்றிருந்தார்.

கண் நிறைந்த காட்சி, வானம் முட்டிய வாழ்த்தொலி வீதி நிறைந்த மக்கள், இதைக் கண்ட பரிசேயர்,

''பார்த்தீர்களா! உங்களால் ஒன்றும் செய்ய முடிய வில்லை. இதோ! உலகமே அவன் பின் ஓடுகிறது'', என்று தங்களுக்குள்ளே பேசிக் கொண்டனர். அன்னைக்கு ஒரு பக்கம் மகிழ்ச்சி, மறு பக்கம் ஏக்கம். கால்கள் தள்ளாடின. இயேசுவின் மரணம் மகிமையின் வாயில் சிக்கி நிறைவேற வேண்டியிருந்தது. இதை பெற்ற அன்னை அனுபவித்தாள்

இத்தனை மக்கள் கூட்டத்தில் தாய் மரியாள் எங்கே? தேடியவர்கள் பலர். அங்கே தான் இதயம் துடிக்க இருந் தாள் அம்மாதரசி. பாஸ்காத்திருவிழா தொடங்கியிருந்தது. யூதக் குருக்களும் பிரமுகரும் சுறு சுறுப்பாக இருந்தனர்.

இயேசு யெருசலேமைப் பார்த்துக் கண்ணீர் விட்டார். அது இரகசியமாய் அல்ல. பகிரங்கமாகவே கண்ணீர் சிந்தி னார். அன்னையும் அதைக் கேட்டு கண்ணீர் மல்கினாள்.

இயேசு தம்மை மெசியா என்றும், கடவுளின் மகன் என்றும் மறைவாகவும், வெளிப்படையாகவும் கூறிய போதெல்லாம் பரிசேயர் அவரைக் கொல்லவே தேடினர்.

அன்று அவர் அநேக யூதமக்களால் வரவேற்கப்பட்டு, சமாதானத்தின் இராசாவாய் கழுதைமேல் ஏறி வான்முட்டும் வாழ்த்தொலிகளுடன் வந்து, ''இப்போதாவது ஏற்றுக் கொள்வீர்களா? இது தான் கடைசித் தருணம்'' என்று கூறாமல் கூறி நிற்கும்போது அவருடைய கண்ணீரே கட்டு மீறிப் பெருக்கெடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாசார் வியாதியுற்றிருக்கிறான் என அறிவித்த போது அங்கு போகாது இரண்டு நாள் தாமதித்த இயேசு சீடர்களைப் பார்த்து, ''லாசார் இறந்து விட்டான் வாருங்கள் அவனிடம் செல்வோம்'' என்றார்.

சீடர்களுக்குத் தொடை நடுக்கம். மீண்டும் யெருசலேம் பக்கம் செல்வதா?

திதிமு என்னும் தோமையார் உடன் சீஷரிடம் ''நாமும் செல்வோம், அவரோடு இறப்போம்'' (அருளப்பர் 11 : 16) என்றார்.

யெருசலேமுக்குச் செல்வதென்றால் மரணத்தையும் ஏற்கத்தான் வேண்டும் என்ற மனப்பதிவு அவர்களுடன் வளரத் தொடங்கியது. இந்த நிலை அன்னை மரியாளையும் கௌவியிருந்தது. தனது மகனின் பயங்கரமான நிலையை நினைக்குந்தோறும் கண்ணீரும் ஏக்கமும் கொள்வாள் அன்னை. இறைவனை வேண்டுதல் செய்வாள். செபவாழ்வில் நீச்சல் போட்டவள் அவள்.

லாசார் வீட்டில் இயேசுவுக்கும் சீடர்களுக்கும் விருந்துபசாரம் நடந்தது. அங்கே மார்த்தாவின் சகோதரி மரியாள் விலையேறப் பெற்ற நல்ல நளதம் என்னும் பரிமள தைலம் ஒன்றைக் கொண்டு வந்து இயேசுவின் பாதங்களில் பூசி அதனைத் தன் கூந்தலால் துடைத்தாள் (அருளப்பர் 12: 1–8).

இயேசு பெத்தானியாவுக்கு மறுபடியும் வந்திருக்கிறார் என அறிந்த யூதர் அவரையும், மரித்த லாசாரையும் காணப் பெருங்கூட்டமாய் வந்தனர். பலர் அவரில் விசுவாசம் கொண்டனர்.

''மனுமகன் மகிமை பெறும் நேரம் வந்துவிட்டது'' (அருளப்பர் 12: 23) என்று இயேசு கூறினார்.

யெருசலேமுக்கு வந்த மக்கள் கூட்டம் இயேசு இருக்கும் இடமெங்கும் சூழ்ந்து நின்று அவர் கூறுவதைக் கேட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் துடைக்கும் அன்னை எங்கே? சீடர்கள் அவரை ஆச்சரியத்தோடு பார்த்த போது இயேசு கண்ணீர் நிறைந்த கண்களால் கவலையோடு அவர்களை நோக்கினார். அன்னை அறியாமல் இவை நிகழவில்லை. தன் மகனின் கண்ணீர் மிகப் பேறுள்ளது என்பதை மரியாள் அறிவாள்.

இயேசு மரித்து முப்பத்தைந்து ஆண்டுகளின் பின் யெருசலேம் தேவாலயமும், நகரமும் பெருமளவில் அழிக்கப்பட்டன. மக்களும் பெரும்பாலானோர் கொல்லப் பட்டனர். கி. பி. 70ல் இது நிகழ்ந்தது.

தேவாலயத் திருவிழா ஒரு புறம், மக்களால் கவரப் படும் புதிய குரு மறு புறம்; மக்கள் கூட்டமோ கட்டு மீறி யெருசலேமில் குவிந்திருந்தது. தேவதாய் அங்கில்லாமல் இருந்திருப்பாளா? அன்னையும் அங்கே தான். ஆனந்தம் பொங்க அல்ல, அழுகையை அடக்கி, அடக்கி ஆதரவற்றவளாய் ஆண்டவரின் அடைக்கலத்தில் தன் ஏக மைந்தனை ஒப்படைத்த வண்ணமாக இருந்தாள்.

என் மகன் எல்லாம் அறிவார் என அவள் வாய் முணு முணுத்தது. பெரிய துன்ப மொன்று வரக் காத்திருந்தது. தன் ஒரே ஒரு மகனை மக்களுக்காகப் பலியாக்கிப் பரிதவிக்கும் தாயாக வேண்டிய நாள் நெருங்கியிருந்தது.

விருந் தொன்றை சீடருடன் நடத்திய தன் மகன் வழமைப் பிரகாரம் கெத்சேமனே தோட்டத்துக்குச் செல்வார் என்று அத்தாய் அறிவாள்.

''தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்.'' அன்னையின் உடல் நடுக்கமுற்றது. ஏக்கத்துடன் எழுந்திருந்தாளோ? ஆம், எழுந்திருப்பாள் தான்.

''என் ஆன்மா சாவுக்கேதுவான வருத்தமுற்றிருக்கிறது.''

தூரத்தில் கேட்கும் சாவு மணி போல் ஏதோ கேட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட வாளின் நுனி ஒன்று நெஞ்சுக்கு நேரே நீட்டப் பட்டது போல் ஓர் கண்வீச்சு. கண்களை அகல விரித்தாள் அன்னை.

சீடர்கள் ஓடோடியும் வந்தார்கள். இயேசு போர்ச் சேவகராலும் யூதர்களாலும் பிடிபட்டார் என்றும், யூதாசே முத்தமிட்டுக் காட்டிக் கொடுத்தான் என்றும் கூறி நின்ற னர். அன்னை இதை அறிந்து மனம் நொந்தாள். என்ன ஆகுமோ என ஏங்கினாள்.

அன்னை மனம் பின்னோக்கிப் பார்த்தது இறைவாக் குகள் நிறை வேறும் காலம் வந்து விட்டதோ? இதயம் வெடித்து பிளப்பது போலத் துடிதுடித்தாள்,

பாடுகளையும், நோவையும், சாவையும் அவர் ஏற்கவே விரும்பி மனிதனானார். இது உண்மைதானா? அதை தானும் ஏற்க வேண்டுமா? ஒப்புக். கொண்டாள் அத்துன்பத் தின் அன்னை. ஓடோடியும் வந்த சீடர் அந்த இரவு நேரத் திலேயே அன்னையின் அறிவுரை கேட்டு தம் குருவை மீட் கலாமா எனவும் எண்ணி அங்கலாய்த்திருப்பர்.

''ஏழை சொல் அம்பலம் ஏறுமா?'' மரியாள் தன்னு டைய அந்தஸ்தையும், சீடர்களின் அந்தஸ்தையும் அறிவாள். தன் மகன் இதற்காகவே ஏழ்மையை நாடிப் பிறந்து ஏழை மீன்வர்களைச் சீடராக ஏற்று பணியாற்றினார். வீரத் தாயாக மாறினாள்.

இராஜ புத்திரனாகப் பிறந்திருந்தால்......

சிலுவை ஏது?
மரணம் ஏது?
மீட்பு ஏது?

நா அசைய நாடு அசைந்திருக்குமே. விண்ணரசுக்கும் மண்ணரசுக்கும் உள்ள வேறுபாடு இது தான். இறைமகன் இயேசு ஏழ்மையின் ரூபமெடுத்து மரணம் மட்டும் கீழ்ப்படிந் தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணில் விண்ணரசு தோன்றி மக்கள் புதிய வாழ்வு வாழ்ந்து புதிய அரசை நிலை நாட்ட, என் மகன் இயேசு கைதியானார், என அன்னை திட்டமாக அறிந்தாள்.

இராயப்பர் தன் குருவை மறுதலித்ததும், மனம் புண்ணாகி அழுத கண்களோடு அன்னையிடம் வந்து ஆறுதல் பெற்றிருப்பார் அல்லவா?

தன் மகன் குற்றவாளியாக நான்கு நீதிஸ்தலங்களுக்கும் கட்டுண்டவராய் செல்கின்றாரே எனக் கலங்கினாள். ஈற்றில் ஆளுநன் பிலாத்துவின் தீர்வையே தீர்வையாகும் எனவும் அப்பேதை அறிவாள்.

கதா நாயகி கண்ணகி பாண்டிய மன்னன் முன் தோன்றியதுபோலவும், மதுரை மாநகரைத் தீ மூட்டியது போலவும், நம் அன்னை தலைவிரிகோலமாக ஓடோடியும் செல்லவில்லை.

அன்னை மரி தன் தலையை மூடி முக்காடிட்டாள். கால்கள் விரைந்தன. வீதியில் அங்கொன்றும், இங்கொன்றுமாக ஆள் நடமாட்டம். யார் அம்மா நீர்? என்று கேட்பாரில்லை. ஆளுநன் பிலாத்துவின் அரண்மனையை நாடி நடந்தாள்.

கற்றூணிற் கட்டியடிபட்ட கோலத்துடன் ஆளுநன் பிலாத்துவின் முன் இயேசு நிற்கிறார் என்ற செய்தி யெருசலேம் மாதரைத் தட்டி எழுப்பி விட்டது. இதை அன்னையும் அறிந்தாள்.

அதிகாலை இருள் அகன்றும் அகலாத போதில், பட்சிகள் செட்டை அடித்தும் அடியாத விடியற்காலையில் மென் நடை போடும் மெல்லியர் பின்னே, அன்னையும் அடிமேல் அடி வைத்து அவசரம் அவசரமாக நடந்து வந்தாள்.

அன்னைக்கும் இயேசு மகனுக்குமிடையில் இருந்த ஓர் திரை நீக்கப்பட்டது போலிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையை மார்போடணைத்து அமுதூட்டிய அந்த நாட்கள், பிஞ்சுக் கையைத் தூக்கி அன்னையின் முகத்தைத் தடவிய நேரங்கள், விழுந்தெழுந்து நடைபயிலும்போது தத்தித் தாவிக் கழுத்தைக் கட்டிப்பிடித்த தருணங்கள் எல்லாமே தோன்றி மறைய, ''என் பிதாவின் இல்லத்தில் நான் இருக்க வேண்டும் என்பதை அறியீர்களா?'' என்ற வார்த்தை காதில் ஒலித்து நெஞ்சைத் தொட்டு எழுந்து நின்றது,

எல்லாம் மின் வெட்டில் தோன்றி மறைந்த காட்சிகளாய், மனதை முன்னும் பின்னுமாக அலைக்க, அகன்ற அரச வீதியில் அடியெடுத்து வைத்தாள் அப்பதிவிரதை.

மரியன்னையின் மனம் முன்னும் பின்னுமாக அலைபாய உள்ளிருந்து உந்தித் தள்ளும் வேகம் உரிய இடத்தில் அன்னையை நிறுத்தி வைத்தது.

''இதோ மனிதன்'' [ஆளுநன் பிலாத்து.]

அவரைச் சிலுவையில் அறையும்; அவரைச் சிலுவையில் அறையும்!'' [யூதர்.]

அக் காலத்தில் குற்றவாளிகளைக் கற்றூணோடு கட்டியடிப்பதும், பெரிய குற்றவாளிகளைக் கல்லால் எறிந்து கொல்வதும், சிலுவையில் அறைந்து கொல்வதும் வழக்கமாய் இருந்தது.

தனக்குச் சிலுவை மரணமே வரும் என்று இயேசு சீடர்களுக்கு மும்முறை முன்னதாகவே கூறியிருந்தார். இயேசு தனது மரணம் பற்றிப் பேசியிருந்ததும், அவர் கொல்லப்பட வேண்டியவராய் இருக்கிறார் என்று மக்கள் பேசியிருந்ததும் மரியன்னையின் மன வேதனையை அதிகரிக்கச் செய்தது.

துன்பத்தின் சோக ஓசை காதில் இசைத்துக்கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வம் அன்பு மயம். இதை யெருசலேமும் சுற்றுப் புறமும் அன்று அறிந்திருந்தது. ஆனால்! அந்தோ!! ஆளும் கட்சியினரின் கடும் எதிர்ப்புக்கு அஞ்சிய மக்கள் கைகட்டி, வாய் புதைத்து நின்றனர். ஏன் அன்புச் சீடர்களும் என்ன செய்தார்கள்? ஒளிந்துகொண்டார்கள் அல்லவா?

இந்த ஒரு அன்பு உள்ளம்தான் ''நசரேயன் இயேசு என் மகன்'' என்று பகிரங்கமாகச் சொல்லி நின்றது.

முதலாம் வாரம் லாசாரின் உயிர்ப்பு
இரண்டாம் வாரம் யெருசலேமின் இராசபவனி
மூன்றாம் வாரம் கல்வாரிச் சிலுவைப் பயணம்.

இன்பமும் துன்பமும் கலந்த இவ் வாழ்வு மரியன்னையை பின்வாங்கிப் போக விடவில்லை.

இக் கொடிய காட்சி கண்டு உள்ளம் குமுறினாள் அன்னை. ஆனால் மயங்கி விழவில்லை. மக்களின் பாவத்தைச் சுமக்க வந்தார். இதோ சுமக்கப் போகிறார். நானும் கூடவே செல்வேன் என்று மனத்தைத் தேற்றினாள். காலைக் கதிர் ஒளி வீச அன்னையின் கண்ணீர் பிரகாசித்து கன்னத்தில் உருண்டது. ஆளுநன் பிலாத்து கையைக்கழுவி சிலுவை மரணத்தையே தீர்ப்பாக்கினான். ஜனக் கும்பலின் நடுவே சிலுவை ஒன்று அசைந்தது. கும்பலிலிருந்து அதட்டலும் உரப்பலுமான ஒலங்கள் கிளம்பின. யெருசலேம் வீதி மக்களால் நிரம்பி வழிந்தது. குரூரமான ஓர் ஊர்வலம். இயேசு மகனோடு இன்னும் இரு கள்வர் சிலுவை சுமத்தப் பட்டனர். இருவரையும் சேவகர் முன்னே நடத்திச் செல்ல, இயேசுவை பரிசேயர் சிலுவையோடு பின்னே நடத்திச் சென்றனர். வேடிக்கை பார்ப்போரும் கூட்டமாகச் சென்றனர். அன்பன் அருளப்பரும் பின் தொடர்ந்தார்.

யெருசலேம் மாதர் பலரும், பாஸ்கா பண்டிகை கொண்டாட வந்த மக்கள் கூட்டமும் பின் செல்ல அன்னை மனமுருகிக் கண்ணீர் சிந்தியவாறு தொடர்ந்து நடந்து கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைகாரர் தன் அருமை மைந்தனைக் கொடுமையோடு நடத்திப் போவதைக் கண்ணுற்றாள். இரவு முதல் அனுபவித்த பலவித வேதனைகளால் இயேசு இரத்தத்தை இழந்து பெலன் குன்றி, சிலுவையின் பாரத்தைத் தாங்க மாட்டாது தள்ளாடி விழுந்தெழுவதைக் கண்ணுற்றுக் கலங்கினாள் அன்னை.

தன் ஆசைப்புத்திரனின் முகம் இரத்தம், வியர்வை, தூசி, துப்பல், மண் என்பன படிந்து அலங்கோலமாக இருப்பதைக் கண்ணுற்று இதயம் நொந்தழுதாள். இயேசு திரும்பி அன்னையைப் பார்த்தார். சிமியோன் என்னுமொருவனைக் கொண்டு சிலுவையைச் சுமப்பிக்கச் சேவகர் எண்ணி, அவ்வாறே உதவி கொடுத்ததைக் கண்டு மனம் ஆறினாள் அன்னை.

கூட்டத்துள்ளிருந்து ஓர் பெண் துணிவோடு முன் வந்து தனது கையிலுள்ள துணியால் இயேசுவின் முகத்தைத் துடைத்தாள். இந்த இரண்டு செயல்களும் மரியன்னையின் புண்பட்ட இதயத்துக்கு இதமாயிருந்தன.

பெண்கள் பலர் அவரையும் அவர் அன்னையையும் கண்டு அவர் பக்கமாகச் சென்று அலறி ஓலமிட்டனர். அந்நேரம் இயேசுவின் வார்த்தைகள் அன்னையின் காதிலும் விழுந்தன. அன்னை அழுது புலம்பவில்லை. கதைகள் பேசவும் இல்லை. தன் மைந்தனை உற்று நோக்கினாள்.

இயேசு விழுந்தெழுந்து நடந்த பாதையில் விழுந்த இரத்தச் சொட்டுக்களை அன்னையின் கண்கள் காணத் தவறவில்லை. ஏற்றமானதும் சாய்வுமான பாறையின் வழியே சிலுவையோடு அவரை நடத்திச் சென்று கபாலஸ்தலத்தை அடைந்தனர். அங்குள்ள மண்டையோடுகள், எலும்புகள், மாத்தண்டுகள் சிலுவை மரணம் எவ்வாறானது எனப் பயமுறுத்தி நின்றன.

இயேசுவின் வஸ்திரங்களைக் களைந்தபோது அதிலொன்று அன்னையின் கைநெசவாக இருந்ததை அன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானித்து, அதில் இரத்தம் தோய்ந்திருப்பதையும் கண்டு கண்ணீர் சொரிந்தாள். உடைகளைக் களைந்ததினால் காயங்களிலிருந்தும் இரத்தம் சொரிந்தது. அன்னை கண்களை மூடி விம்மினாள்.

உலக மக்களின் பாவங்களைக் கழுவி மீட்கத்தன் மைந்தன் சிலுவையின் மீது படுத்து இருகரங்களையும் நீட்டிக் கொடுக்கிறதைக் கண்ட தாயின் மனம் வேதனையால் மயங்கியது. கைகளிலும் கால்களிலும் ஆணிகள் கடாவப்பட்டதும் அங்கு நின்ற பெண்மணிகளும், இயேசுவின் அன்பர்களும் மரியாளைக் கிட்டிவந்து குழுமி நின்று ஓலமிட்டுக் கதறி விம்மிப் பெருமூச்செறிந்தனர்.

ஆயிரம் ஆயிரமான நன்மைகளைப் பெற்ற யூதரே அவரைச் சிலுவையில் அறைந்து தொங்க விட்டுப் பார்த்துப் பரிகசித்தனர்.

இயேசு மக்கள் யாவரினதும் பாவங்களை மன்னிக்கும்படி பரம பிதாவிடம் வேண்டுதல் செய்து, வேதனையுறவும், மூச்சுத்திணறவும், பெருமூச்செறியவும் கண்டு நம் அன்னையும் இரங்கினாள்; அழுதாள்.

தன் மகன் சிலுவையில் இருந்து சில வார்த்தைகள் சொல்லவும் அன்னை தன் கண்ணீரைத் துடைத்தவாறு சிலுவையடியில் நெருங்கி நின்று பார்த்த வண்ணமாகத் தவித்தாள். மரியன்னையின் பக்கத்தில் உறவுப் பெண்களும் சீடன் அருளப்பரும் நின்று கொண்டிருந்தனர்.

இயேசு தம் தாயையும், அருகில் நின்ற தம் அன்புச் சீடரையும் கண்டு, தம் தாயை நோக்கி "அம்மா, இதோ உம் மகன்" என்றார். பின்பு சீடரை நோக்கி, "இதோ உன் தாய்" என்றார் (அருளப் 19 : 26–27.)

இயேசு கூறிய இந்த அருமையும் உறவுமான வார்த்தை அன்னைக்கு மிகவும் ஆறுதலைக் கொடுத்தது. தன் மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை அனாதரவாக விடவில்லை என்று நிறைவுற்றாள். இயேசுவின் வார்த்தைகள், வேதனைகள், தாபங்கள், தாகங்கள் எல்லாம் இறுதிக் கட்டத்தையடைவதை அன்னை கண்ணுற்றாள். இயேசு பட்ட ஒவ்வொரு பாடுகளையும் அன்னை பரம பிதாவுக்குக் கையளித்து, மீட்பு என்ற பாரிய பணி உலகில் நிறைவாக வேண்டும் என்று செபித்தாள். அவருடைய உச்சக் கட்டமான வேதனை தொடங்கியதும் அவர் ''தந்தையே உமது கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்'' என்று உரக்கக் கூவினார். இதைச் சொன்னதும், உயிர் நீத்தார் (லூக்காஸ் 23 : 46).

அன்னையும் அன்புச் சீடனும் மரியமதலேனாளும் உறவுப் பெண்களும் ஒருங்கே சேர்ந்து நின்று அழுது புலம்பினர். அப்போது நூற்றுவர் தலைவன் கூறிய வார்த்தை அன்னையை நிமிர்ந்து நிற்கச் செய்தது.

''உள்ளபடியே இவர் நீதிமான்'' (லூக்காஸ் 23 : 47.) தன் மகனை நீதிமான் என்று வாழ்த்தியவனுக்கும், பரம தந்தைக்கும் நன்றிகூறினாள். உள்ளம் நிறைந்தது. தன் சொந்த மகனையே நொந்து வெந்து சிலுவையில் உயிர் நீக்கவிட்டுத் தாங்கொணாத் துயர்க் கடலில் மூழ்கிய போதும் இவ்வார்த்தை உள்ளத்துக்கு ஆறுதலைக் கொடுத்தது. ஏனெனில் அவர் குற்றவாளி அல்ல என ஆளுநன் பிலாத்து கூறியும், யூதர் ''அவரைச் சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும்'' எனக் கூவி அறைவித்தனர். கொல்கொதாவில் தன் மகனை யாவரும் பரிகசிக்க ஏக்கத்தோடு தலைகுனிந்து, நிற்கும்போது, கள்வன் ஒருவன் அவரைப் பார்த்து ''இவரோ ஒரு குற்றமும் செய்யவில்லை'' என்று அறிக்கையிட்டு அவர் அரசுரிமையோடு வரும்போது தன்னையும் நினைவுகூர்ந்து கொள்ளும்படி கேட்டதையும் அன்னை நிறைவோடு வரவேற்றாள்.

வால வயதில் தன் மகனை இவ்வித நீச மரணத்துக்கு கையளிக்க நேர்ந்தாலும், அதனைவிட பன்மடங்கு பலனுள்ள மீட்பு என்ற வானக உறவு அந்த மரணத்தால் உண்டாவதை மிகமிக விரும்பினாள் அன்னை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையனைத்தும் எவ்வாறு நிறைவேறினவோ, அவ்வாறே நாதியற்ற தனக்கு மைந்தனின் இறுதிச் சடங்கை நிறைவேற்ற தன் பரம தந்தை யாரையாவது அனுப்புவார் என எண்ணமிட்டபடி சிலுவையடியில் அங்கலாய்த்து நின்றாள்.

அரிமத்தியா ஊரானாகிய சூசை ஆளுநன் பிலாத்திடம் உத்தரவுபெற்று வந்தார்.

அவர்களும் அருளப்பருமாக இயேசுவின் உடலை சிலுவையினின்றும் இறக்கி கன்னிமாதாவின் மடியில் சிறிது நேரம் வைத்தார்கள். அன்னை தன் அன்புக் கரங்களால் ஏந்தி மடியில் வைத்து உச்சிமோந்து, அன்பு முத்தமிட்டு, காயங்களைத் தடவி, அவர்களிடம் ஒப்படைத்தாள்.

''உடலை எடுத்துக் கோடித் துணியில் சுற்றித் தனக்கெனக்குடைந்திருந்த புதுக்கல்லறையில் வைத்துப்பாரியகல்லால் வாயிலை அடைத்தனர்; அங்கே மதலேன் மரியாளும், அன்னை மரியாளும் கல்லறைக்கு எதிரே அமர்ந்திருந்தனர். (மத்தேயு 27 : 57-61) என சீடர் எழுதிவைத்தனர்.

அன்னை சோகத்தால் நிறைந்திருந்தாலும் சூசையும் நிக்கோதேமும் சேர்ந்து வாசனைத் தைலம் பூசி புதிய துணியால் மூடி, புதிய கல்லறையில் மரியாதையான அடக்கம் செய்ய நினைத்தார்கள் என்று மிகுந்த நன்றிப் பெருக்குடன் இறைவனுக்கு நன்றி கூறினாள்.

ஓர் சிறிய கூட்டம் மட்டுமே யேசுவைச் சுமந்துகொண்டு டக்கத்திலுள்ள கல்லறைவரை சென்றது. பெண்கள் பின்னே நடந்துசெல்ல, சொரியும் இரத்தப் பெருக்கையும், தன் மைந்தனின் உயிரற்ற உடலையும் கண்வாங்காது பார்த்துக் கொண்டு சென்றாள் அன்னை. அடக்கம் செய்தபின் வெளி வாயிலைப் பெருங்கல்லால் மூடிவிட்டுத் தத்தம் வீடு நோக்கி மௌனமாக நடந்தனர்.

கல்லறையை விட்டுப் பிரிந்து அன்னையும் அருளப்பரும் ஒன்றாகவே சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு தாம் சொன்னபடியே பாடுபட்டு மரித்தார் என்றும், அவர் அறிவித்தபடியே மீண்டும் உயிர்ப்பார் என்றும் அன்னை விசுவாசித்தாள். சீடர்களும் அதையே பேசிக்கொண்டனர். வெள்ளி வாரம் இத்துன்ப நிகழ்ச்சியில் முடிய, மறுநாள் ஓய்வு நாளாக இருந்தது.

மரியாள் துன்பப் போர்வையைக் களைந்து, சீடர்களை ஒன்று சேர்த்தவள், இனி நடக்கவேண்டிய கருமம் என்ன என்பதையே மனதில் ஆராய்ந்துகொண்டிருந்தாள்.

தேவத்திருமகனின் நாசரேத்தூர் வாழ்க்கையிலும், யெருசலேம் நகர வாழ்க்கையிலும் என்ன விதமான குருப்பணிகளை அவர் நிறைவேற்றினாரோ, அவ்வாறே சீடர்களும் பணிபுரிய, அவர்களைத் தயார் நிலைக்கு வைத்து, தலைமைச் சீடத்தியாக நின்று உபசரித்தாள்.

# துன்பத்தின் பின் இன்பம் 12

"உங்களுக்குச் சமாதானம்" பூட்டப்பட்ட அறையினுள் அன்னையும் சீடர்களும் ஒருமித்துக் கூடியிருக்கும் போது அங்கு அவர்கள் நடுவில் இயேசு தோன்றினார். அவர்கள் திடுக்கிட்டு அச்சம் கொண்டனர், அவர் தமது காயங்களைக் காட்டியதும் விசுவசித்து நம்பி மகிழ்ச்சி கொண்டனர். பொரித்த மீன் துண்டொன்றை அவர்களிடம் வாங்கிச் சாப்பிட்டார் (லூக் 24 : 50-55)

மகிழ்ச்சியும் பெருமையும் உள்ள இந்த உயிர்ப்பினால் அன்னை பூரண இன்பமெய்தினாள். நாற்பது நாள் வரை இயேசு காட்சி கொடுத்தார்.

''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய்'',

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு தம் அன்னையையும் சீடரையும் பரிசுத்தாவி யின் வருகைக்காகக் காத்திருந்து செபிக்கும்படி கேட்டிருந் தார். அவ்வாறே சீடர்களும் அன்னை மரியாளும் கூடி யிருந்து செபித்தார்கள். பத்தாம் நாள் அவர்கள் பரிசுத்தா வியைப் பெற்றார்கள்.

அவர்களின் நற்செய்திப் பணிக்கு அன்னையும் இயலு மான துணை புரிந்தாள். அருளப்பரோடு வாழ்ந்து, மற்ற வர்களுடனும் அன்பு கொண்டிருந்தாள்.

நாள்தோறும் தன் மைந்தனின் நற்செய்திப் பணி நன்கு பரம்புவதை அன்னை கண்டு மகிழ்ச்சியுற்றாள். சீடர்கள் துன்புறுத்தப்படும்போது மிகவும் கலங்கி, தன் தந்தையாகிய இறைவனிடமும் இறைமகன் இயேசுவிடமும் அவர்களுக்காகச் செபிப்பாள். தன் முழு எண்ணமும் இயேசுவின்மேல் கொண் டிருந்த அன்னை, சீடர்களுடன் வாழும்போதும் பேசும்போதும் அவருடைய உற்பவம், பிறப்பு, சிறுபராயம், வாலிபம் ஆகிய கால வரலாறுகளை அவர்களுக்கு ஒளிவுமறைவின்றி அறியப் பண்ணினாள். இயேசு உயிர்த்த பின்பு, அவரே உண்மை யான மெசியா என்றும், மெசியாவே இறைமகன் என்றும் சீடர்கள் நற்செய்தி அறிவிப்பில் போதித்தனர்.

இயேசுவின் போதனைகளையும் பாடுகளையும் சீடர்கள் நன்கு அறிந்திருந்தபடியினால் அவர்கள் தங்கள் நற்செய்தி ஏடுகளில் தெளிவாக யாவையும் எழுதி வைத்தனர். அன்னை மரியாளுக்கு எவ்வளவு கண்ணியம் கொடுக்க முடியுமோ அவ்வளவு கண்ணியத்தையும் நற்செய்தியில் கொடுத்திருந்தனர்.

அவர்கள் ஆரம்ப நாட்தொடக்கம் அன்னையையும் தங்க ளுடன் சேர்த்து வைத்து அன்புகொண்டு வாழ்ந்தனர் என் பதை பின்வரும் வாசகம் உறுதிப்படுத்துகிறது.

''இவர்கள் எல்லோரும் பெண்களோடும், இயேசுவின் தாய் மரியாளோடும் அவர் சகோதரரோடும் ஒரே மனதாய்ச் செபத்தில் ஈடுபட்டிருந்தார்கள்... *(அப்போ. பணி 1 : 14).*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாள் அதிக காலம் சீடர்களுடன் சேர்ந்தே வாழ்ந்து, தன் மைந்தனின் மீட்பு வேலையை அவர்கள் நடத்த அவதானித்திருந்தாள். அன்னை அறியாத செயல்கள் எதுவும் அவர்களிடம் இருக்கவில்லை. அவர்களுக்குப் பாதுகாப்புத் தாய் போல அமைந்திருந்தாள். வழியனுப்பும் தாயாகவும் இருந்தாள்.

அப்போஸ்தலர்களின் பணிகள் நாடெங்கும் பரவ வேண்டும் என்ற பரந்த நோக்கோடு மாதா அவர்களை தன் அன்புக்குள் விலகாது சேர்த்திருந்தாள்.

தன் மைந்தன் சென்ற வழி தானும் செல்ல வேண்டும் என்ற பேரின்ப ஆவல் மிஞ்சியவளாகவும் அன்னை காணப்பட்டாள். மைந்தனிடமும் பரம தந்தையிடமும் செல்ல வேண்டும் என்று அவாவுற்றாள் அன்னை. எபேசு நகரில் சீடன் அருளப்பருடன் வாழ்ந்ததாக பிற மரபுகள் கூறுகின்றன. யெருசலேமில் வாழ்ந்ததாகவும் வரலாறுகள் கூறுகின்றன. எங்கேயென்றாலும் சீடருடனேயே வாழ்ந்தாள் என்பது உண்மை.

ஆதித் திருச்சபையில் இயேசுவின் அன்புச் சீடர்களும் இயேசுவின் பக்தி கொண்ட பெண்களும் விதவைகளும் ஒருங்கு சேர்ந்து ஒரு கூட்டமாக வாழ்ந்ததை அப்போஸ்தலர் பணி நூல் கூறுகின்றது. இவர்களுடைய பராமரிப்பில் மாதாவாகிய மரியாள் தன் உலக வாழ்வை நீத்து பரம பதம் அடைந்தாள். தன்னை மரணத்துக்கு ஆயத்தம் செய்யும் போதெல்லாம் மிகமிக மகிழ்ச்சியாய் இருந்தாள் என்பதைச் சீடர்கள் அறிந்திருந்தனர். மரணிக்க முன்னர் ஒவ்வொரு சீஷரிடமும், திருச்சபையைப் பற்றிய நல்ல வார்த்தைகள் கூறித் தனது ஆசீர்வாதத்தையும் அவர்களுக்கு வழங்கியிருந்தாள்.

அன்னை தன் மைந்தன் இயேசுவை எவ்வளவு அன்பு கொண்டாளோ, அவரின் விண்ணேற்றத்தின் பின், அவர் ஏற்படுத்திய திருச்சபையையும், அதன் பணியாட்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலும் பன்மடங்காக அன்பு கொள்வதாகக் கூறி நின்றாள். மரிக்கும்போது சில சீடர்கள் சமூகமாயிருந்து இறுதிச் சடங்குகளை நிறைவேற்றினர்.

மரணத்தின் போது சிலரும் அடக்கத்தின் போது மிகுதிச் சீடர்களும் சமூகமாயினர் என்றும், தோமையார் என்பவர் இரு தினங்கள் கழித்தே வந்தார் என்றும் மரபுக் கதைகள் கூறுகின்றன. தோமையாரை கல்லறைக்கு அழைத்துச் சென்று அன்னையின் உடலைக் காட்ட எத்தனித்த போது, கல்லறையில் அன்னையின் உடல் காணப்படவில்லை என்றும் அவ்வரலாறுகள் கூறுகின்றன.

அன்னைக்குத் தத்துப் புத்திரனாக மைந்தன் இயேசு கொடுத்த சீடன் அருளப்பர், அன்னையின் விண்ணேற்றம் பற்றித் தான் கண்டு எழுதி வைத்த காட்சியானது உண்மைச் சான்றாக அமைந்திருக்கிறது.

''விண்ணகத்தில் அரியதோர் அறிகுறி தோன்றியது. பெண்ணொருத்தி காணப்பட்டாள். அவள் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தாள்; நிலவின் மேல் நின்று கொண்டிருந்தாள்; தலையின் மீது பன்னிரு விண்மீன்களை முடியாக சூடியிருந்தாள்'' (திருவெளி 12:1)

அன்னையைப் பராமரிக்கவென்று ஒப்படைக்கப்பட்ட சீடன் அருளப்பரே இதை தனது ஏடுகளில் எழுதியிருந்தார்.

பக்திக்குரிய சம்பவங்கள் பூமியின் மேற்பரப்பில் நடைபெறுவதனாலேயே மனமாற்றம், புதிய சீவியம், ஆவியின் செயல்கள் என்பன நடைமுறையாகின்றன.

## அன்னைக்கு வரவேற்பு 13

உலகத் தோற்றத்தின் போது உண்டாக்கப்பட்ட பழைய ஏவாள், புத்திரர் புத்திரிகளைப் பெற்றாள். பாவத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமியில் அழைத்தாள். அவளும் அவள் பிள்ளைகளும் அழிந்து போயினர். ஓர் நாள் மனுக்குலம் முழுவதுமே நீரில் மூழ்கியது. ஆனால் 'அவள் வித்து' என்ற வாக்கு நிறை வேற்றப்பட வேண்டியே நோவாவும் சந்ததியினரும் காப்பாற்றப்பட்டனர். அப்போதும் அவள் வரவேற்கப்பட்டாள்.

பழைய ஏற்பாட்டின் இறுதிக் காலப் புத்திரியாக அவள் வந்து பிறந்தாள். பதினைந்து ஆண்டுகளில் புதிய ஏற்பாட்டின் கன்னியாகத் திகழ்ந்தாள். அவள் தேவதூதனால் வரவேற்கப்பட்டாள். கன்னியின் புத்திரனையே இடையர் வரவேற்றனர். கன்னியின் புத்திரனையே இராஜகுமாரன் எங்கே? எனத் தேடி ஞானிகள் வந்து வரவேற்றனர். கன்னிக்கே மகிமை உண்டானது.

கன்னியின் புத்திரனையே சிமியோன் குரு கைநீட்டி ஏந்தி வரவேற்புரைகள் கூறினார். இத்தனைக்கும் குழந்தை குழந்தையாக இருக்க, வரவேற்பையும் வெகுமதிகளையும் மண்ணகப் பரிசாகப் பெற்றவள் அன்னையே. மண்ணக மரியாதைகளையெல்லாம் ஏற்றுத் தன் மனதில் முறையாக அமைத்திருந்தாள் அன்னை மரியாள்.

பன்னிரண்டு வயதில் இயேசு சிறுவன் பேசிய வார்த்தை சிறுவனுக்குரிய வார்த்தையாய் இருந்ததா? அதையும் வரவேற்றிருந்தாள் அன்பு அன்னை. அன்னைக்கும் இறைமை பற்றிய ஆவல் உண்டுதான் என்பதை, அப்புத்திரனின் வார்த்தைகள் கிளறிக் காட்டுகின்றன அல்லவா? தாயை வரவேற்று கீழ்ப்படிந்து பின் சென்றான்.

கானாவூர்க் கலியாண வீட்டில் பாலன் இயேசு சீடர் முன்னிலையில் "என்னுடைய நேரம் இன்னும் வரவில்லையே" என்று கூறியதையும் அன்னை ஏற்று நின்றாள். தாயை அவர் வரவேற்றார். அன்னை அங்கு பலரின் மத்தியில் வரவேற்கப்பட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல சிலுவையின் அடியிலும் அன்னை மரியாள் இன்னொருவருக்குத் தாயாக வரவேற்கப்பட்டாள். அந்த வரவேற்பையும் அன்னை ஏற்றாள். அவள் பெற்ற மைந்தனே அவளை இன்னொருவரின் கையில் ஒப்படைத்து அவளை வரவேற்று, அவளிடமிருந்து பெற்ற உடலையே நீத்தார்.

ஏவாளின் கீழ்ப்படியாமையால் ஏற்பட்ட பிளவை மரியாள் தனது கீழ்ப்படிவான "இதோ ஆண்டவருடைய அடிமை" என்ற வார்த்தையால் ஒன்று சேர்த்து உறவு உண்டு பண்ணினாள். அன்னை "ஆகட்டும்" என்றாள். மண்ணை விண்ணோடும், விண்ணை மண்ணோடும் இணைக்கும் இறைபணிக்கு மரியாள் ஏணியானாள். இறைவன் அவளை வரவேற்றார். மரியாள் பூரணமாய் உடன்பட்டு, பூரண சேவையாற்றி, சிலுவைப் பலியை ஒப்படைத்து, மனிதன் கடவுளோடு தொடர்பு கொள்ளச் செய்ய சிலுவையடியில் நின்று தன்னிடமிருந்து மைந்தன் பெற்ற இரத்தம் முழுவதையும் சிந்துவதற்கு ஒப்புக் கொடுத்தாள்.

மரியாள் உலக மீட்புக்கு தன் கன்னிமையையும் தன் உலக வாழ்க்கையையும் பூரணமாக ஈந்து மண்ணவர் யாவரினதும் தாயாக வரவேற்கப்பட்டாள். ஆண்டவரின் அடிமையானவள் வாழ்வோரின் தாயாவதில் தடையேதும் இல்லை.

மண்ணுலகில் வாழ்வோருக்கு எம் மாதா தாயாகிறது மன்றி விண்ணகம் செல்வோருக்கும் தாயாகிறாள். ஏனெனில் விண்ணகமிருந்து வந்த தேவமைந்தனுக்கு தாயாகி நின்றதை விண்ணகமே ஏற்புடையதாக்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாலயம் 14

ஆதிகாலத்திலிருந்தே ஓர் இடத்தைக் குறித்துவைத்து அதில் இறைவன் இருக்கிறார் என்ற பக்தியுள்ள எண்ணம் மனிதனுடைய மனதில் இருந்து வந்தது. பழைய வேதாகம வரலாற்றின்படி யாக்கோபு தானாகவே அவ் வார்த்தை யைப் பிறப்பித்தார்.

''இந்த இடம் எவ்வளவு அச்சத்துக்குரியதாய் இருக்கிறது! இதுவே இறைவனின் இல்லம், வானக வாயில்'' (ஆதி28 :17) என்றான். அது பெத்தெல் என அழைக்கப்பட்டது அவ்விடத்திற்கு யாக்கோபு பலதடவை சென்று இறைவனை வணங்கினார். இவ்வாறே தேவாலய அனுசரிப்பு ஆரம்பமானது.

தாவீது அரசன் தன் சிறப்புமிக்க அரசாட்சிக் காலத்தில் ஓர் அழகிய பிரமாண்டமான ஆலயத்தைக் கட்ட ஆசித்தார். அதை இறைவன் தடுத்து நிறுத்தி, தாவீதின் மகன் சாலமோன் கட்டி முடிக்க வரம் அருளினார். சிறிய அளவிலிருந்த தேவாலயம் பெரிய அளவில் பெரிய எண்ணத்தில் உருவானது.

இவ்வாறு தேவாலய நிருமாணமும் ஆராதனைகளும் வளர்ச்சியடைய, தேவாலயத்தில் இறைவன் வாசஞ் செய்கிறார் என்ற நம்பிக்கையும் வளர்ந்தது. தேவாலயங்கள் பரிசுத்த ஸ்தலங்களாக மதிக்கப் பெற்றன.

தேவன் வசிக்குமிடம் தேவாலயமானது போலவே தேவ மகன் பூமியில் வந்து ஒரு கன்னியின் கர்ப்பத்தில் பத்து மாதம் தங்கினார். அது பரிசுத்தாவியின் செயலானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் உலகை மீட்கவே தம் ஏக மைந்தனை அவ்வாறான முறையில் கொடுப்பார் எனவும், அவர் மனித அவதார மாவார் எனவும் பல இறைவாக்குகள் கூறி இருந்தன. இறை மகனாருக்கு கன்னியின் உதரம் ஆலயமானது. தேவாலயங்கள் எவ்வளவு தூய்மையாக உள்ளனவோ, கன்னி மரியாளின் உள்ளமும் உடலும் அவ்வளவு தூய்மையாகவே இருந்தன. மனிதர் பிரவேசியாத வாயில் வழியாகவே தேவன் நுழைவார் என இறைவாக்கு ஒன்று கூறப்பட்டிருந்தது. பழைய இறைவாக்குகளைக் கொண்டே கன்னி மரியாளின் தூய்மை, மகிமை என்பனவற்றைக் கண்டறியலாம். அவ்வாக்கை இறைவாக்கினர் எசேக்கியேல் முன்னமே கூறியிருந்தார்.

''அந்த வாயில் பூட்டப்பட்டிருந்தது. அப்போது ஆண்டவர் என்னை நோக்கி...

''இந்த வாயிலின் கதவு மூடப்பட்டே இருக்கும். திறக்கப்படாது. யாரும் இதன் வழியாய் உள்ளே நுழையக்கூடாது; ஏனெனில் இஸ்ராயேலரின் கடவுளாகிய ஆண்டவர் இதன் வழியாய் உள்ளே சென்றார்; ஆகவே இது மூடப்பட்டே இருக்கும்'' (எசேக்கியே 44 : 2).

இந்த இறைவாக்கு பூமியிலுள்ள கோயில்களின் வாயிலைக் கருதாது கன்னியின் கர்ப்பத்தின் வாயிலையே குறித்து நின்றது. ஒரு குருவோ, லேவியக்குருவோ, உட்செல்லாத பரிசுத்த ஸ்தானம் கோயில்களில் இடம் பெறுவதில்லை. மகா பரிசுத்த ஸ்தலத்துள் பிரவேசிக்க லேவியக் குருக்களே அனுமதிக்கப்பட்டனர்.

எசேக்கியேல் என்னும் இறைவாக்ினருக்கு இறைவன் காட்டிய புனித ஸ்தலம் எதுவாக இருக்கும்? மனிதன் பிரவேசியாத வாயில் எதுவாக இருக்கும்? உலகில் மனிதன் பிரவேசியாத வாயில் உண்டா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னியின் உதரமே மனிதருக்கு மூடப்பட்ட கதவுடன் கூடிய ஆலயமாக இருந்தது. தேவமகன் பத்து மாதம் கன்னியின் வயிற்றிலும், முப்பது ஆண்டுகள் கன்னியின் சிற்றில்லத்திலும் வாசம் செய்யவே அக் கன்னி மரியாள் தேவதாயாகப் பிறப்பிக்கப்பட்டாள். கன்னியின் உள்ளத் தூய்மை, உடற் தூய்மை, இல்லத் தூய்மை யாவுமே தேவமகன் இயேசுவுக்கு அவசியமாயிருந்தது. கன்னி மரியாளின் நாற்பத்தெட்டு வருட வாழ்க்கை தூய்மையாக வேண்டியிருந்ததால், எசேக்கியேல் கண்ட காட்சியில் முக்காலமும் மரியாள் கன்னியே என்ற கருத்துப்பட ''மூடப்பட்டே இருக்கும்' என்று கூறிவிட்டார். இதை நாமும் ஏற்க வேண்டாமா? கன்னி மகன் தேவாலயத்துக்கு உரியவரே.

முக்காலமும் கன்னி எனக் கூறினார் வேத அறிஞர் ஒருவர். நாமும் கூறலாம், நாமும் ஏற்கலாம், கன்னிக்கு மகிமை கொடுக்கலாம், தேவாலயமாகவே எண்ணப்படலாம். யாக்கோபு கூறியதும் இதுதான். உலகில் பல தேவாலயங்கள் தோன்றியிருப்பினும், அங்கு தூய்மையின்மை காரணமாக இறைவன் பிரவேசியாதிருக்கிறார். ஊழல் நிறைந்த மக்களே பெருமையிலும், பணத்திலும் நிறைந்து, தாங்களே கோயில், தூண்களாக நின்று பெருமையடித்து, வீம்பு பேசுகின்றனர். அத் தேவாலயங்களை இறைவன் துயரோடு கண்ணோக்குகிறார். தேவாலயம் தூயமக்களால் நிறையவேண்டும் என விரும்புகிறார்.

## தேவமகனும் தேவதாயும் 15

தேவதாய் தனது உலக வாழ்வை இயேசு மகனின் ஆன்ம சரீர நலனுக்காகச் செலவழித்து, இறைமைக்குரிய கடமைகளை நிறைவேற்றினாள் எனினும் மனுக்குல மக்கள் யாவருக்காகவும் வாழ்ந்து தியாகியுமானாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதர்களையெல்லாம் ஒரு புனித வரிசையில் நிறுத்தும் போது நம் அன்னை அவர்களெல்லாரிலும் பார்க்க உயர்ந் தவளே. ஏனெனில் புனிதர்கள் உலகவாழ்வில் பலவகை களிலும் ஈடுபட்டு, தம்சுயஎண்ணங்களைக் கட்டுப்படுத்தி, இளமையிலோ, முதுமையிலோ புனிதத் தன்மையைப் பெற் றார்கள். எம் அன்னையோ பிறப்பிலேயே புனிதத் தன் மையைப் பெற்றுப் பிறந்தாள். இறைமகனுக்குத் தாயா னாள். கன்னியும் தாயும் சேடத்தியுமாக வாழ்ந்தாள். மரணத் திலும் அவள் ஆன்ம சரீரத்துடன் விண்ணேற்றம் அடைந் தாள். அதனால் புனிதர்கள் பெறாத சிறப்பிடத்தை இவ் வன்னை பெற்றுக் கொண்டாள்.

இயேசுவின் பிறப்பு அறிவிப்பில் இறைச் செயலே முத லிடம் பெறுகிறது. கடவுளே தம் தூதனை அனுப்பி மரியா ளின் இசைவைக் கேட்கிறார்.

கணவனை அறியாத மரியாள் இறை வார்த்தைக்கு செவிசாய்க்கிறாள், இசைந்து போகிறாள். "இதோ ஆண்ட வருடைய அடிமை" இது அவள் வாழ்வின் குறிக்கோள். தூய ஆவியானவரே நிழலிட்டு மரியாளில் செயல்பட்டாலும் அவளுடைய "ஆகட்டும்" தான் அவள் கன்னிமையைத் தாயாக்குகிறது.

"காலம் நிறைவுற்றபோது கடவுள் தம் மகனைப் பெண் ணிடம் பிறந்தவராகவும் திருச்சட்டத்திற்குக் கீழ்ப்படிந்தவரா கவும் அனுப்பினார்" (கலா 4 : 4 , 5.).

மரியாள் உலக வரலாற்றுக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சி களுக்கு ஆளாகியபோது, அவள் மனித - அதாவது பெண் இனத்துக்கு அப்பாற்பட்ட ஒரு தெய்வக் கன்னிக்கு ஒப்பா கிறாள்.

"இதோ ஆண்டவருடைய அடிமை" என்ற வார்த்தை யில் மரியாள் தன்னை முழுவதும் தானே விரும்பி இறை வனுக்குக் கொடையாக அளிக்கிறாள். அடிமையென்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது தன்னிடம் தனக்கென்று ஒன்றுமேயில்லை. தன்னுடையதெல்லாம் இறைவனுடையதே என்கிறாள். இந்த நிலையில் கன்னி தாயாகின்றாள். இயேசுவுக்கு மட்டுமன்றி கிறிஸ்தவர்கள் யாவருக்குமே தாயாகிறாள்.

ஆதிக் கிறிஸ்தவர்கள் மரியாளைத் தம் தாயாக ஏற்று, மேலும் மரியாளைத் தலைமைச் சீடத்தியாகவும் வைத்து நடத்தினார்கள்.

மரியாளின் பூரணமான வாழ்வு, இறைவார்த்தையை ஏற்று, செபித்து, விசுவாசித்து, சீடத்துவத்தை நிறைவாக்கியதேயாகும்.

இறைவனின் திட்டத்திலே மரியாள் ஊழ் ஊழி காலத் திற்கு முன்பே கன்னியாகவும், தாயாகவும் தேர்ந்து கொள்ளப் பட்டிருந்தாள்.

இறைவனின் திருவுளத்திற் கேறப இறைவனின் தாயாகி துன்பச் சூழலிலே தன் மகனைப் பெற்றெடுத்து, திருச்சட்ட முறைகளுக்குக் கீழ்ப்பட்டு, அவற்றை நிறைவேற்றி, மகனுடைய துயர்களிலே பங்கு பெற்று, உற்றாருக்கும் பிறருக்கும் உதவியளித்து இறைவனின் தாய், 'இறைமக்களின் தாயாக' மாறி நிற்கிறாள்.

மரியாள் இயேசுவுக்குத் தாயாகிய இயற்கை உறவை விட்டு, சீடத்துவ உறவை அடைந்த நிலையிலேயே ''அம்மா, தாயே'' என்று அழைக்கப்படாது ''பெண்ணே'' என்று அழைக்கப்பட்டாள். கல்வாரியிலும் இவ்வாறே அழைக்கப் பட்டாள். அங்கே அருளப்பரோடு மரியாளும் சீடத்துவ உறவை ஏற்று நின்றாள்.

மரியாளின் ''தாய்மை – சீடத்துவம்'' கலந்த வெளிப்பாட்டினால் தாய்க்குரிய பாசத்தோடும், உரிமையோடும், சீடருக்குரிய விசுவாசத்தோடும் உரிமையோடும் அவள் வாழ்ந்து கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு தமது புது வாழ்வுத் திட்டத்தில் ஆவியானவரின் துணையோடு எவ்வாறு வாழவேண்டும், எவ்வாறு செபிக்க வேண்டும் என்று கற்பித்தாரோ அவ்வாறே, தாயாகி, சீடத்தி யாகி நின்ற எம் அன்னையும் புது வாழ்வில் கலந்து வாழ்ந்து, செபித்து எமக்கு முன்னே வழிகாட்டியாகிறாள்.

இயேசு பிறந்து, மீட்பைக் கொடுத்து விண்ணேற்றம் அடைந்தபின், கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் மிக மிக துன் புறுத்தப்பட்டனர். முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் கிறிஸ்தவ சமயம் பல இன்னல்களுக்குள்ளான போது கிறிஸ் தவ மக்கள் குகைகளில் தங்களுக்கு ஒளிப்பிடங்களை வைத்துக் கொண்டு பணியாற்றி கிறிஸ்தவ சமயத்தை வளர்த்தனர். அக் குகைகளில் குழந்தையை ஏந்திய அன்னையின் ஓவியங் கள் இன்றும் காணப்படுகின்றன.

குகை வாயிலில் அன்னையின் சிலையைப் பாதுகாப்புக் காக வைத்தும் வாழ்ந்தனர். அக்காலமுதற்கொண்டே மாதா பக்தி வரவேற்கப்பட்டிருந்தது.

கி. பி. நான்காம் நூற்றாண்டிலேயே புனிதர் அமிர்த நாதர் தமது நூல்களில் கன்னியின் கன்னிமைபற்றி எழுதி வைத்தார், அந்நூல்களை ஆராய்ந்த புனிதர் அகுஸ்தீனார் மரியாள் பாவமற்றவள் எனக்கூறி, அமல உற்பவத்தாய் என்னும் கருத்துக்களைக் கூறியிருக்கிறார். கடவுளுடைய தாய் புனிதமானவள் என்பதே அவருடைய முடிவாக இருந் தது. எனவே தேவதாய் என எண்ணப்பட வேண்டியவள் என்கிறார்.

''அருள் நிறைந்தவளே'' என அழைக்கப்பட்டதனால் அவளுடைய அருள் மானிடர் யாவருக்குமே கிடையாத அருளாக இருக்கிறது.

பேரறிஞர்கள் பலர் இம்மாதரசியை ''அற்புத வரத்தி'' எனப் புகழ்ந்துள்ளனர். கருத்தாங்கியதும், பெற்றெடுத்த தும், வளர்த்ததும் மட்டுமன்றி, அவருடைய அதிசயங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணத்திலும் உயிர்ப்பிலும் பெருமையின்றி வாழ்ந்ததுவே அற்புதச் செயலானது. பெருமை பேசிப் பெரியவள் ஆக வில்லை. தன் மகன் கடவுள்மகன் என்று கொக்கரித்துப் பறை சாற்றவுமில்லை. அடிமையின் ரூபமெடுத்து மரணம் மட்டும் தன்னைத் தாழ்த்தியவரிலேயே கருத்தும் செயலு மாயிருந்து சீடத்தியாக வாழ்ந்ததனாலேயே தேவ தாயா னாள்.

அன்னையிடம் இறையன்பு எவ்வளவு பூரணமாக இருக் கிறதோ, அதே அளவில் பிறரன்பும் இருந்ததை அவளுடன் சேர்ந்து வாழ்ந்தவர்கள் கண்டறிந்திருந்தனர். அதனால் விண்ணகம் சென்றாலும் அன்னை தெய்வலோக வரங்களை இறைவனிடமிருந்து மக்களுக்குப் பெற்றுத்தர வல்லவளாயிருக் கிறாள். அதனால் விண்ணில் எமக்காகப் பரிந்து பேசும் அன்புள்ள தாய் கன்னி மரியாளேயாகும்.

மரியாள் கடவுளுக்குத் தாயான கொடை விண்ணக மிருந்து வந்த கொடையேயாகும். கி. பி. 106 ம் ஆண்டில் வேத சாட்சியாய் மரித்த புனித இஞ்ஞசியார் ''நமது கட வுளை மரியாயின் உதரம் சுமந்தது'' என்று கூறியிருக்கிறார். அக்காலத்திலேயே மரியாளை அன்பு கொண்டிருந்தனர் என்பதை வரலாறுகள் கூறுகின்றன.

12-ம் பத்திநாதர் பாப்பரசர் 1950ல் ''மாசற்ற இறை அன்னை இவ்வுலக வாழ்வை முடித்தபின் ஆன்ம சரீரத்தோடு விண்ணக மகிமையிலே ஏற்றுக்கொள்ளப்பட்டாள்'' என்று தனது அறிக்கையை வெளிப்படுத்தினார்.

தேவதாய், பூமியில் மக்கள் நல்வாழ்வு வாழவும் இறை பக்தி பெருகவும் தரிசனை கொடுக்கலானாள் என்பதை மக்கள் ஏற்கின்றனர்.

தேவதாயின் முக்கிய தரிசனைகளும் அதனால் ஏற்பட்ட பலாபலனும் பல உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதின்மூன்றாம் நூற்றாண்டில் புதிய கிறிஸ்தவ சமயப் புரட்சியில் சமயங்கள் பல தோன்றியபோது திருச்சபை பல சேதத்துக்குள்ளாகியது. அந்நேரத்திலே புனிதர் சாமிநாதர் என்பவருக்கு தேவதாய் தோன்றி, செபத்தின் மூலமே சாத்தானின் சூழ்ச்சிகளை வெல்ல முடியும் எனக் கற்பித்தாள். அந்நேரமே செபமாலை என்னும் தியானச் செபம் அன்னையின் வசயினால் புனிதருக்குப் படிப்பிக்கப்பட்டது.

1. செபமாலைச் செபத்தில் இயேசுவின் உற்பவம் தொடக்கம் சிறுபராயச் சம்பவங்கள் தியானமாகின்றன.

2. செபமாலைச் செபத்தில் இயேசுவின் முக்கிய பாடுகள் ஐந்து தியானமாகின்றன.

3. செபமாலைச் செபத்தில் இயேசுவின் உயிர்ப்புடன் கூடிய சம்பவங்களும் தேவதாயின் மகிமைகளும் தியானமாகின்றன.

''தேவதாயே, பாவிகளாகிய எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்!'' என்பதே அதன் இறுதி வார்த்தையாகும். வான தூதர் கபிரியேல் கூறிய வாழ்த்து வார்த்தைகளும் எலிசபெத் கூறிய வாழ்த்து வார்த்தைகளும் சேர்ந்தே வாழ்த்துக்கள் ஆகின்றன. தேவதாய் வாழ்த்தப்பட வேண்டியவளேயானாள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் மக்கள் இறைவனை நினையாதவர்களாகவும், பாவம் செய்கின்றவர்களாகவும் வாழ்ந்தனர். அக் காலத்தில் தேவதாய் செபிக்கும்படி கேட்க சிறுவருக்கே காட்சியானாள். லாசலேற் என்னுமிடத்தில் இரு இடைச் சிறுவருக்குத் தரிசனையாகி, செபிக்கும்படி கேட்டுக்கொண்டாள்.

1858ல் லூர்துபதியிலே விறகு முறிக்கப்போன பிள்ளைகளுக்குத் தேவதாய் தரிசனையானாள். பெர்னதேத் கற்பாறைக் குழியிலே ஒரு அழகிய மாதைக் கண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா நீ யார்?'' என்றதற்கு உருவம் புன்னகை புரிந்ததே அன்றிப் பெயர் சொல்லவில்லை. பதினெட்டு முறை அங்கு வரும்படி தேவதாய் பெர்னதேத்தை அழைத்தாள். பாவிகளுக்காகச் செபமும் தபமும் வேண்டினாள். பங்குனி 25ல் அளித்த தரிசனையின்போது ''மாசற்ற உற்பவம் நானே'' என்று அன்னை அறிவித்தாள். அன்னை செய்த புதுமைகளைக் கண்ட பின்பும் பலர் அக் காட்சியை ஏற்க மறுத்தனர். ஆனால் விரைவில் லூர்துபதி புதுமையின் ஸ்தலமாகிவிட்டது.

இருபதாம் நூற்றாண்டிலும் தேவதாயின் தரிசனை சிறுவருக்கே கிடைத்தது. விஞ்ஞானம் பெருகவே அஞ்ஞானம் தலை தூக்கியது. முதலாம் உலக யுத்தம் மனித அநீதியின் காரணமாக உண்டானது. சண்டையின் அழிவுகள் அதிகமாயின. போத்துக்கல் நாடு யுத்தத்தில் சேராதிருந்தது. கிறிஸ்தவ மக்கள் சமாதானத்துக்காகச் செபித்தனர். அங்கேயே தேவதாய் மூன்று இடைச் சிறுவருக்குக் காட்சி கொடுத்தாள். இடிமுழக்கம் ஒன்று. ஆடுகளைச் சேர்க்க முயன்றனர். மீண்டும் இடிமுழக்கம். அங்குமிங்கும் பார்த்தனர், ஒரு மரத்தின் மேல் அழகான பெண்மணி ஒளியிலே தோன்றினாள். மாதந்தோறும் 13-ம் திகதி அச் சிறுவர்களை அங்கு வரும்படி அன்புடன் அழைத்தாள்.

லூர்துபதியிலே அவிசுவாசிகளும் அதிகார வர்க்கத்தினரும் பெர்னதேத்தை வெருட்டிப் பயமுறுத்தியது போல இச் சிறுவர்களையும் சிறுமைப்படுத்தினார்கள். சிறையிலே அடைத்தார்கள். பிள்ளைகளோ, தாம் கண்ட உண்மைகளையே சொன்னார்கள். உண்மைக்காக உயிரையும் கொடுக்கத் துணிந்தார்கள். அனேகமக்கள் மாதம் தோறும் 13ம் திகதிகளில் அங்கு கூடினர். ஐப்பசி 13ம் திகதி பெரிய அடையாளம் காட்டுவதாக அன்னை கூறினாள்.

அதன் படி அந்த நாளில் சூரியன் சுழன்று நெருப்புப் பொறிகள் பறக்க மக்கள் கண்டு பயந்தனர் ''செபமாலை மாதா நானே, தினமும் செபமாலையை தியானிக்க வேண்டும். மனிதர் தங்கள் சீவியத்தை மாற்றி மன்னிப்புப் பெற வேண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும்'' என அன்னை மொழிந்தாள். சிறுவருக்கு சில இரக சியங்களை தேவதாய் அச் சமயம் கூறியிருந்தாள். சிறுவர் களில் லூசியாவுக்கே இரகசியங்கள் கூறப்பட்டன. லூசியா பெர்னதேத்தைப் போல கடவுளின் சேவைக்குத் தன்னை ஒப்படைத்தாள். லூசியா துறவியாக நெடு நாள் சீவித் தாள். மாதாவின் தரிசனம் அவளுக்கு காலமெல்லாம் இனிய நினைவாக இருந்தது. அந்த பத்திமா பதியும் திருத் தலமாக மாறியது. மக்கள் யாத்திரை மூலம் பக்தர்களா கின்றனர். மனமாற்றம் அடைகின்றனர். இறை அன்பைத் தேடுகின்றனர்.

இறைமகன் இயேசு புவியில் வாழ்ந்தார். விண்ணகம் அடைந்தார். அவரது இரண்டாவது வருகை பற்றி அவர் திட்டமிட்டுக் கூறிவிட்டே வானகம் சென்றார். அவர் உலக முடிவில் வரும் கால எல்லைக்குள் உலக மக்கள் பாவத்தில் மூழ்கி விடாதவாறே அன்னையைக் காட்சித் தாயாக அனுப்பச் சித்தமானார்.

இறையன்பின் மிகுதியே ஆதியிலிருந்து இறை தரிச னையை மக்களுக்கு காண்பிக்கிறது. இறைவன் தானே தரி சனையாக மனித உருவில் வந்தால், கன்னி மரியாளை அனுப்ப தயங்குவாரா? மன மாற்றத்துக்கும் புது வாழ்வுக் கும் அடிக்கடி தரிசனைகள் உதவுகின்றன.

புனிதர்கள் பலருக்கு மரியன்னையும் இயேசு மகனும் பல தடவைகளில் காட்சியான வரலாறுகள் திருச்சபையில் உண்டு. இறை பக்தி இவ்வாறே வளர்ச்சியடைகின்றது. நம் இயேசு மரிய மதலேனாளுக்கு உயிர்த்த அந்த நேரத் திலேயே தனிக்காட்சி கொடுத்தாரல்லாவா? அதையெல் லாம் விசுவசிக்கும் நாம் மரியாளின் தரிசனையை விசுவசிக்க ஏன் தயங்க வேண்டும்?

திரு இருதயச் சபை ஒன்றின் துணைச் சகோதரியா யிருந்து 1923 ல் காலஞ் சென்ற சங். ஜோசப்பா மெனென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெஸ் என்னும் கன்னியாஸ்திரிக்கு இயேசு தரிசனையான போது கூறிய வாக்கியம் ஒன்று மாதாவை மகிமைப்படுத்தி நிற்கிறது. "ஒரு இளம் கன்னிகையை, மனோகரமான தேவாலய வாழ்வை விட்டு விட்டு சருவேசுவரனுக்குத் தாயாகும் படி தூண்டியதும், தேவமாதாவாக ஆவதினால்வரும் வியாகுலங்களையெல்லாம் அவள் ஏற்றுக் கொள்ளும் படி செய்ததும் அன்பல்லவா?" 1922 நவம்பர் 28.

1923 அக்டோபர் 16-ம் திகதி மாதா ஜோசப்பாவுக்குத் தரிசனையாகி சொன்னது: "நீ அனுபவிக்கும் துன்பமெல்லாம் ஆத்துமாக்களுக்காக என்பதை மறந்துபோகாதே. அவைகளால் இயேசுவுக்கு எவ்வளவு ஆறுதல் என்று பார்" என்று தேற்றினாள்.

அன்று சங். ஜோசப்பா எழுதிய குறிப்பு கூறுவது. 'திடீரென மாதா தோன்றினாள் ஆ, என்ன அழகு! என்ன சௌந்தரியம்!! அவள் என்னுடைய செபமாலையிலுள்ள சிலுவையை எடுத்து, என் நெற்றியிலே மூன்று முறை அழுத்தினாள்.''

மாதா சிலுவையால் அழுத்திய இடத்திலே சங். ஜோசப்பாவின் நெற்றியிலுள்ள முக்காட்டின் உள் துணியில் மூன்று இரத்தத் துளிகள் பட்ட கறை தோன்றியது. மறுநாள் இயேசு தரிசனையானபோது, அது தன்னுடைய இரத்தத்தின் கறை என்று கூறினார்.

இதற்குப்பின் இரண்டு முறை சங். ஜோசப்பாவின் நெற்றித் துணியில், ஆண்டவர் தமது இரத்தத்தின் துளிகள் படும்படி அற்புதம் செய்தார்.

இந்த இரண்டு நெற்றித் துணிகளையும் இன்றும் பத்திரமாக வைத்திருக்கிறார்கள். ஒன்று சங். ஜோசப்பா வசித்த பூவாத்தியா மடத்திலும் (பிரான்ஸ்) மற்றது ரோமாபுரியிலும் இருக்கிறது.

மாதா சங். ஜோசப்பாவுக்கு, பல முறை தரிசனையானாள். நெற்றித் துணிகளை மடத்து சிரேஷ்டரிடம் காட்டும்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்பட்டது. அவ்வாறே சங். ஜோசப்பா காட்டினாள். அது சேமிக்கப்பட்டது

அத்துணிகள் பற்றி மாதாகூறியதாவது. ''இவைகள் சபையின் பொக்கிஷங்களாக இருக்கட்டும். திரு இருதயத்தின் நேசத்துக்கு இந்த இரத்தக்கறைகள் அத்தாட்சி கூறும் காலம் தூரத்தில் இல்லை'' என்று தேவமாதா திருவுளம் பற்றினாள். இந்த நூற்றாண்டிலேயே இயேசுவை அன்பு கொண்ட சங். ஜோசப்பா வாழ்ந்துகொண்டிருந்து வானக வீட்டை அடைந்தாள். மிக அண்மைக் காலத்தில் இது நிகழ்ந்ததென்றால் அதையும் நாம் அலட்சியம் செய்யலாமா?

அன்னையை எம் தாயாகவும் விண்ணகத் தாயாகவும் ஏற்று, அன்னையை அன்புகொள்வோம். ஆபத்து நேரங்களிலும், மரண நேரத்திலும் அன்னை எம்மைப் பாதுகாத்து தனது மகன் இயேசுவிடம் சேர்ப்பாள்.

மாதாவே, பாவிகளாகிய எங்களுக்காக வேண்டிக் கொள்ளும். ஆமென்.

இயேசு சங். ஜோசப்பாவுக்குத் தரிசனையாகி, தன் அன்னையைப் பற்றிக் கூறிய வார்த்தைகளாவது:-

''உங்களுக்கு எனது மாதாவின் ஆதரவு அவசியம். அவள் மானிட ஜென்மமெடுத்தவள் தான்; இருந்தாலும் பரிசுத்தவதி, மனிதர்களுக்குரிய துன்ப துயரங்களுக் கெல்லாம் உள்ளானாலும் ஜீவியகாலம் முழுவதும் அற்ப குற்றமும் இல்லாமல் வாழ்ந்த அற்புத வரங்களையுடையவள்'' என்றார்.

1981-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் 15 வயதுச் சிறுமி ஐவன்காவும் 16 வயதுச் சிறுமி மிர்ஜானாவும் தேவதாயைக் காண்கின்றனர். தரிசனம் தொடர்கின்றது.

ஐரோப்பாவின் தென்கிழக்கு மூலையிலுள்ள யூகோஸ்லெவியாவிலுள்ள மெட்ஜுகோஜே கிராமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுமிகள் இருவரும் கிராமத்தின் பின்புறமுள்ள குன்றொன்றைத் தாண்டிச் செல்கையில் புன்னகை பூத்த நிலையில் இளம் பெண்ணின் பிரகாசமான உருவைக் கண்டனர்.

அடுத்தநாள் சகோதரர்கள் அறுவரும் இக்காட்சியைக் கண்டனர். குன்றின் உச்சியில் ஏறி பிரார்த்தனைகள் செய்யும்படி பணிக்கப்பட்டனர். ஏறினர். செய்தனர்.

மக்கள் கூட்டமும் தொடர்கின்றது. பொலிசாரின் விசாரணைகளும் தொடர்கின்றன.

ஐந்து ஆண்டுகள் தேவ தாயின் தரிசனம் நடைபெறுகிறது.

சமாதானம் கேட்டு நிற்கின்றாள் மரியன்னை.

ஐந்து ஆண்டுகளில் சிறுவர் வாலிபராகின்றனர். ஒவ்வொரு பிள்ளைக்கும் ஆளுக்கு பத்து இரகசியங்கள் தனித்தனியாகக் கூறப்படுகின்றன. எதிர்காலம் பற்றிய இரகசியங்களை அவர்கள் அறிகின்றனர்.

அந்த அறுவரும் இறையனுபவம் உள்ளவர்களாகின்றனர். கிராம மக்கள் அனைவரும் தத்தம் வாழ்வைத் திருத்தி அமைத்து புது வாழ்வுள் பிரவேசிக்கின்றனர்.

''உங்களைக் கடவுளிடம் ஒப்படையுங்கள்''

''சமாதானமாக வாழுங்கள்''

தற்போது தேவதாயின் இத் தரிசனை உலக மறிந்த அற்புத தரிசனையாகி விட்டது.

யூதகுல மக்களின் ஆன்ம ஈடேற்றத்துக்காக அனுப்பப்பட இருந்த மெசியாவை பிதாவாகிய தேவன் பூமிக்கு அனுப்பவும், விண்ணக உறவைப் பூரணப்படுத்தவும் மரியாளே தேவைப்பட்டாள் என்பது அவளது வரலாற்றிலிருந்து தெளிவாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாளுக்கு வணக்கம் தேவைப்படவில்லை. பிதாவாகிய தேவனுக்கே வணக்கம் தேவையானது. அவர் ஆவியாகவும் அரூபியாகவும் உள்ளவர். அவருக்கு உருவமாவது சிலையாவது கிறிஸ்தவர்கள் ஆக்கிக் கொள்ளவில்லை.

யார் யார் மானிட உருவில் பிறந்தார்களோ அவர்களுக்கே உருவம், தோற்றம், சிலை என்பன உருவாக்கினார்கள். இயேசு தேவன் மனிதாவதாரமாக உருவெடுத்து வந்த ஒரு காரணத்தினால் அவருக்கு உருவச்சிலை உண்டு. அச்சிலையில் அவர் இல்லை. படம் என்ன என்ன சாயலைக் காட்டுகிறதோ, அதேசாயலைச் சிலையும் காட்டிநிற்கிறது. படத்துக்குரிய மதிப்பே சிலைக்கும் உண்டு.

கன்னி மரியாளுக்கும் படம் சிலை என்பன ஆக்கம் செய்தனர். பக்தி, துணை என்பன காரணமாக அச்சிலையை வைத்துக் கொள்கின்றனர். கன்னி மரியாள் தெய்வமும் அல்ல. அவளின் உருவச்சிலை தெய்வச்சிலையும் அல்ல. ஒரு தேவ மகனை உலக மக்களுக்காக ஈன்று கொடுத்த ஒரு நன்றிக்கடனே கன்னி மரியாளை மகிமைப்படுத்தக் காரணமானது. கன்னி மரியாளை எம் தாயாக ஏற்பதில் விக்கினம் எதுவும் இல்லை.

நாட்டுக்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்த காந்தி மகானுக்குச் சிலை எடுக்கின்றனர் இந்தியமக்கள். அந்த நாடாகிய இந்தியாவிலும் பார்க்க பன்மடங்கு மாட்சிமை மிக்க விண்ணக நாட்டுக்கு உறவும் மீட்பும் கொடுக்கும் இறைமகனை ஈன்று உலகுக்குக் கொடுத்த கன்னித் தாயை விண்ணகத் தாயாக ஏற்க மனம் இன்னும் ஒருமைப்பாடாகாதிருக்கிறதா?

இயேசு மரித்தார், உயிர்த்தார், விண்ணேற்றம் அடைந்தார். அவர் இறைமகன்.

மரியாள் மரித்தாள்- விண்ணேற்றம் அடைந்தாள். அவள் தேவதாய். இயேசுவின் விண்ணேற்றத்தைப் பார்த்தவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவ தூதர் கூறியவை: "இயேசு எவ்வாறு வானகம் செல்லக் கண்டீர்களோ, அவ்வாறே மீண்டும் வருவார்" (அப்போஸ் 1:11)

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு எம்மை ஆயத்தம் செய்யும்படி ஏவுகிறாள் அன்னை. தரிசனைகள் மூலம் அதற்கு ஆயுத்தம் செய்கிறாள்.

இயேசு இரண்டாம் முறை பூவுலகை ஆட்சி செய்ய வருகிறார் என்கிறாள். அவருடைய வருகைக்கு எம்மைத் திடமூட்டுகிறாள், உரமூட்டுகிறாள், செப வாழ்வு வாழ்விக்கிறாள். அழுவோருக்கு ஆறுதலும், அல்லல்படுவோருக்கு தேறுதலும், நலிவுற்றோருக்கு நல்லாதரவும் அருளுகிறாள். அன்பின் தேவனை, அமைதியின் தேவனை நினைவுபடுத்துகிறாள்.

எளிய மனத்தோராய், துயரைத் தாங்குவோராய், சாந்தமுள்ளோராய், நீதியுள்ளோராய், தூய உள்ளத்தோராய், சமாதானம் செய்வோராய், நீதியின் நிமித்தம் துன்பப்படுவோராய் வாழ, மக்களைத் தயார் செய்கிறாள். மரியன்னையின் தற்காலத் தரிசனையும் பயனுள்ளதே.

சமாதானத்தின் இராக்கினியே
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாளின் மகத்துவம் பற்றிய இந்நூலை மரியன்னைக்கு நியமித்த ஆண்டிலேயே வெளிக்கொணர முடியாததற்குப் பல காரணங்கள் இருந்தன. முக்கியமாக அதை முன்னின்று உருவாக்கம் செய்ய அவ்வமயம் யாரும் முன்வரவில்லை.

இந்நூல் நூல்வடிவில் வெளிவராதோ? என்று ஏங்கிய நேரத்தில் இம் முயற்சிக்கு ஊக்கம் தந்து, இதனை உங்கள் கரங்களில் தவழச் செய்த அருட்திரு வின்சன்ற் பற்றிக் அடிகளாருக்கு எனது நன்றிகள்.

இந் நூலை அச்சேற்ற ஆசியும் அனுமதியும் வழங்கிய யாழ். ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களுக்கும், முன்னுரை தந்து, அமதி வெளியீடாக வெளிக்கொணர அனுமதித்த அமலமரித் தியாகிகள் சிரேஷ்டர் அதி. வண. லூயிஸ் பொன்னையா அவர்களுக்கும் அச்சாக்கும் சேவைக்கு யார் யார் இதில் அக்கறை எடுத்தார்களோ அவர்கள் அனைவருக்கும் எனது உளம் கனிந்த நன்றிகள்.

படகு ஒன்றைக் கட்டி, கடலிலே பாய் விரித்து ஓடவிட்டுப் பார்த்து மகிழ்வதுபோல, அமலமரித் தியாகிகள் இந்நூலினூடாக வாசகர்களின் மன மாற்றங்களைப் பார்த்து மகிழ இருக்கிறார்கள். வாசகர்களே, அன்பர்களே! வாங்கி வாசித்து, என்னுடன் சேர்ந்து அவர்களுக்கு நன்றி கூறுங்கள்!

இந்நூலை அரியாலையில் அமைந்துள்ள அமல அன்னை அன்பகச் சிறுவர் இல்லத்திற்கு எனது அன்புக் காணிக்கையாக்குகின்றேன்.

அற்புதம் இராசநாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org